# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஹு ஐப்பசிமீ : 1915-ஹு நவம்பர்மீ } பகுதி 5

## பழமொழிப் போதம்

### PROVERBS EXPLAINED

அருள்வாழ் வுதவு மமலேசன் மெய்யாக்
'குருபாதம் வைத்ததொ'ரு கொள்கை—தெரியிற்
சருவவிடை யூறுந் தவிர்க்குந் தகையே
பருவமுற மாணுக்கன் பால். (1)

'வித்தி லாமுறை மேலுமில் கீழுமில்'
நித்தி யானந்த நீள்களிப் பொன்றினால்
சுத்த மாயை யசுத்தமென் மாயையும்
ஒத்து முத்தி யுடன்றரும் பந்தமே. (2)

பம்பு மோர்தத் துவஞ்செயற் பட்டிட
இம்ப ரொன்றினொன் றேய்ந்தவை யும்முடி
யும்ப ரான்மா வுழியுண ரப்படும்
'சம்பு கூவல் சமுத்திர மெட்டுமோ'ல். (3)

என்று மாயை யினைத்தன் வயங்கொளா
நின்ற ஞானிசித் தாய நிமலனே
கன்று சிற்சட காரணனால் 'அவ
னன்றி யோரணு வும்மசை யாத'ரோ (4)

ஈசன்பால் அன்னோற் கிலாசக் கற்பமெனப்
பேசும்பல் கோடி பிரிவெண்ணில்—பூசல்
அடுக்கண்ட மாமாயை யாலவன்மா லொன்றன்
'கொடிக்குத்தன் காய்கனக்குங் கொல்' (5)

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனலீசன்
தொல்லோ னொருவன் சுதந்தரனே—யல்லால்
சிருட்டிநிதி சம்மாரச் செய்கை நியதிப்
பொருட்டிலது வேறோர் பொறி. (6)

தேடிய நவத்தர்செயலன்—நீடதி சயப்படவிறை
மாடுவது மாயை 'வலியான்—ஆடியது பம்பரம்'ரோ.

சதுர்த்தாதிசயப்பிசியாய் வதைக்காதுறு மாயையதாம்
அதற்காதியொடந்தமிலை'கதைக்கேது சமுத்திரசே'(8)

அதிகாரி குக்குடவண் டங்குடியி னம்மி
எதிராகா வாறுடைக்கு' மீசன்—நிதிமாயா
சத்தியிற்சா லஞ்சிவர் தாமுறுமிச் சாவிடய
சித்தி பெலா மாய்க்குந் தெளி. (9)

'விளையாடச் சென்ற விளையாய் முடிந்த'
நிலையாத பூரணமா மீசன்—களையா
இகலையார் தன்மைமறந் தெண்ணிலுயி ராகும்
புகீர்கோச ணாரமது போல். (10)

'மாங்காய் புளிப்பதோ வாய்புளிப்ப தோ'வுலகு
நீங்கோ மனந்தானே நிங்கு கொலோ—பாங்குற்ற
'வித்து முதலோ விருட்சமுதலோ' கருமம்
ஒத்ததுமுன் னேவுடல்முன் னே. (11)

'படங்காணச் சென்றிடத்தே கண்ணியது பேய்'தான்
தொடர்ந்தே விசித்திரமாய்த் தோன்றிப்—படர்ந்த
விடயத்திற் சிந்தை விரோதமாய்ச் சென்றேற்
றிடும்வா சனை நிகளமே. (12)

'சுணற்பன் மனைக்குருகு தானே நிகளம்
இணைத்துச் கொளும்' பிரவிர்த் திக்கோ—ணித்து
மன்னும் பலபா வனைவசத்தே சங்கற்பம் [னையோர்
துன்னிக்கன் மஞ்சேர்த் துவர். (13)

# ராக்ஷஸவருஷ கார்த்திகைமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | ஆங் | இங் | தமிழ் | வார | ராக்ஷஸவருஷ கார்த்திகைமு { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 } பசலி 1325 கோல்லம்-1091 { 1915வருஷ நவம்பர்மு டிசம்பர்மு |
|---|---|---|---|---|---|
| ரபு | 8 | 16 | 1 | செ | தச 32-56, பூரட் 46-23, வியா 1-58, ஹர் 55-57, தை 3-59, திவி 2-21, அக 28-52, விர்ச்சிகரவி 11-51, சுவா 4 புத 17-43, குன்யதிதி விஷ்ணுபதி கரிநாள் குன்யார்க்கம். |
| | 9 | 17 | 2 | புத | ஏகா 32-25, உத் 47-39, வஜ் 54-59, வணி 2-40, திவி 10-53, விர் சு ஏகாதிதி சர்வ ஏகா உத்தானைகா மழை 7-க்குள். |
| புச | 10 | 18 | 3 | வியா | துவா 33-11, ரேவ 50-10, வரித் 53-2, பவ 2-48, திவி 18-51, விசா 1 புத 30-14, கேட் 1 சுக் 23-30, சுவாசோ ம கோமத்ம பூர் க்ஷீராப்தி பூ. |
| ர | 11 | 19 | 4 | வெ | திர 35-13, அசு 53-53, விய 52-3, கௌ 4-12, ரா 14-27, அனு 1 ரவி 29-23, பிரதோ விய சிரா. [வைகுண்ட சது. |
| பு | 12 | 20 | 5 | சனி | சது 38-27, பர 58, 43, வரி 51-56, கர 6-50, திவி 19-49, அக 28-46, விசா 2 புத 36-30, பிராகஸ்தபுத 10-38. |
| ச | 13 | 21 | 6 | ஞா | ○பௌ 42-36, ✳ கார் 60-0, பரி 52-27, பத் 10-31, ரா 2-47, கேட் 2 சுக் 0-54, தக்ஷஸா ம கார் உப சர்வாலய தீபம் கார் ஸ்நா பூர் |
| ரபு | 14 | 22 | 7 | திங் | பிர 47-30, கார் 4-24, சிவ 53-30, பா 15-3, ரா 19-52, கார் பகு அனு 2 ரவி 46-55, விசா 3 புத 35-40, இஷ்டி. |
| ச | 15 | 23 | 8 | செ | துதி 52-47, ரோ 10-40, சித் 54-48, தை 20-8, திவி 26-10, கேட் 3 சுக் 34-57. [புத 34-25. |
| செபு | 16 | 24 | 9 | புத | திரு 58-1, மிரு 17-6, சா 56-0, வணி 25-24, ரா 11-34, அக 28-42, சாபாய 48-15, ஆயி 4 செ 17-0, விர்ச்சிக |
| ச | 17 | 25 | 10 | வியா | சது 60-0, திரு 23-17, சுப 58-21, பவ 29-0, ரா 27-34, கேட் 4 சுக் 52-30, சங் சது கரிநாள். |
| ரபு | 18 | 26 | 11 | வெ | சது 2-40, புன 28-51, சுப் 57-11, பா 2-40, ரா 21-51, அனு 3 ரவி 3-59, அனு 1 புத 33-30. |
| | 19 | 27 | 12 | சனி | பஞ் 6-38, பூச 33-40, பிரா 56-37, தை 6-38, தியா 0-0, மழை 3-க்குள் [58-38, சாபசுக் 48-20. |
| புகுசு | 20 | 28 | 13 | ஞா | சஷ் 9-27, ஆயி 37-22, மா 55-16, வணி 9-27 திவி 7-38, அக 28-36, அனு 2 புத 32-10, குருவக்ர நிவர்தி |
| ப | 21 | 29 | 14 | திங் | சப் 11-8, மக 39-49, வை 52-48, பவ 11-8, திவி 8-35, அனு 4 ரவி 20-42, சானாஷ்டமி வை சிரா. |
| பு | 22 | 30 | 15 | செ | அஷ் 11-27, பூர 41-1, விஷ் 49-22, கௌ 11-27, திவி 0-13, ரா 30-31, அனு 3 புத 28-0, பைரவாஷ்டமி. [டாகும். |
| ச | 23 | 1 | 16 | புத | நவ 10-32, உத்தி 41-2, வரி 45-0, கா 10-32, சே 3-1, மூல 2 சுக் 30-0, சிலவிடங்களில புசல் காற்றுமழை இதுகள் உண் |
| ரபு | 24 | 2 | 17 | வியா | தச 9-20, அஸ் 39 54, ஆயு 39-43, பத் 9-28, திவி 1-38, ரா 30-43, அக 28-30, கேட் 1 ரவி 50-22, அனு 4 புத 22-0, கரிநாள். [சர்வ ஏகா. |
| கு | 25 | 3 | 18 | வெ | ஏகா 5-18, சித் 37-52, ஸௌ 33-42, பா 5-18, சே 3-13, ரா 22-44, பூரட் 3 ரிசு குரு 35-0, |
| புசு | 26 | 4 | 19 | சனி | துவா 1-17, திர 55-10, சுவா 35-0, சோ 27-2, தை 1-17, ரா 19-45, கேட் 1 புத 15-15, மூல 3 சுக் 5-30, சனி பிரதோ. [34-2, மா சி. |
| ரசெ | 27 | 5 | 20 | ஞா | சது 51-8, விசா 31-33, அதி 19-52, பத் 23-47, ரா 12-29, கேட் 2 ரவி 53-42, விம்மசெவ் |
| புசு | 28 | 6 | 21 | திங் | ●அமா 45-25, அனு 27-43, சுக 12-22, சது 18-16, ரா 12-21, அக 28-25, கேட் 2 புத 3-30, மூல 4 சுக் 49-40, சர்வ அமா சோம அமா. [சம்பா சுவா. |
| | 29 | 7 | 22 | செ | பிர 39-35, கேட் 23-39, திரு 4-36, குல 52-10, கிம் 12-30, ரா 13-53, மார் சுத் இஷ்டி |
| பு | 30 | 8 | 23 | புத | துதி 33-46, மூல 19-33, சுண் 49-0, பா 6-40, திவி 15-49, ரா 13-36, கேட் 3 புத 2-40, சங் தரி மழை 5-க்குள். |
| ரபுசு | 1 | 9 | 24 | வியா | திரு 28-43, பூரா 15-37, விர் 41-30 தை 1-14, ரா 6-4, கேட் 3 ரவி 10-1, கேட் 4 புத 54-30, பூரா 1 சுக் 32-25, திருதியாதிதி. |
| | 2 | 10 | 25 | வெ | சது 23-7, உத்தி 12-6, துரு 35-24, பத் 23-7, திவி 21-36, அக 28-25, சதுர்திதி சது விரு நாகசதுர்த்தி சிர உப. |
| பு | 3 | 11 | 26 | சனி | பஞ் 18-36, திரு 9-8, வியா 27-46, பா 18-36, திவி 18-45, சாபபுத 49-20, திதித்வயம் நாகபஞ்சமி சஷ் உப. |
| ரசு | 4 | 12 | 27 | ஞா | சஷ் 14-51, அவி 6-52, ஹர் 21-48, தை 14-51, திவி 24-29, கேட் 4 ரவி 26-3, பூரா 2 சுக் 31-12, சப்தமிதிதி சம்பா |
| பு | 5 | 13 | 28 | திங் | சப் 12-7, சத 5-35, வஜ் 16-37, வணி 12-7, திவி 21-32, மூல 2 புத 35-40, நந்தனசப்தமி தத்தாசுவா. [சஷ் சப் விரு. |
| | 6 | 14 | 29 | செ | அஷ் 10-30, பூரட் 5-24, வரித் 12-19 பவ 10-30, ரா 1-23, அக 28-25, கோஷ்டாஷ்டமி விய சிரா, |
| ரபுசு | 7 | 15 | 30 | புத | நவ 10-5, உத்தி 6-23, விய 8-57, கௌ 10-5, ரா 9-6, சாபரவி 42-15, மூல 3 புத 43-13, பூரா 3 சுக் 11-12, விர்சிக சாப சு தசமிதிதி ஷடசீதி கல்பாதி. |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| குரு | 9விர்ச் புத 13சாப சுக் | | செ கே |
| ராகு | 20சிம் செ 26சாப புத | | |
| | ரவி சுக் | புத | |

(Month marks in the margin columns: கார்த்திகை at Tamil dates 3–6; டிசம்பர் at 28–30.)

# விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸஹு : ஐப்பசிமீ [பகுதி. 5


## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

4. வாஸனு நுட்பம்

முன்னரே வாஸனைகள் வெளிப்படைத் தொழிலாக மாறும் வழியாகிய ஸங்கல்பம், ராகத்வேஷம், நிச்சயம், சேஷ்டை என்பவைகளை விளக்கியாகிவிட்டது. இங்கு வாஸனைகள் இத்தனைவகை என்பதும், அவைகளை இப்படி ஒழுங்குபடுத்தலாம் என்பதும் நன்கு எடுத்து விளக்கப்படும்.

பொதுவாக நோக்கில், வாஸனைகள் இரண்டு விதம்: அவையாவன நல்லவை, கேட்டவை என்பவைகளே. இவைகளுள் நல்வாஸனை மூன்று விதமாகக் காணப்படும். (i) சிறப்பானவை:— வேதசாஸ்திரங்களில், செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள விஹித கர்மாக்களான ஸத்கர்மாக்களை அடிக்கடி செய்வதால் அவைகளையே மீண்டும் செய்யவேண்டும் என்று மனதில் ஏற்படும் வேகங்களுக்குத்தான் சிறப்பான நல்வாஸனைகள் என்று பெயர் (ii) தெளிவுண்டாக்குபவை, என்பவைகள் கிளம்பும்போது ஒரே அடியாகத் தொழிலாக மாறுது இடை வழிகளை நன்கு காட்டி, மெதுவாக இறங்கி, அவைகள் கெட்டவையாயின் தடுக்கவோ நல்லவையாயின் தூண்டவோ நமக்கு அவகாசங் கொடுப்பவை. இவை அடிக்கடி வாஸனு நுட்பவிசாரத்தால் ஏற்படும். (iii) அடக்கவாஸனைகள்:—பழக்கபலத்தால் தொழிலாக மாறும் வேகம் அதிகமுடைய கெட்ட வாஸனைகளைப் பழக்க பலத்தால் நிதானியாது தடுத்துவிடும் ஆற்றலைத் தருபவை. இவை அடிக்கடி கெட்ட வாஸனைகளை விடாமுயற்சியுடன் தடுத்து தொழிலாகவொட்டாது அடக்குவதால் ஏற்படும். இம்மூன்று வகை ஸுவாஸனைகளால் முறையே மனதில் ஸத்வாஸனைகள் நிறையும், நிதானம் ஏற்பட்டு துர்வாஸனைகளின் வேகம் குறையும், துர்வாஸனை தடைபட்டு அழியும்.

துர்வாஸனைகள் பொதுவாக இரண்டு வகைப்படும். (i) சிறப்பானவை: வேத சாஸ்திரங்களில் விலக்கப்பட்ட நிஷித்தகர்மாக்களைச் செய்வதாலும் விஹிதகர்மாவை செய்யாது விடுப்பதாலும், இப்படி மறுபடியும் செய்துகொண்டே இருக்கவேண்டுமென்று மனதில் ஏற்படுபவை. (ii) வேகமானவை: நுட்ப நிலையிலிருந்து தொழிலாக மாறும் வழியிலுள்ள நிலைகளைக் காட்டாது திடீரென்று நம்மைத் தொழிலில் செலுத்துபவை. இவை ஆராய்ச்சியின்றி வாஸனைகள் வழிச் செல்வதால் ஏற்படும். துர்வாஸனைகள் உண்டாகி ஓங்குவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. அவையாவன தேஹம், உலகம், சாஸ்திரம்; இவைகளை நோக்க துர்வாஸனைகள் மூன்று வகைப்படும். அவை பின் வருவன :—

(1) தேஹவாஸனை:—தேஹத்தின் ஸம்பந்தமாக உண்டாகும் கோரிக்கைகளால் ஏற்

படுபவை. தேஹத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும், அடிக்கடி குளிப்பது, வாஸனை இட்டுக்கொள்வது, பற்பல துணிகளுடுப்பது முதலியவைகளால் என்ற ஆவலும், நன்ருக உண்டு திருப்திடைய வேண்டும், பற்பல ருசிகளால் ஸுகிக்க வேண்டும், பலவகைப்பட்ட ஸ்திரீஸுகங்களைப் பெறவேண்டும்.நல்லவீட்டில் பலவகை ஸுகக் கருவிகளால் ஸுகப்படவேண்டும் என்ற ஆவலும் தேஹவாஸனையைச் சேர்ந்தவை. இதோடு முற்கூறியவைகளுக்கு எதிரிடையானவைகள் வரவேகூடாது என்ற கோரிக்கையும் இந்த வாஸனையைச் சேர்ந்ததுதான். எல்லாவற்றிற்கும் தேஹ ஸம்பந்தம் இருப்பதால், இந்தவாஸனை எல்லா ப்ராணிகளிடத்தும் பொதுவாகக்காணப்படும். மனிதனிடம் பகுத்தறிவிருப்பதால் அதை தேஹவிஷயத்தில் உபயோகப்படுத்தி இந்தவாஸனையை அவன் மிகவும்பலப்படுத்திக் கொள்ளுவன். இதனுல் மரண பயமும், உலகஸுக துக்கத்தாக்கும் மானிடர்களுக்கு அதிகமாக, இவர்களைத் தத்தளிக்கச் செய்கின்றது இந்த வாஸனை. இக்காலத்திய நாகரீகம் எல்லாம் இந்த தேக வாஸனுபலத்தை அதிகப்படுத்தி மனிதனை வரவர அதிகம் திண்டாட வைக்கும்.

(2) லோகவாஸனை: உலகத்தவரால் நன்கு மதிக்கப்படவேண்டும், அதற்குத் தகுந்த சீரும் சிறப்பும் வேண்டும், ஒருவரும் தன்னை இகழக்கூடாது என்ற பாவனு வேகத்திற்கு லோகவாஸனை என்று பெயர். இதற்கே கர்வம், இறுமாப்பு முதலிய பெயர்களும் உண்டு. இது மானிடர்களிடம்தான் சிறப்பாகக் காணப்படும்; மற்றைய ப்ராணிகளிடம் இது காணப்படாது. சில பழக்கக் கூடிய ப்ராணிகளான நாய், யானை முதலியவைகளிடம் சற்று காணப்படும். யஜமானன் ஸந்தோஷத்தை உணர்ந்து, அவனும் திருப்தி யுண்டாகுமாறு நடந்துகொள்ளும் ப்ராணிகளிடமெல்லாம் இந்த லோக வாஸனை ஒருவாறு காணப்படும்; ஆனுல் இந்த வாஸனை பலர் திருப்தியையும் மதிப்பையும் எதிர்பார்த்தல் என்ற உருவத்தில் மனிதரிடம் மாத்திரம்தான் காணப்படும். இந்த வாஸனையால் நல்ல கர்மாக்கள் நடைபெறுமாயின், அவைகளுக்கு லௌகிக காம்ய கர்மாக்களென்று பெயர். இந்த வாஸனை இருக்கும் வரையில் ஸத்கர்மாக்கள் நம்முள் வேருன்ரு. ஒருவருக்கும் தெரியாது ரஹஸ்யமாக ஸுகம் தரக்கூடிய கெட்ட கர்மாக்களைச் செய்துவிடவேண்டும் என்ற ஆவலை இந்த வாஸனை தடுத்துவிட முடியாது: சிற்சில ஸமயங்களில் அதிகமும் படுத்திவிடும். இந்த வாஸனையை புதிய நாகரீகம் திடப்படுத்துகின்றதென்று கூறவும் வேண்டுமா?

(3) சாஸ்திர வாஸனை:— மதவிஷயம் நீங்கலான லௌகிகவிஷயக்கல்விகளையெல்லாம் கற்றுவிடவேண்டும், அவைகளில் தெளிந்துவிடவேண்டும், அவைகளின்படி நடந்துவிடவேண்டுமென்ற பேராவலுக்கே சாஸ்திரவாஸனை என்று பெயர். இது படித்தவர்களுள் தான் காணப்படும். இது ஒருவனை எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாக இருக்கச் செய்யும்: ஓயாது, வாணிபம் கைத்தொழில் முதலியவைகளில் முயன்று லாபம் கைவரத் திண்டாடும்படி செய்யும். இந்த வாஸனையின் வாய்ப்பட்டுத் தத்தளிப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 24 மணிநேரம் போதாது என்றே தோற்றும்; அவஸரம் அதிகமாகிவிடும்; நாள் போகிறது, ஆயுஸ் குறைகிறது, வைதிக விஷய முயற்சி என்று ஒன்றுள்ளது என்ற உணர்வுகளே இரா.

இக்காலத்து நாகரீகத்தில் இவ்வாஸனை தலை சுற்றியாடுவதுபோல எதுவும் ஆடுவதில்லை. இந்த வாஸனை மனிதனை அவன் எடுத்துக்கொள்ளும் சாஸ்திரத்திற்கு அடிமையாக்கிவிடும்: ஸ்வப்நம்கூட அதைப் பற்றியே உண்டாகும்படிச் செய்துவிடும்.

பொதுவாக இம்மூன்று துர்வாஸனைகளையும், இக்காலத்திய நாகரீகம் தன் புதிய ஏற்பாடுகள், ப்ரகிருதி சாஸ்திரப் புதிய அமைப்புகள், விஸ்தார வ்யாபாரங்கள் இவைகளால், தலைவிரி கோலமாக ஆடும்படிச் செய்துவிடும். இந்த மூன்றுவாஸனைகள் இளமையில் கல்வி கற்றுத் தேறுவதற்கும், நல்வழிப் பழக்கத் தொடக்கத்திற்கும் சற்று உபயோகமுடையவையாயினும், வயது வந்து, வாழ்க்கையில் ஒருதொழிலில் அமர்ந்தபின்னர் இவைகள் திடப்பட இடங்கொடுக்கலாகாது. இவை எல்லாம் நமக்கும் நமது பந்துக்களுக்கும் வயிறு வளர்க்க மாத்திரம்தான் உபயோகமானவை; மேல் மோக்ஷ வழியில் இவை பயன்படாது போவதோடுங்கூட, அநேகமாகப் பெரும் தடைகளாக வந்து தாக்கும் என்பதை நன்குணர்ந்து இந்த வாஸனைகளை வயிறு வளர்க்க மாத்திரம் உபயோகப்படுத்த வேண்டும், மேல் உள்ள நமது ஸந்மார்க்க ப்ரவிருத்தியில் இவைகள் குறுக்கிடாது தடுத்துவிடவேண்டும் புத்திமான்.

இப்படிப்பட்ட வாஸனைகள் பொதுவாகப் பிறவி, காலம், தேசம் இவைகளால் தடைபட்டு உள்ளூரவே நம்முள் மறைந்து கிடக்கலாம். தகுந்த தருணங்களில் வெளி விஷயப் பொருத்தத்தால் ஞாபகத்தைப் போல வெளிப்பட்டாலும் படலாம். ஒரு ஊரில் ராமன் என்ற நமது தோழனை வெகு காலத்திற்கு முன்பு நாம் கண்டிருக்கலாம், அவனைப்பற்றி நமது மனதில் ஒருவித எண்ணமும் இல்லாதிருக்கலாம், திடீரென்று அவனைப்போன்ற நடையுடைபாவனை உடையவனைப் பின்னிருந்து பார்க்கும்படி நேர்ந்தால், இந்த நடை ஒற்றுமை ராமன் விஷயத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம்: ஒற்றுமை மிகநெருக்கமாக இருப்பின் ‘அடே ராமா’ என்று கூப்பிடும்படியும் ஆகிவிடும். அவன் திரும்பிப் பார்த்ததும் வேறு ஒருவன் என்று கண்டவுடன் ‘நான் உம்மை வெகு காலத்திற்கு முன்பு பார்த்த தோழன் ராமன் என்று எண்ணினேன் நடை ஒற்றுமையால்; மன்னிக்கவேண்டும்’ என்று அசட்டுச் சிரிப்புச் சிரிக்கவேண்டி வரும். இதுபோல வெளி விஷய ஒற்றுமையால் மனதில் புதைந்துகிடக்கும் வாஸனை திடீரென்று மிகுந்த பலத்துடன் வெளி வரலாம். இந்த விஷயம், யோகஸூத்ரச் சுருக்கம் கைவல்யபாதத்தில் விளக்கியுள்ளது. எந்த ஸமயத்தில் எந்த வாஸனை முளைந்து நம்மைக் கழுதையாக்கிவிடுமோ என்று ஜாக்கிரதையாய், ஈச்வர பக்தியால் தமது மனதைப் பரிசோதித்து, பாபங்களைக்கண்டு, கர்ம சிரத்தையால் தகுந்த ப்ராயச்சித்தங்களை அனுஷ்டித்துக்கொண்டு, மிகுந்த அடக்கத்துடனிருப்பர் மஹருஷிகள் போன்றவர்.

இனி இந்த வாஸனைகளை அடக்கி ஒழுங்குபடுத்தும் வகைகளைப்பற்றி ஆராய்வோம். ஹேது, பலம், ஆச்ரயம், ஆலம்பனம் ஆகிய இந்நான்குகளும் ஓங்க, வாஸனைகள் ஓங்கும்; குறையக்குறையும் என்று பதஞ்சலி பகவான் இவ்விஷயத்தில் பொதுப்படையாகக் கூறியுள்ளார். இவைகளுள் ஹேது என்பது எல்லாவாஸனைகளுக்கும் வேரான அவித்தை என்பதே. இதையும் இதன்

நிழ்ப்படிகளான நான்கும் ஆகிய க்லேசங்கள் ஐந்தும் முன்னரே யோக ஸூத்ரச் சுருக்கம் ஸாதனபாதத்தில் விளக்கியாகி விட்டது. இவைதாம் கர்மாவுக்கும், அதனால் வாஸனைப் பதிவு ஏற்படுவதற்கும் முக்ய காரணம் இவைகளின் வலிவைக் குறைத்தல் வாஸனையை அடக்குவதில் ஒருவிதம்: பலம் என்பது ஸங்கல்பம், எண்ணவேகம் இவைகளைத் தடிக்கவொட்டாது தடுப்பது. இரண்டாவது விதம்: ஆச்ரயம் என்பது மனதின் கலக்கம் சஞ்சலமாகிய இவைகளே. இவைகளை கர்மானுஷ்டானம் சாஸ்திர விசாரங்களால் அடக்கி அழித்து முறையே வாஸனைக்கு ஆதாரமாகவுள்ள தாமஸ ராஜஸக்கலப்பை வேறறுத்தலாம். இது மூன்றுவது விதம் ஆலம்பனம்:—வெளிவிஷயங்கள் இவைகளைக் கூடுமானவரையில் விட்டு விலகி இவைகளின் வாஸனை உண்டாக்கும் திறனைக் குறைப்பதால் வாஸனைகள் வலிவைக் குறைப்பது நான்காவது விதம். இவ்வாறு நான்கு விதமாக துர்வாஸனைகளின் வலிவைக் குறைத்துக் கடைத்தேறலாம். ஆனல் சூத்ரரும் பிரஹ்மசாரிகளும், நான்காவது விதத்திலும், வைச்யரும் கிருஹஸ்தரும் கடைசி இரண்டு வழிகளிலும், வானப்ரஸ்தரும் க்ஷத்ரியரும் கடைசி மூன்று விதத்திலும், ப்ராஹ்மணரும், ஸந்யாஸியும் நான்கு வழிகளிலும் வாஸனைகளை அடக்க முயலலாம். ஜாதிவர்ணச்ரம தர்மமே இந்த வாஸனை அடக்கும் ஆற்றலுடைமையைப் பொறுத்தது. ஸந்யாஸியிடம்தான் இந்த நான்கு வகை வாஸனைகளை யடக்க வழியும் பூர்ணமாகக் காணப்படும்: மற்றவர்களிடம் போகப்போக ஒருவாறு ஏற்றமாகத்தான் காணப்படும். ஆனல் எல்லோருக்கும் பொதுவாக ஆச்ரயநிலையான ராகத்வேஷம், ஆலம்பனம் நிலையான விஷயம் என்ற வாஸனை இறக்க நிலைகளே வாஸனையை முதலில் ஸரிவரத் தகைவதற்குத் தகுந்த இடம்: அதுவும் ஸ்வ வர்ணச்ரம தர்மானுஷ்டானத்தால் தான் முடியுமென்று பகவான், கீதை III-ம் அத்யாயம் பின்வரும் 33-35 ச்லோகங்களில் விளக்குகிறார்:—

அறிவுடையோ னேனும் அவனியற்கைக் கொத்த
நெறியே நடந்திடுவன் நீடும்-திறலுடையாய்
பல்லுயிரும் அவ்வவற்றின் பண்பினையே பற்றியுறும்
வெல்லும்வகை யிற்றடுத்தல் வீண். (33)

இந்தியங்க ளின்விடயத் தென்றும் இயல்விருப்பும்
புத்திவிழை யாவெறுப்பும் புக்குளவால்—சிந்தித்
தவைக்குவசம் ஆகாமல் ஆர்க்கிடுக அன்ன
தவிர்க்கரிய சத்துருவென் றுய்ந்து. (34)

நன்கொழுகும் மற்றோர் அறந்தன்னில் நற்குணமில்
தன்கடமை யாமறனே சாற்றின்மேல்—புன்குணமாந்
தன்னறத்திற் சாதல் நலமாகும் சார்ந்திடுமே
இன்னல்பிறர் தம்மறத்தால் ஈங்கு (35)

இவைகளுள், முதல் ச்லோகத்திலுள்ள ப்ரகிருதி என்பதற்கு வாஸனை என்பது தான் பொருள். அதை நேரிடத்தடுக்கமுடியாது வெகு நுட்பமாதலால்,சேஷ்டை நிலையிலோ வெகு வேகத்துட னிருப்பதாலும் தடுக்க முடியாது. ஆகவே ஸங்கல்ப, ராகத்வேஷ நிலையில்தான் அதை அடக்கலாம். இவைகளில் ஸ்வதர்மானுஷ்டானத்தால் தான் தொழிற்படமுடியும். இவை இல்லாது வேறுவழியேயில்லை வாஸனைகளைத் தகைய. ஆகவே துர்வாஸனைகளை அதிகப்படுத்தும் விஷயங்களைவிட்டு ஒதுங்க, ராகத்வேஷாதி உள் வாஸனை இறக்க நிலைகள் வெளியாகும்; அவ்விடங்களிலெல்லாம் தடைகளை அமைத்துப் பின்னர் வாஸனைகளை வெல்ல ஸரிவரத் தொடங்கலாம். இப்படியன்றி விஷயங்களுள் வலிய இருந்துகொண்டே வாஸனைகளைத் தடுத்துவிடலாம் என்று

எண்ணுவது அழுக்குடைய அசையும் கண்ணாடியினால் நெற்றிக்குறி யிட்டுவிடலாம் என்பது போன்றதுதானாகும்.

இனி தேஹவாஸனையை அடக்குவதற்கு, தேஹத்தின் அழியும் தன்மை, வெறுப்புண்டாக்கும் தன்மை, ஓயா அசுத்தத் தன்மை இவைகளை அடிக்கடி சிந்தித்து, மோக்ஷவழியில் அது தடையாக இருக்காமல், தேஹவாஸனை ஒழுங்காகக் குறைய சாஸ்திரங்களில் காணப்பட்டுள்ள ஆசார விதிகள்படி நடப்பதே முக்கியவழி. இவை இரண்டுள் ஏதாவது ஒன்றுமாத்திரம் இருந்தால் போதாது. முன்னது மாத்திரமிருந்தால், அழிவதற்குமுன் கிடைக்கக்கூடிய ஸுகத்தை விடலாகாது, தேஹம் தாதுக்கள் பிரிந்தால் வெறுப்புண்டாக்குவதாயினும் சேர்ந்து அழகாக அமைந்துவிட்டால் ஸுகம்தானே உண்டாக்கும், தேஹ அசுத்தியே தேஹஸுக காலத்தில் இராது என்ற விஷயப்பற்று எண்ணங்கள் கழலாது. இதற்கு உதாரணம் இக்காலத்திய டாக்டர் என்ற வைத்யர்களே. இவர்களுக்கு தேஹதத்துவ விஷயம் நன்கு விளங்கியுள்ளது, ஆயினும் ஆசாரப்பற்று இல்லாததால் இவர்களிடம் தேஹ விஷயப்பற்றும் உலக விஷயப்பற்றும் மற்றவர்களை விட அதிகமாகத்தான் உள்ளன. ஆசாரப்பற்று மாத்திரம் இருப்பவர்களுக்கு தேஹ விஷய அபிமானமும், அதை எப்பொழுதும் வெகு சுத்தமாக வைக்கவேண்டுமென்ற நினைவும் காணப்படும். இதற்கு உதாரணம் ஆசாரமான கிழவர்கள். இவர்களுக்கு மரணத்திலிருக்கும் பயம்போல வேறொருவருக்கும் இராது; இவர்களுக்கு முற்கூறிய பகுத்தறிவு சற்று வந்துவிட்டால் இவர் மஹா ஞானிகளாவர். முன்னவர்கள் நிலை இப்படிப்பட்டதேயல்ல. ஆதலால் தேஹ விஷய ஆராய்ச்சியும், ஆசாரமுமே தேஹ வாஸனையை நன்றாக அடக்கி அழித்துவிடும். லோக வாஸனையை நீக்குவதற்கு 'எல்லோரையும் திருப்திப் படுத்தமுடியாது. லோகம் பலவகைப்பட்டுள்ளது. ராமர் ஸீதை முதலிய பெரியோர்களும் ஊர் வாயில் அகப்பட்டுத் திண்டாட வில்லையா? அவர்களையும் உலகம் விடவில்லையே என்ற இவை போன்ற ஆராய்ச்சியும், இதன்படி உலக அபிப்ராயங்களை ஒரு பொருட்டாக மதியாமலே நல் வழிகளில் விடாது பழகுவதே, தகுந்த வழிகள். 'கல்லாதது கடலளவு, கற்றது கையளவு, ஆயுள் பறக்கின்றது, தடைகளுக்கோ கணக்கில்லை, முக்ய விஷயங்களைக் கடைப்பிடித்து நட; லௌகிகசாஸ்திரங்கள் எல்லாம் வயிற்றுப் பிழைப்பிற்கே: வெறும் சாஸ்திர உணர்வால் மாத்திரம் மோக்ஷம் வருமாயின், எல்லா விஷயங்களின் உணர்வை அடக்கியுள்ள புத்தகசாலைகளுக்கல்லவா மோக்ஷம் முதலில் வரவேண்டும்' என்ற இவைபோன்ற விஷய ஆராய்ச்சியும், வைதிக உணர்வு ஒழுக்கமுமே, சாஸ்திர வாஸனையை நீக்கும் வழி.

துர்வாஸனைகளை இவ்வாறு விடாமுயற்சியால் அடக்குதல் மாத்திரம் போதாது மோக்ஷ வழியில் நடக்க. இதனால் துர்வாஸனைகளை அடக்கும் எதிர்மறை வாஸனையான ஸுவாஸனை மாத்திரம்படிந்துவருமேயொழிய, மற்றைய ஸுவாஸனைகள் உண்டாக இடம் இல்லை, இந்த எதிர் மறை வாஸனை திடப்படவும் இடம் இல்லை. இதற்கு நேரான ஸுவாஸனைப் பழக்கம் வேண்டும். இதற்கு முக்யவழிகள் நல்லசுத்த ஆகாரம், நல்லோரிணக்கம், சாஸ்திரீய நல்வழி நடத்தல், விலக்கிய வழிகளிலிருந்து விலகல்

ஆகிய இவைகளே. இவைகளில் எதையாவது ஒன்றைக்கூட, தெறிவருபவன் அஜாக்ரதையால் கைசோரவிடலாகாது. நீண்ட நூலை உருண்டையாகச் சுற்றுபவன் கவனக்குறைவால் அதைக்கைசோர விடுவானுயின் பல சுற்றுக்கள் கழன்று அவன் எப்படித் தத்தளிப்பானே, அப்படியே அஜாக்ரதையான அப்யாஸி நல்வாஸனைப் பழக்க வழிகளில் எதையாவது ஒன்றைக் கைசோர்ந்துவிட்டால் பலநாள் நற்பழக்க பலனை இழந்துதிண்டாடுவன், பழைய நிலைக்குவந்துசேர மிகக் கஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

இவ்வாறு துர்வாஸனைகளை அடக்கி, ஸுவாஸனை பழக்கத்தால் அழித்து வந்தால் மனம் ஸுவாஸனைகளால் நிறைந்து கொண்டுவரும். இவைகளை நீக்கவோ நம் முயற்சி வேண்டியதில்லை. சாஸ்திர ஆராய்ச்சியால் ஏற்பட்டு, ஈச்வரபக்தியால் திடப்பட்டுக்கொண்டு வரும் உண்மை ஞானம் சுத்தமனதில் நன்ருகதிடப்படுங்கால் முக்தி கைகூடும். அத்தருணம் தூங்குபவன் கை ஸுவாஸனைப் புஷ்பம்போல் ஸுவாஸனைகள் அவன் மனதைவிட்டுக் கழன்று நிற்கும். தேஹம் நழுவும் வரையில் உலகஉணர்விற்குத் திருப்பாமலே முக்தன் இருந்துவிடுவானுயின் ஸுவாஸனைகள் அவனைவிட்டு நழுவியே போய்விடும்; வாஸனுதிதனுகியே நிற்பன். உலக உணர்வில் முக்திநிலை மாருதிருந்து அடிக்கடி ஸமாதியுள் போவதாக இருக்கும் முக்தனுக்கு. வ்யவஹார காலத்தில் ஸுவாஸனைச்சார்வும், ஸமாதியில் வாஸனுத்தாக்கேயற்ற நிலைதானிருக்கும். அவனுக்குக் கெட்டவாஸனை நெருக்கமே இராது, முன்னே அது நீங்கிவிட்டபடியால்; ஸுவாஸனைத்தாக்கும் இராது, அவனிடம் அது அறநழுவிப் பின்னர் அவன் முயற்சியன்றி அவன் இயற்கையாகவே அவனிடம் அமைந்துவிட்டபடியால். ஆகவே இந்த முக்தன் உலகத்தவர்திருஷ்டியில் ஸுவாஸனைக்கும் வாஸனுதிதநிலைக்கும் இடையேமாறிக்கொண்டிருப்பதுபோலக் காணப்படுவன். இது அவன் பிரயத்னமன்றியே நடந்து வருவதால் அவன் திருஷ்டியில் எப்பொழுதும் அவன் வாஸனுதித நிலையிலேயே இருப்பன். ஈசாஞ்ஞையான சாஸ்திரீய வழிகளில் நம் முயற்சிகளை முன்னிட்டு வாஸனைகளை ஒழுங்குபடுத்துவது நிர்வாஸனு நிலையாகிய மோக்ஷத்தை அடைவதற்கே. வாஸனைகளை ஒழுங்குபடுத்த முயலுங்கால், கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்ற பழமொழி நமது ஞாபகத்திற்குவர, வாஸனைகளை அடக்குவது முடியாது, என்ற சோர்வு வந்துவிடலாம். இதையே திடப்படுத்துவதுபோல மஹாபாரதம் ஸபாபர்வத்தில் 'பொன்மான்உலகில்இல்லை, ராமர் அதுபோன்ற தோற்றத்தில் மயங்கி விரும்பினர்: பெரும்பாலும் சீக்கிரத்தில் ஆபத்துவருபவருக்கு புத்திமாருட்டம் ஏற்படும்' என்ற வாக்கியம் காணப்படும். ஆனல் வாஸனையின் காரியமாகிய விருப்பத்தின் வேகத்திற்கும், மேல்வரும் கேட்டிற்கும் சிறுபான்மை ஒற்றுமையில்லாமலும் இருக்கலாமென்பதை பெரும்பாலும் என்றசொல் நன்குணர்த்தி; இந்தப் பொருத்தம் காரிய காரணப் பொருத்தமல்ல, சகுனம்போன்ற வெறும் அறிகுறிப் பொருத்தம் என்று விளக்கிவிடுகிறது. அதாவது மனதில் எழும் கெட்ட வாஸனைகளால் மேல்கேடு வரலாம் என்று ஊஹிக்கலாமாயினும், அவைகளின்படி நடப்பதையோ, நடவாமையையோ அது பொருத்ததல்ல. ஆகவே வாஸனை தொழிற்படுவதால் வெகு நாள் கழித்து வரக்கூடிய கேட்டைத் தடுக்கவே எப்பொழுதும் நாம் முயலவேண்டும், வாஸனைகளை அடக்கச் செய்யும் முயற்சிகளில், என்பதை மறவாதிருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட வாஸனுதுட்ப உணர்வும் கர்மவாஸனு விவேகமும் இல்லாவிடில் மோக்ஷ ஸோபாந ஒழுக்கத்திற்கு முக்யமாகிய ஈச்வர உணர்வு நன்கு ஏற்படாது. இதனுல் குறிக்கப்படும் ஈச்வர உணர்வை மேல் எடுத்து விவரிப்போம்.

# ஸர்பிரோஸ்ஷா மேடா, கே. ஸி ஐ. இ.

## SIR P. M. MEHTA, K. C. I. E.

*“முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிற்
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவது” [வொரு*

பட்டினத்தார் பாடியதானாலும் பழக்கத்தில் யாவருமறிந்ததே. இந்தியநாட்டிற் கிவ்வருஷம் அது நன்றாக வெளிப்படை. ஸ்ரீமான் கோகலே, ஸர் ஹென்றி காட்டன், இவர் ஒருவர்பின் ஒருவராக இவ்வுலக வாழ்க்கையைத் துறந்த துக்கமேகம் இவ்விந்திய நாட்டைக் கவிந்து கலையாதிருக்க, மேகமில்லாவிடத்தில் இடியிடித்தாற்போல, இம்மாதம் 6-வது நாள், வெள்ளிக்கிழமை மாலைக்குள்ளாக, “ஆ என்றால் அழுதபிள்ளை வாய்மூடும்” என்னும்படி “பம்பாய் நகரத்து ‘முடியா முடிமன்னன்’ ” என எவராலும் பாராட்டப்பட்டுத், தன் மொழிக்கெதிரில்லை என்று நிகரில்லாமல் வாழ்ந்த ஸர் பிரோஸ்ஷா மேடா அவர்கள் தேகபந்த மொழித்தார் என்று ஸமாசாரமெட்டியது, அகோ! பெருங்கஷ்டம். “இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லை” என்று தாயுமானவர் சொன்னது மனத்திற்கு எவ்வளவுதான் சாந்தியுண்டாக்கக் கூடியதானாலும், துக்கத்தால் உண்டாகும் மயக்கத்தையும், படபடப்பையும், அதைர்யத்தையும் நீக்கக்கூடியதென்று பொது ஜனங்களால் சொல்லமுடியாது. அந்தக் கம்பீரத்தோற்றமும், கர்ஜித்தமொழியும், அழகிய உருவும், தொழச்செயும் நடையும், முட்கும், முகமனும், மட்டிலாத் திரமும், யாரையும் வணங்கச்செய்யும் விரச்செயலும், அழியாத ஒழுக்கமும் பழியாதவழியும்—இவற்றை எல்லாம் ஒருங்கே யமன் சூறையாடிக்கொள்ளையிடுதல் தகுமா? ஏதோ சிலநாட்களாக மேடா அவர்களுக்குத் தேகஸௌக்கியக் குறைவென்றிருந்தபோதிலும், நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்குமென்றபடி நடக்குமென்று யாரும்நினைக்கவில்லை. “எல்லா மெனையாளு மீசன்செயல்.”

மேடாவின் தேகவியோகம், இந்நாட்டைக் கவிந்த துக்கமேகத்தைக் கடுமிருளாகச்செய்திருக்கிறது. ஜனஸமூஹத்தின் மனத்தை மயக்கி, அது துன்பமாரி பெய்வது நாம் சொல்லவேண்டியதில்லை. இந்தச் சமயத்தில் மேடா அவர்கள் தேஹம் நழுவியது நமக்குப் பரமதுரதிஷ்டம். இந்தியநாட்டிற்கு விசிஷ்ட ஸ்வயாதிபத்யவிஷயத்தைப்பற்றி கனம் ஸர் வெட்டர்பர்ன், ஸர் கிருஷ்ண குப்தா முதலிய பிரமுகர்கள் கவலை செலுத்திக் கொண்டிருக்க நெடுநாளாக ஜனசுகத்திற்கு ஜீவிய முழுதுமொழித்து அனுபவம்பெற்ற இந்திய பிரமுகர்கள் ஒருவர்பின் ஒருவராய் உலகைவிட்டு ஒழிவதானால் இவ்விந்திய நாடு தாங்குமென்று சொல்லமுடியாது. காலஞ் செல்லச் செல்ல அது தானே தெரியும்.

நிற்க. மேடா பிறவியால் பழைய பாரஸீக வம்சத்தினர். நாடிழந்த காலத்துத் தமக்கு நிழல்தந்த நாட்டிற்குக் கைம்மாறாகத் தம் ஜாதியார்க்காகத் தாமொருவராகவே முழுதுமுழைத்தவர். அழகிலுத்தம புருஷர்; ஸிம்ஹம்போல் கம்பீரத்தோற்ற முடையவர். அவரது நெடிய உருவமும் விசாலபுருவமும் யாரையும் தம் வயப்படுத்தும் கண்களும் இன்றைக்கெல்லாம் பார்க்கத்தக்கன. மங்கள வடிவத்துடன் உயர்ந்த படிப்பும் போக்கும் அவரிடம் குடிகொண்டன. சிறுவயதிலேயே படிப்பில் பிரமுகராய் விளங்கி 1864-ம் ௵ பி.ஏ. பட்டம் பெற்று, மற்றும் ஆறுமாதத்திற்குள் வெகுகௌரவமாக எம்.ஏ பரீட்சையில் தேறினர். அவர் படித்த எல்பின்ஸ்டன் காலேஜ் தலைவராகிய ஸர் அலக்ஸாண்டர் க்ராண்ட்* துரையின் விருப்பின்படி சீமை சென்று சட்டப் பரீக்ஷையில் தேறி 1868-ம் ௵ பாரிஸ்டராக பம்பாய் ஹைகோர்ட்டில் அப்யஸிக்க ஆரம்பித்தார். அவரிடம் லக்ஷ்மி கடாட்சம் எளிதில் குடிகொண்டது.

அவ்வாறு நியாயவாதியாக விளங்கிய சின்னாளிலேயே இவர் பொதுஜன விஷயங்களில் தலையிடவாரம்பித்தார். பம்பாய் நகரத்தின்மேல் முதல் முதல் இவர்கவனம் சென்றது. அந்நகரத்து முனிஸிபல் வியவஹா

* இவர் படிப்பில் வெகு நிபுணர்; கிரீக் பாஷையில் நல்ல தேர்ச்சியடைந்தவர்; கிழக்கத்தியபாஷைகளை விருத்திசெய்ய முயன்றவர். இங்கிருந்து சீமைக்குச் சென்றதும், எடின்பரோ நகரத்து ஸர்வகலாசாலைக்கு அத்யக்ஷகராக விளங்கினவர்.

ரங்களைச்சரிப்படுத்தமுயன்றார். அந்நாள் பம்
பாய் நகரம் வியாதியாலும் மரணத்தாலும்
அழிவடைந்து வருவதைத் தடுக்க, மேடா
அவர்கள் முனிஸிபல் சீர்திருத்தத்தைப்
பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்து, முனிஸி
பாலிடியின் அதிகாரத்தை நடத்திய ஆலோ
சனை ஸபையின் கோளாறுகளைப் பிரகாசப்
படுத்தினார்; அதை எவ்வாறு தடுப்பதென்
றும் வியவஹரித்தார். அவ்வுபந்நியாஸத்
தோடிராமல், பம்பாய் கவர்ன்மெண்டில்
முனிஸிபல் சட்டம் ஒன்றும் நிறைவேறும்
படி உழைத்துப் பம்பாய் முனிஸிபல் கார்ப்
போரேஷனுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட
அக்ராஸனாதிபதி தலைமைவஹிக்கும்படிஉத்
தரவு வரும்படி செய்தார். அவரது இயக்
கத்தால் கவர்ன்மெண்டால் அங்கிகரிக்கப்ப
ட்ட பம்பாய் முனிஸிபல் ஆக்ட் இந்தியாவுள்
அமுலுள் இருக்கும் அம்மாதிரியான சட்ட
ங்களில் எல்லாவற்றிலுஞ் சிறந்தது. இவ்
வாறு பம்பாய் முனிசிபாலிடியில் கவனம்
கொண்டவர் அதன் தலைவராக இருந்ததல்
லாமல், கடைசிவரையிலும் அத்துடன்
தமது வாழ்க்கையை ஐக்கியப்படுத்தியிருந்
தனர். நகராபிமானம் அவரைப்போல் யாரு
க்குத்தான் உண்டு?

இவரது பிரபல சக்தியைக்கண்டு பம்பாய்
கவர்னர் இவரை 1886-ம் வருஷம் பம்பாய்ச்
சட்டசபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெ
டுத்தனர். பலகாலுமதில் உழைத்தவர் பின்
இந்திய ராஜப்பிரதிநிதியின் சட்ட ஸபையின்
அங்கத்தினராகவிருந்து அங்கு ஸ்ரீமான்
கோகலேக்கு இடம் கொடுக்கும்படி விலகி
னார். தற்புகழைப் பிறர் பங்கிடக்கொடுத்த
குணம் இவ் உலகத்தில் எத்துணைபேர்க்
குண்டு?

மேடா அவர்கள் தேசத் தொண்டில்
குறைந்தவர் அல்லர். முதலில் டேலாங், புட்
ருட்டீன் டியாப்ஜீ இவர்களிருவருடன் கல
ந்து பம்பாய் இராஜதானிச் சபையை ஏற்ப
டுத்தினார். பின் மிக்க அமைதியைக் குறை
த்த இல்பார்ட் பில் விஷயத்தில் பிரபலமாக
உழைத்து, அத்யத்புதமாகத் தமது மதிநு
கத்தையும் ஆழ்ந்த யோசனையையும் வெளி
யிட்டார்.

லார்ட் லிட்டன் கவர்னர் ஜனரலாக இரு
ந்த காலத்தில் தேசியப் பத்திரிகைகளைப்பற்
றிய சட்டத்தை இந்திய கவர்ன்மெண்டார்
பிரேரேபித்தபோது இவர் அச்சட்டத்தால்
வரக்கூடிய கஷ்டத்தை மிகப் பிரகாசமாக
எடுத்துப்பேசினார். அம்மொழிகள் தற்கா
லத்திய இந்திய நிலைக்கும் பொருந்துமாறு
இருப்பன அவரது தூரதிருஷ்டி நோக்கத்
தையே காட்டும். பிறகு, ரிப்பன் பிரபு கவர்
னர் ஜனரலாக வந்ததும் இவரது உயர்ந்த
பாவங்கள் மேலும் பிரகாசமடைந்தன.
முனிஸிபல் வியவஹாரங்களுக்கு ஆதாரங்
கள் ஏற்படுத்திய இவர்க்கு இந்திய நாடு முழு
தும் நன்மை பாராட்டாதிருக்க முடியாது.

1884ம் வருஷம், முனிஸிபல் கவர்ன்
மெண்டிற்கு வேரூன்றிய கனம்ரிப்பன் பிரபு
அவர்களுக்கு அவர் தமது தேசத்திற்குப்
போகும்போது தக்க மரியாதை செய்ய
இணையில்லா ஏற்பாடுகள் செய்து கீர்த்தி
பெற்றார். மேடா பம்பாய் ஸர்வகலாசங்
கத்தி லுழைத்தது மவ்விதமே பெருமை
வாய்ந்தது.

மேலும் ஹ்யூம் முதலியோர் இந்திய
ஜாதிய மஹாநாடு என்னும் இந்தியன் நாஷ
னல் காங்கிரஸ் பெருஞ்சபைக் குயிர்கொடுத்
தபோது இவரும் உடன் கலந்துழைத்து,
1890 ம்வருஷம் அதன் அக்ராசநாதிபத்யம்
வஹிக்கும் பெருமையை அடைந்தார். அன்
றுமுதல் இச்சபையை நடத்தும் முக்கியப்
பொறுப்பை வஹித்துத் தன் வழியை விடா
மல் அச்சபை இன்றைவரை இருக்கும் நிலை
மைக் காதாரமாய் இருந்தார். மேடா அவர்
கள் ஸ்வதேசி இயக்கத்தில் உழைக்கவில்லை
யெனப் பலபேர் நினைப்பார்கள். அவர் ஸ்வ
தேசி என்னுமியக்கம் வருமுன்னமே அவ்
வியக்கத்தின் உண்மையை வழக்கத்தில்
கொண்டுவந்தார். தமது இளமையிலேயே
ஜஸ்டிஸ் டெலாங்குடன் கூடி ஒரு ஸோப்
செய்யும் சாலை ஏற்படுத்திப் போட்டபணத்
தை எல்லாம் பாழாக்கினார். பம்பாய் விக்
டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டை
ஏற்படுத்தியவர்களில் அவர் ஒருவர். அவர்
ஸ்வதேசியபிமானங் கொண்டாலும், அவ்
வியக்கத்தினால் பிறரால் சொல்லப்பட்டபடி
நமது நாட்டுத்தொழில் விருத்தியாலே

175



எல்லா ஸுகங்களும் தாமேவந்து சேருமென்ற நம்பிக்கை அவர்க்கில்லாமையால் அவர் அவ்வியக்கத்தில் சேரவில்லை. அவரது அபிப்பிராயம் ஜாதியத்தொழில்கள் எவ்விதம் க்ஷீணித்தனவோ அம்மூலமாகவே மேலேற வேண்டுமென்பது. கவர்ன்மெண்டாரது போஷணையின்றி நாட்டுத் தொழிற்செல்வம்நிலைபெறுதென்றது அவர்திடநம்பிக்கை.

இவர் தமது மனக்கோட்பாடு மீறாது நடப்பவர் என்பதற்கு மேல் சமாசாரமே அத்தாட்சி. அவரது அந்தக்குணமே யாவரையும் அவரிடம் அன்புகொள்ளுமாறு செய்தது. அதிமதிநுட்பம், பயமின்றி நடத்தல், திடமனோதைர்யம், வாக்ஜாலம், சாதுர்யம், யாவரையும் வசப்படுத்தும் வசைமொழி இவை எல்லாம் அவர் சட்டசபைகளில் பேசியபொழுது பிரபலமான இராஜாங்கத்துத்தலைமைகொண்ட அங்கத்தினர்களைஅவரிடம்பயமும்பக்தியும்கவுரவமும்கொள்ளுமாறுச்செய்தன. போலீஸ் சட்டம் அங்கீகரிப்பதன்முன் அவர் பேசிய பேச்சுகளின் வளப்பத்தை நினைக்கநினைக்க இப்படியும் பேசுபவருண்டா என்று தோன்றும். சட்டசபையில் ராஜ்யபார அங்கத்தினர்களுக்குத் தகுந்த வாக்ஜாலத்துடன் விளங்கி அவர்க்குப் பெரும்பாரமாக இருந்தார். மேடாவின் அடங்காத் தன்மையும், ஒடுங்கா வன்மையும் உத்யோகத்தலைவர்கள் இவரிடம்பொறுமை கொள்ளுமாறு செய்யாதிருக்கவில்லை.

அத்யத்புதமாகப் பேசுந் திறமைவாய்ந்தவருள் இவர் ஒருவர்; காற்றும் மயங்கி விளங்கக்கேட்டோர் பிரமிக்கப் பேசக்கூடியவர். கடல்போல் ஆரவாரஞ்செய்து, கோடையிடிபோலிடித்து, சப்த ப்ரவாஹம் எவ்விதத் தடையையும் புரட்டித் தள்ளிக்கொண்டோட, பிரசங்கமாரி பொழிந்து, உலர்ந்து கிடக்கும் இந்திய ஸுகப் புல் பச்சென்று விளங்க, ஸூர்ய தெய்வத்தைத் தொழும் ஜாதியில் பிறந்த இவர், ஸூர்யன்போல் ஜன ஸுகத்திற்குக் குளிர்நீங்கும்படியான சூடுண்டாக்கியவ ரென்பதற் கையமில்லை. பிறரது அபிப்ராயத்தை மதியா குணமொன்றே அவரது ஒரே குற்றம். "புல்லிதழ் பூவிற்குமுண்டு"; என் செய்வது? ஆனால் அவர் இந்தியப்பிரமுகர்களில் முதல்வர் என்பதற்கவரிடம் ஜனங்கள் வைத்த அபிமானமே சாட்சி. நமது அரசர் பம்பாயில் இறங்கியபோது இவரே அவரை முகமனுடன் முதலழைத்துவரும் பாக்கியம் அதற்குச் சாட்சிமாத்திரமன்று, கவர்ன்மெண்டா ரவரிடம் கொண்ட அபிமானத்திற்கும் சாட்சியாம்.

இருப்பது பொய் போவது மெய். நேற்றிருந்தவ ரின்றில்லை யானாலும், அவரது செயலும் மொழியும் இறந்ததில்லை. ஆணித்திறமாக விளங்கும் அம்மொழிகளை யாதாரமாகக்கொண்டு அவரைத் தேசத் தொண்டில் பின்பற்றினால் ஒருநாளும் வீணாகாது. அவர் போலவே எவ்விஷயத்திற்கும் பெரியவராகிப், பாராட்டப்பட்டு முன் அபிப்பிராயங் கேட்கும்படியான நிலையை யடையலாம்.

---

மூடுபனி.—ஆகாயத்தின் உயரத்தில் சாதாரண வாயுவிலுள்ள நீராவி குளிர்ச்சியடைந்தால் மேகரூபத்தை அடையும், அவ்வண்ணமாகவே, பூமிக்கருகில் சாதாரண வாயுவிலுள்ள நீராவியானது குளிர்ச்சியடைந்தால் மூடுபனியாகிறது. பனிக்கும் மூடுபனிக்கும் வித்தியாசம் என்னவென்றால், பனி பூமியின் மீதுள்ள பொருள்களில் உண்டாகும்; மூடுபனி பூமிக்குச் சற்று உயரத்திலுள்ள ஆகாயத்தில் உண்டாகும். மூடுபனியில் சிறிது ஜலத்தின்உருவைப்பெற்றுப் பூமியின்மீது விழும், சிறிது சூரியவெப்பத்தால் மறுபடி ஆவியின் உருவைப்பெற்றுச் சாதாரண வாயுவிற் கலக்கும் மூடுபனியென்பது பூமிக்குச் சமீபத்திலாவது பூமியைத் தொடும்படியாவது உள்ள மேகமேயாம். அது அதிநுட்பமான மழைத்துளிகள்போன்று எல்லாவற்றையும் மூடிக்கொண்டிருக்கிறது. அது காற்றில்லாமையால் பூமியின்மீது இறங்கின மேகமென்று சொல்லலாம் அப்படி இறங்காமல் ஆகாயத்தில் இன்னும் சிறிது காலமிருக்குமாயின் அதன் சிறு துளிகள் முன்னிலும் அதிகமாக இறுகி, ஒன்றோடொன்று சேர்ந்து பெருந் துளிகளாகி, சாதாரண மழையாக விழும்.

## இயற்கையில் இறைவன் :
## ஜீவஜந்துக்களின் ஸுபாவ உணர்ச்சி

## PROVIDENCE IN NATURE
## ANIMIAL INSTINCT

ஒருவன் தன்னைச் சுற்றியிருக்கும் இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கிப் பார்ப்பானாகில் அவனுக்குப் புதிய அழகுகள் வெளிப்படுகின்றன வென்பதை நாமெல்லாரும் அநுபவஸித்தமா யறிந்திருக்கிறோம். அதேவிதமாக, நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்கள் ஒழுகுதலைப்பார்த்தால் அவைகளை ஆளும் முறைகளுமிருக்கின்றனவென நாம் அறியலாம். இப்பொருள்கள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டும் அப்பாகுபாட்டில் ஒவ்வொரு பொருளும் மற்றொரு பொருளுடன் ஏதேனுமொருவகையில் ஸம்பந்தப்பட்டிருக்கிறது. இவ்வாச்சர்யங்களையெல்லாம் உற்றுநோக்கிப் பார்க்கப்பார்க்க நமக்குப் புதிய விநோதங்களும் புதிய ஸம்பந்தா ஸம்பந்தங்களும் எளிதில் வெளியாகின்றன. கடைசியில் நாம் ஒரேவித ஸம்பந்தத்தைக் காண்கிறோம்; அதாவது பரம்பொருளே!

உலகத்திலுள்ள எவ்விதமான ஜீவசரீரங்களின் அவயவங்களைப்பற்றி யோசித்துப்பார்த்தாலும் ஒரு ஸர்வக்ஞனாகிய கடவுள், அச்சரீரத்தை அபிமானிக்கும் உயிர்கள் வஸிக்கவேண்டிய இடத்திற்கும், புசிப்பிற்கும், சுகத்திற்கும் தக்கவிதமாக அறிந்து அமைத்திருக்கிறதாகப் புலப்படுகின்றது. இவ்வதியற்புதமான கார்யம் மானிடரால் முடியுமா? மேலும், அறிவற்ற பூதியங்களே கூடி இவ்வுருவத்தைப் பெற்றதாக நினைக்க முடியவில்லை. விருக்ஷ முதல், மனிதராகக் கொள்ளப்பட்ட ஜீவதேகங்களின் அவயவங்களெல்லாம் அச்சரீர அபிமானியாகிய ஜீவனின் இச்சைக்குத் தகுந்தாற்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் கடவுளின் பெருமை வாசாமகோசரமென்றும் மனிதரால் வர்ணிக்கமுடியாதென்றும் இசைக்கின்றார்கள்.

எப்படித் திரைக்குப்பின் சூத்திரதாரன் மறைந்திருந்து, மற்றைய நாடக பாத்திரங்களை நடப்பிக்கச்செய்கிறானோ அப்படியே நாம் காணும் இவ்வுலகத்தையும் அதிலிருக்கும் பொருள்களையும் ஆட்டிவைக்கும் இறைவனொருவன் இருக்கிறானென்று எல்லாதேசத்தாராலும் நம்பப்படுகிறது. சூத்திரதாரனைச் செய்கைகளாலன்றி வேறெவற்றாலுமறியமுடியாததுபோல் இறைவனையும் அவன் செய்கைகளாலேயே அறியவேண்டியிருக்கிறது. இப்பொழுது நாம் உலகில் வசிக்கும் சில ஜீவஜந்துக்களின் தாவரஜங்கம சாஸ்திரத்திலிருந்து (Natural History) அவைகளின் உணர்ச்சியால் எப்படி ஸர்வக்ஞனாகிய கடவுள் இயற்கையில் வியாபித்து நிற்கிறாரென்பதைப் பார்ப்போம்.

மேலே சொன்னபடி ஒவ்வொரு ஜந்துவின் அவயவங்களும் மற்ற ஜந்துக்களின் அவயவங்களுக்கு முற்றும் மாறானதாயிருக்கின்றன. ப்ராணிகளின் திமில்கள் முதல் எள்ளுப்ரமாணமுள்ள எலும்புவரை ஒவ்வொன்றும் ஒரு கார்யத்திற்குபயோகமாகும்படியாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ப்ராணியின் அவயவங்கள் மற்றொரு ப்ராணிக்கு எவ்விதத்திலும் உபயோகப்படக்கூடியனவல்ல.

ஸமஸ்த ஜீவகோடிகளிடத்தும் தம் குடும்பத்தை வ்ருத்திசெய்வதற்காக காமவிகாரமும் (Lust), தானும் தன் குடும்பமும் வாழ வேண்டி பசியுணர்ச்சியும் (Hunger) ஆகிய இவ்விரண்டுமிருக்கக் காண்கிறோம். ஒருவகை ஜந்துவின் தாய்க்கு அதன் வர்க்கத்தையும் குடும்பத்தையும்காப்பாற்ற உண்டாகும் அன்பும் கவலையும் மற்றொருவகை ஜந்துவினிடம் ஜனிக்கும் அதேவித அன்பும் கவலையும் காலக்ரமத்திலும் அளவிலும் வேறுபடுகின்றனவென்பதைப்பார்க்க நமக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. உதாரணமாக, பூச்சிகளும், மீன்களிற் சில வகுப்புக்களும் நேர்ந்த இடத்தில் முட்டையிட்டுச் செல்லுகின்றன. அவைகளைப்பற்றி அவை ஒருபொழுதுங் கவலைப்படுவதில்லை. முட்டையிடுவது மாத்திரந்தான் அவைகள் தொழில் போலும்! முதலை, நெருப்புக்கோழி, நல்லபாம்பு, முதலியவை தங்கள் முட்டைகளையிடத் தகுந்த இடமும், அவைகளினின்று வெளிப்படும்

ப்ராணிகள் வஸிக்கத்தகுந்த இடமாயும் பார்த்து முட்டையிட்டுவிட்டு அப்பாற் சென்றுவிடுகின்றன. கோழி முதலியவை முட்டையிட்டு அடைகாத்து அவைகள் வெடித்து, குஞ்சுகளுக்கு நடமாடச் சக்தியுண்டாகும் வரை அவைகளைக் காப்பாற்றுகின்றன.

ஒவ்வொரு இனத்தைச்சேர்ந்த பறவைகள் கட்டுங்கூடுகள் ஒவ்வொரு விதமாகவும் அவ்வவ்வினத்தைச் சேர்ந்தவைகள் யாவும் கட்டுவன ஒரேவிதமாகவு மிருக்கின்றன. இவைகளில் ஒன்று கட்டுவதைப் பார்த்துப் பழகி மற்றொன்றுகட்டுகிறதென்று சொல்வதற்கிடமில்லை. ஏனெனில், ஒரு காக்கையை அதன் இனத்திலிருந்து பிரித்து ஒரு பெட்டைக்கோழி இருக்குமிடத்தில் சேர்த்து அங்கேயே முட்டையிடச்செய்தாலும் முட்டையினின்று வெளிப்படும் காக்கைக் குஞ்சு தன் இனத்தாரைப் போலவே கொஞ்சங்கூடப் பிசகாமல் கூடுகட்டிக் கொள்ளுகின்றது. இலையுதிர்காலத்தில் யாதொரு ஸ்வகதபேதமின்றி வெறுங்கட்டையாக நின்றமரங்கள் வஸந்த மாரிகாலத்தில் இலை, தளிர், பூ, காய்,கனி,விதையாதிகளாற் றழைத்து விளங்கி அவைகள் யாவுந்தன்னைத் தேடிவந்தடையும் உயிர்களுக்கு ஒளியாமல் பக்குவப்பட்ட இலை, காய், கனியாதிகளை ஸகஜமாக உதிர்த்து, அவைகளைப் பெற உதவுகின்றன. மீள மீள இவ்வாறே செய்கின்றன. இவ்விருக்ஷத்தின் செய்கையை ஆழ்ந்து யோசித்தால் கடவுளுடைய காருண்ய சக்தியை உணரலாம். அதே காலத்தில் ம்ருகஜாதிகள் கவலையற்று ஒளிந்து வாழ அடர்ந்த மரங்களும், ஆகாரத்திற்காக புல் நிறைந்த வயல்களும், யதேஷ்டமான பூச்சிகளும், கிளம்புகின்றன. இவையெல்லாம் இறைவனருளாலன்றோ?

ம்ருகாதிகள் தம் சந்ததியிடத்தில் தாய் தந்தைக்குரிய அன்பையும் காப்பாற்றுங் கவலையையும் எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலந்தான் காண்பிக்கின்றன. இவ்வன்பின் தன்மை எத்தகைத்தென்பது கீழிருக்கும் உதாரணத்தால் வெளியாகும். அங்கசேத ஸாமர்த்யமுள்ள ஒருவன் (A skilful dissectionist) ஒருபெண் நாயைக் கிழித்தான். அந்த உபத்திரவந் தாங்காமல் வருந்தின அந்தநாய் தன்னிடத்தில் தன்குட்டியை காண்பித்துவைத்தவுடன் தன் உபத்ரவத்தை மறந்து அதை நக்கிக்கொடுத்தது. அந்தக் குட்டியையெடுத்துப்போகவும், அது ஊளையிட்டுக் கத்த ஆரம்பித்தது. அக்கத்தல், தான் குட்டியை யிழந்ததற்காகவெனத் தோன்றியதே யொழிய, தான்பட்ட அவஸ்தைக்காகவென்று தோன்றவில்லை.

ம்ருகாதிகளிடத்துள்ள இவ்வன்பு மனிதர்களிடத்திலிருப்பதைக்காட்டிலும் அதிகமாகவே யிருக்கிறதென்று சொல்லலாம். அப்படிக்கிருப்பினும், தம் குட்டிகளுக்கு இரைதேடச் சக்தி வந்ததும், தாய் அவைகளுக்கு இரையளித்து உதவுவதை நிறுத்திவிடுகிறது. ஆகவே, தகுந்த வயதிலேயே ஒவ்வொன்றும் தனக்குத்தானே இரை தேடிக் கொள்ள நேரிடுகிறது. இவ்வித ஸ்வபாவ உணர்ச்சியில் ஒரு அம்சம் கவனிக்கத்தக்கது. அதாவது, தாய் ம்ருகங்களும், பக்ஷிகளும் தம் சந்ததிகளை இரைதேடி ஜீவிக்கவிட்டுவிட்டாலும் அவை பிணியினால் வருந்திச் சக்தியற்றிருக்கும்பொழுது இரை கொடுத்துக் கவலையுடன் அவைகளை இரைதேடச் சக்திவருமளவும் கப்பாற்றுகின்றன.

நிச்சப்தமாயும் தொந்தரவில்லாமலும் மனுஷ்ய ஸஞ்சாரமில்லாமலும் இருக்கும்படியான இடங்களில் எவ்வளவு ஜாக்ரதையாய்ப் பெட்டைக்கோழிதன்கூடுகட்டுகிறது! முட்டையிட்ட பிறகும் அதி ஜாக்ரதையாய் அவைகளை அடிக்கடி திருப்பிக் கொடுத்து அடைகாத்து எல்லாப் பக்கமும் சூடேறும்படிச் செய்கிறதே! இரைதேட வெளியே சென்று தங்கிவிடாமல் முட்டைகள் குளிர்ச்சி யடைவதற்குள் இரை தேடிக்கொண்டு அவை திரும்பிவருகின்றனவே! கோடைகாலத்தில் தாம் யதேச்சையா யிருக்கலாமென்றும், குஞ்சுகள் குளிரால் கஷ்டப்படக்கூடிய மாரிகாலத்தில் தாம் இஷ்டம் போலிராமல் பாதி நேரம் வீட்டிலும், பாதி நேரம் வெளியிலுமிருக்க வேண்டுமென்றும் யூக புத்தியை அதற்கு யார்தான் கொடுத்திருப்பார்? முட்டையுடைக்குந்தருணம் வரும்பொழுது எவ்வளவு ஊக்கத்துடனும் கவலையோடும் சாமர்த்யமாயும் அவைகளைப் பெட்டைக்குஞ்சு பொரிக்கச் செய்கின்றது? இவ்வ

ளவு அழகாகக் குஞ்சுபொரிக்கச்செய்தல் ரஸாயன சாஸ்திரமுறையாலும் (Chemical Operations) அசாத்யமான தன்றோ?

தாம் பிறந்தவுடன் தமக்கு வேண்டிய ஆகாரத்தைச் சாப்பிடவும் தமக்கு வேண்டாததும் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாததுமான ஆகாரத்தைத் தள்ளவும் அறிந்திருக்கும் ஜீவ ஜந்துக்களின் உணர்ச்சியை நாம் என்னென்று சொல்வது? ஒரு ஆட்டுக்குட்டி பிறந்தவுடன் தானாகவே தாய்ப்பால் குடிக்கச் செல்லவில்லையா? மனிதர்களைப் போலவே எல்லா மிருகங்கள் பக்ஷிகளிடத்தும் சில தியகுணங்களாகிய கோபம், வன்மை, பழிவாங்குகை முதலியவையிருக்கின்றன. ஆனால் இக்குணங்கள் அந்தந்த ஜந்துக்களின் தேகஆக்ருதிக்குத் தகுந்தபடியிருக்கின்றன. சாதாரணமாக ஒரு சிங்கத்தின் மூர்க்கத்தன்மை எவ்வளவோ, அவ்வளவு ஒரு ஆட்டுக்குட்டிக்குக்கிடையாது: இருக்கிற மூர்க்கத்தன்மையைக் காட்டிலும் அதிகமாயிருந்தும் அதற்குப் பயனில்லை. இதேமாதிரியாக ஒரு ஆட்டின் சாந்தமான தன்மை ஒரு சிங்கத்தினிடம் காண்பதரிது. என்ன ஆச்சரியம்! இதுவும் அவன் அற்புதச் செயலன்றோ?

நிற்க: ஒவ்வொரு ஜீவஜந்துவும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு நகங்களோ குளம்புகளோ, கொம்புகளோ கூரிய பற்களோ, நீண்ட வால்களோ விஷம் பொருந்திய கொடுக்குகளோ அல்லது நீண்ட அலகுகளோ, தும்பிக்கைகளோ ஏதேனுமொன்றை அவற்றின் உருவத்திற்குத் தகுந்தபடி கடவுள் கொடுத்திருக்கிறார். கடவுள் இவ்வாயுதங்களைத்தான் அவைகளுக்குக் கொடுத்தார்; அவைகளை உபயோகிக்க யார் கற்பிக்கிறார்கள்? இதுவும் கடவுள் செய்கையே! இது தாவர ஜங்கம சாஸ்திரிகளாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்த ப்ராணிகளுக்கு ஆயுதங்கள் முளைப்பதற்கு முன்னாடியே அந்த இடத்தைக்கொண்டு அவை தம்மை காப்பாற்றிக் கொள்ளுகின்றன. உதாரணமாக, விட்டுக்குள்ளிருக்கும் ஆட்டுக்குட்டி தன்னை எதிர்ப்போரைக் கொம்பு துளிர் விடுவதற்கு முன்னாலேயே தலையினால் முட்டித்தள்ளித் தப்பித்துக்கொள்ளுகிறது.

கடவுளின் யூக புத்தியும், யூகத்தன்மையும் காருண்யமான சக்தியும், அகழெலியின் அவயவங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அதன் ஒவ்வொரு அவயவமும் அதன் ஸ்வபாவத்திற்கும், பழக்க ஒழுக்கத்திற்கும், தகுந்ததாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் வாஸஸ்தானம் பூமிக்குள்ளிருப்பதனாலும் அங்கே ஒன்றையும் பார்க்க முடியாததனாலும், அதன் கண்கள், தாவர ஜங்கம சாஸ்திரிகள் (Naturalists) அதற்குக் கண் உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும்படியான அவ்வளவு சிறிய தாய்க் கொடுத்திருக்கிறார். பார்வையில் குறைத்திருப்பதற்குப் பதிலாக அதற்குக் கட்செவி போன்ற காதைக் கொடுத்திருக்கிறார். மனிதர்கள் காதுக் கெட்டாத எந்த சப்தமும் அதன் காதுக்கு வெகு சீக்ரத்தில் எட்டும்; மேலும் தன் சுற்றளவுக்கு வேண்டியவளவு கனமுள்ள குகை பண்ணிக் கொள்வதற்காக குட்டையான கால்களும் ஒரே தடவையில் அதிக மண்ணைத்தோண்டி எடுக்கச் சாதனமாக அகன்ற முன் பாதங்களும், பகைவர் தன்னைப் பிடிக்க இலகுவில்லாதிருக்கும்படி வெகு சிறு குட்டையான வால்களும் கொடுத்திருக்கிறார்.

இன்னும் நமது கண்ணுக் கெட்டாத தூரங்களிலும், கடல், வனாந்த்ரங்கள் போன்ற மறைவிடங்களிலும் ஸர்வலோக நாயகரின் அத்யற்புதச்செய்கைகளைக் காண்பிக்கக்கூடிய மிருகங்களும் பக்ஷி ஜாதிகளும் மறைந்திருக்கின்றன.

கடவுள் ஒரு தனியிடத்தி லிருக்கின்றாரெனவும் அவற்றை யடைய முயலுவதே மனித வாழ்க்கைக்குத் தொழிலெனவும் பிதற்றுகின்றார் சிலர். அவ்விடத்தை மோக்ஷமென்றும் சாயுஜ்ஜிய பதவியென்றும் பெயரிட்டழைக்கின்றார்கள். அந்தோ! ஒவ்வொருவர் கண் முன்னேயும், ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு ஜீவனிடத்திலும், அதன் செய்கையிலும், உணர்ச்சியிலும், நம் சொல்லிலுங்கூட உறையும் இறைவனைப் பிரித்து வேறுயிருக்கின்றாரென உரைத்தல் எவ்வளவு மடமை? பூர்வம் ப்ரஹ்லாதன் இரண்யனுக்கு, "இறைவன் தூணிலு

(இதன் தொடர்ச்சி 171-ம் பக்கம்)

## செய்ந்நன்றி யறிதல்

## GRATITUDE

இது பிறர் நமக்குச்செய்த உதவியை மறவாதிருத்தல் என்று பொருள்படும். இவ்வியாசத்தைப்பற்றிய விஷயங்கள் நமக்கு நன்ருய்ப் புலப்படவேண்டுமாயின், உதவி செய்தலின் வகை, அதன் உயர்வு, அதனை மறத்தலால் வருங்கேடு ஆகிய இவைகளை ஆராய்வதாலேதான் புலப்படவேண்டும். ஆகவே, முதலில் இங்கு அவ்வுதவியைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

அவ்வுதவியோ வெனில், ஒருவன், ஒருவனால் எவ்வித உபகாரத்தையும் அடையாத முன்னமே செய்வதென்றும், அவசியமான காலத்திலே செய்வதென்றும், எவ்வித உபகாரத்தையும் எதிர்பாராமலே செய்வதென்றும் என மூன்று வகைப்படும். இவற்றைத் திருக்குறளாசிரியர் "செய்யாமற் செய்த", "காலத்தினுற் செய்த", "பயன் றூக்கார் செய்த" என்ற திருக்குறள்களால் உபதேசித்து முறையே, மண்ணுலக விண்ணுலகங்களையும், புவியினையும், கடலினையுங் காட்டி இவைகளிலும் அவ்வுதவிகளே பெரியன வென்றும் விளக்கியுள்ளார்.

நிற்க, அவ்வுதவி எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்விதம் விளங்குகிறதென்று பார்க்கில், அஃது ஒரு பெரியோருக்குச்செய்யப்பட்டதாயின் தினையளவாகியது பனையளவாகி வளருகிறது; கீழோருக்குச் செய்யப்பட்டதாயின் பனையளவாகியது தினையளவுகூடப் பயனைத் தராததாகிவிடுகிறது. இன்னும், பெரியோர்க்கு ஏதேனும் ஒருசிறு உதவியை முதலிற்செய்து பிறகு வேண்டுமென்றே பல தீங்குகளைச் செய்தாலும் அவர்கள் நம்மால் அடைந்த அவ்வோருதவியையே நினைத்துப் பின் செய்த தீங்குகள் அனைத்தையும் பொறுப்பார்கள். அவ்விதமன்றி நாம் கீழோருக்கு முன்னம் பல உதவிகளைச் செய்ய, நம்மை அறியாது தவறி ஒன்று குற்றமாய் விடின், அவர்கள் முன் செய்த பல உதவிகளையும் குற்றமாகவே நினைப்பார்கள். இங்கு,

> "உதவி வரைத்தன் றுதவி யுதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்றும்

> "ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
> பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
> கெழுநூறு நன்றிசெய் தொன்று தீதாயி
> னெழுநூறுந் தீதாய்விடும்" என்றும்

உள்ள வாக்கியங்கள் கவனிக்கத்தக்கன. இவைகளாற் பிறருக்கு நாம் மூன்று வகைகளால் உதவவேண்டு மென்றும், அவைகளும் அறிவுடையோர்க்காயின் உயர்வாகு மென்றுந் தெரிந்துகொண்டோம்.

இனி, இவ்வுதவியை மறத்தலால் வருந் தீங்குகள் என்ன என்பதைப் பார்ப்போம். மனிதர்களுக்கு அபகீர்த்தியும், பாபமும், அவைகளின் பயனாக நரகமுந் தீங்குகளாகின்றன. ஆனால், இந்நன்றி மறத்தலில் ஒருவனுக்கு இம்மூன்றும் ஒருசேர வந்தடைகின்றன. உதாரணமாக இன்றும், யாரேனும் ஒருவன் நன்றியை மறந்தால் அவனை "நன்றி கெட்டவன்" "நன்றிகெட்ட பன்றி" இவை போன்ற இன்னும் பல பழிமொழிகளால் உலகம் பழித்துக்கூறுதலைக் கேட்டிருக்கிறோம். மேலும், மேற்கண்ட மூவகைத் தீங்குகளையும் உண்டாக்குவது உலகத்தாருக்கு (அறிவுடையோருக்குச்) சம்மதமாகாத காரியங்களைச் செய்தலே. அவைகளிலும், நம்மாற் சொல்லுவதற்குக்கூடச் சம்மதிக்க முடியாத "சிதைவகல் காதற்றாயை," "அரவமல்கிய பதாகையாய்," "நன்றி புரிந்தோர்," "ஆன்மடியறுத்த" என்றுள்ள பிரபல வாக்கியங்களால் இந்நன்றி மறத்தல் மகா பாதகங்களிலும் பாதகமானதென்றேற்படுகிறது. இங்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் திருவாய் மலர்ந்தருளிய "எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறள் கவனிக்கத்தக்கது.

---

(170-ம் பக்கத் தொடர்ச்சி)

முளன், துரும்பிலுமுளன்" என்று சொன்னதை ஆலோசித்தால் மேற்கூறிய விஷயத்தை யாவரும் ஏற்றுக்கொள்வார் என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே: 'இயற்கையே இறைவன்; இறைவனே இயற்கை; இவ்விரண்டும் வேறுபடுவனவல்ல'.

எஸ். ரேங்கஸாமி அய்யங்கார்.

தவிர, "ஏதோ ஒரு சமயம் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கியவர் நட்பைப் பெரியோர் எழுபிறப்பும் நினைப்பார்களென்றும், நன்மை யல்லாதவைகளை மறத்தல் தகுதியே யன்றி, நன்மையை மறத்தல் தகுதியன்றென்றும், பெரியோர் பிறர் தமக்குச் செய்த நன்றியைமட்டிற்றான் நினைப்பார்களென்றும், கர்ணன் பீஷ்மர் முதலாயினோர் துரியோதனாதிகள் செய்தது நியாய விரோதமென்று தெரிந்தும், நன்றி மறத்தல் என்னுங் குற்றம் தங்களை அடையாமலிருக்கும் பொருட்டே யுத்தஞ்செய்தார்கள் (செஞ்சோற்றுக் கடன் கழித்தார்கள்)" என்றும் நாம் நீதிநூல்களாற் செவ்வனே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

ஆகையால் 'கற்றபி, னிற்கவதற்குத் தக' என்ற வாக்கியத்திற் கேற்பத் தெரிந்து கொண்டவண்ணம் நடக்கவேண்டிய நாம், நமது கடமையை அறியாதவர்கள் ஆனோம் என்ற குற்றத்திற்குள்ளாகாதுப் பிறர் நமக்குச் செய்த சிறு உதவியையும் எப்பொழுதும் நினைப்பதோடு, அவர்களுக்கு எப்பொழுது எவ்விதம் உதவி செய்யலாமென்றும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்போமாக.

எஸ். வேங்கடராமய்யர்.

---

**துத்தநாகம்.**—இது சிறிது நீல நிறத்தோடுகூடிய வெண்மையான ஒரு உலோகம்; அது ஈயத்தைவிடச் சற்று ஒளியுள்ளது. அது கனமாயிருப்பதுமல்லாமல் சுத்தியினால் அடித்தால் நீளத்தக்கதே யன்றி ஒடியாது. அது ஜலத்தினும் எழுமடங்கு அதிக கனமுள்ளது. அது அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களிலும், ஐரோப்பாவில் இங்கிலாந்திலும் உள்ள கனிகளில் மிகுதியாக வெட்டியெடுக்கப்படும். அது எளிதில் களிம்பேறாத உலோகமாதலால் போஜன பதார்த்தங்கள் வைப்பதற்குரிய பாத்திரங்கள் அதனால் செய்யப்படுகின்றன. அதைத் தகடுகளாக்கிக் கூரைகள் முதலிய பல வேலைகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். துத்தநாகம் செம்போடு சேர்ந்து பித்தளையாகிறது.

# கிராமக் கைத்தொழில்கள்

## VILLAGE INDUSTRIES

பழைய காலத்தில் குக்கிராமங்களில் பல கைத்தொழில்களிருந்து வந்தன. ஊரிலுள்ள ஜனங்கள் அவைகளில் உழைத்துத் தங்கள் ஜீவனத்தைத் தேடி வந்தார்கள். இவர்கள் செய்துவந்த ஸாமான்கள் ஐரோப்பாவிற்கூட பிரசித்தி பெற்றுவந்தன. உதாரணமாக டேக்காவில் செய்யப்பட்ட மஸ்லின்கள் ஐம்பது வருஷங்களுக்கு முந்தி ஐரோப்பியர்களால் நேர்த்தியானவையென்று கொண்டாடப்பட்டன. இப்பொழுதோ அவைகள் சீமையில் யந்திரத்தால் செய்யப்படும் உடைகளுக்கு எதிரில் விலைமலிவாயிருப்பதால் தலைகாட்ட முடியவில்லை. இப்படித் தொழில்கள் கெடாதபடி நாம் செய்யவேண்டியதென்ன?

நம்முடைய தேசத்தில் முக்கியமாய் ஜனங்களெல்லாரும் நிலத்தை சாகுபடி செய்து அதனால் வயிறு வளர்த்துவருகிறார்கள். இவர்கள் சாகுபடியை நன்றாய்ச் செய்துவந்தால் இப்பொழுது விளைவதைவிட இரண்டு பங்கு விளையும். ஏராளமான விஸ்தீர்ணமுள்ள நிலம் தரிசாய்க்கிடப்பதை நாம் பல இடங்களிற் பார்க்கலாம். உவர் நிலமும், சதுப்பு நிலமும் எங்கே பார்த்தாலும் தரிசாய்ப் போடப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சீர்திருத்திச் செப்பனிட்டு, எருத்தழை நன்றாயடித்துப் பயிரிடும்படியான ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும். இது மாத்திரமல்ல. நன்செய் நிலங்கள்கூட நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட பலவிதத்திலும் லாபம் தரும்படி பயிர் செய்யப்படவில்லை. புதிது புதிதாய் எரு தினுசுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒரே ஸ்தலத்தில் 2, 3 மாசூல் என்னமாய்ப் பயிரிடுகிறதென்று சாஸ்திர பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நம்மவர்கள் தெரிந்துகொண்டு நிலத்தை சாகுபடி செய்தால் நல்லது. இங்கே ஏகராவுக்கு 190 மரக்கால் விளையும் நிலம் இங்கிலாந்து முதலிய தேசங்களில் 300 மரக்கால் மாசூல் தரும்படி சாஸ்திரவிதிப்படி பயிர்செய்கிறார்கள்.

இப்படி விளையும் வஸ்துக்களை ஒழுங்காய் ஏற்றுமதி செய்வதற்குத் தகுந்த முயற்சியெடுத்துக்கொள்ளும் மனிதர்களின் தொகை மிகவும் கொஞ்சமாயிருக்கிறது. விவஸாயிகள் எல்லாரும் ஒன்றுகூடி ஏன் ஒரு பொது ஒப்பந்தக்காரனிடம் தங்கள் பண்டங்களை விற்கக்கூடாது? ஒவ்வொருவனாய்ப் போய், சில்லரைச் சில்லரையாய் விற்பதில் நம்முடைய தேசத்தவர்கள் அதிக கஷ்டமடைகிறார்கள். தவிர, சில வஸ்துக்களை நாம் உபயோகமில்லையென்று எறிந்துவிடுகிறோம். அவைகளைஐரோப்பியர்கள் மிகுந்த ச்ரத்தையுடன் சேகரித்துப் பதப்படுத்தி நம்மிடமே அதிகவிலைக்குத் திரும்பவும் விற்றுவிடுகிறார்கள். உதாரணமாக, பறைச்சேரியில் எறியப்பட்டுக்கிடக்கும் எலும்புகளைப் பொறுக்கச்சொல்லிக் காசு கொடுத்து அவைகளை வாங்கி இங்கிலீஷ்காரர்கள் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோய் அங்கே அவைகளை ரஸாயனமுறைப்படி சிறந்த எருவாக மாற்றி நம்மிடம் ஒன்றுக்குப் பத்தாக விற்று முதல் செய்கிறார்கள். ஆட்டுத்தோல், மாட்டுத் தோல்கூட இந்த மாதிரிதான் விற்கப்படுகிறது. நமக்கு இந்த மாதிரி உபாயங்களெல்லாம் தெரிவதில்லை. தெரிந்தாலும் அதைப் பிரயோசனத்துக்குக் கொண்டுவருவது மிகவும் அபூர்வம். ஏன் நம் நாட்டார்,இவைகளில் சிரத்தையெடுத்துக்கொள்ளக்கூடாது?

ஆயினும் ஆங்கிலேயர்களால் ஸ்தாபிக்கப்பட்டும் கொஞ்ச காலம் வரையும் நடத்தப்பட்டும் வந்த சில கைத்தொழில்கள் நம்மவர் கைக்கு மாறிவிட்டனவென்பது ஒரு திருப்திகரமான விஷயம். சில உதாரணங்களைக் காண்போம். கல்கத்தாவில் சணல் சாகுபடியும், கான்பூரில் தோலினால் செய்யப்படும் ஸாமான்களின் தொழில் முயற்சியும், அல்யுமினியப் பாத்திரங்கள் செய்தலும் இவை முதலான தொழில்கள் பலவும், முதல் முதல் ஆங்கிலேயர்களால் ஆதரிக்கப்பட்டு பிறகு நம்மவர் கைக்கு மாறியிருக்கின்றன. இதனால் உண்டாகும் பலன்கள் என்னவென்று யோசித்துப் பார்ப்போம். முதலாவது, கையில் முதல் உள்ளவர்கள் தங்கள் பணத்தை நாணயம்தவறும்இடங்களிற்போட்டு நஷ்டமடையாமல் இத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக இவைகளிற் போட்டு லாபமடையலாம். ஒரு கைத்தொழில் நீடித்த காலம் நடந்து வந்தால்தான் அது ஆதாயத்தைக் கொடுக்கும். இதற்குக் கவர்ன்மெண்டின் பாதுகாப்பும் ஒத்தாசையும் வேண்டியிருப்பதால் முதலாளிகள் கவர்ன்மெண்டை நிலைபெறச் செய்வதில் ஊக்கமாயிருப்பார்கள். இரண்டாவது, இம்மாதிரியான தொழிற் சாலைகளில் மானேஜர்களாகவோ, சாஸ்திர நிபுணர்களாகவோ, ஓவர்ஸீயர்களாகவோ ஏஜண்டுகளாகவோ அல்லது குமாஸ்தாக்களாகவோ, அவரவர்கள் சக்திக்கும் புத்தி சாதுர்யத்துக்கும் தகுந்தபடிக்கு வேலை தேடிக்கொள்ள இடமேற்படும். மூன்றாவது, கிராமங்களில் தங்களுக்கு மனதிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வேண்டா வெறுப்பாய் தலைமுறை தொட்டு வந்த தொழிலாயிற்றே என்று தொழில் செய்துவரும் தொழிலாளிகள் கிராமங்களை விட்டுவிட்டுத் தொழிற் சாலைகளிற் பிரவேசித்துத் தங்கள் ஜீவனோபாயத்தைத் தேடுவதற்கு வசதியாகிறது.

தற்காலத்தில் கிராமாந்தரங்களில் நடத்தப்பட்டுவரும் தொழில்கள் முக்யமாய்ப் பின் வருவனவையே. விவஸாயம், அதாவது நெல், துவரை, உளுந்து முதலிய நன்செய் புன்செய் தான்யங்களைப் பயிர்செய்தல், தச்சுவேலை, கருமார் வேலை, கொற்றுவேலை, பாய் நெய்தல், பானை வனைதல், கயிறு முறுக்கல், துணி நெய்தல் முதலியவைகளே. இவைகளைப்பற்றி இங்கே சொல்லவேண்டியதென்னவெனில், நல்ல ஆயுதங்களையும் பொருள்களையும் கொண்டு சீமைப் பொருள்களுக்குச் சளைக்காத அவ்வளவு நேர்த்தியாயும் நாணயமாகவும் நம் நாட்டுத் தொழிலாளிகளும் செய்ய முயலவேண்டுமென்பதே.

நிலத்தைச் சாகுபடிசெய்வது வெகுவாய் அநேகருடைய ஜீவனோபாயமாயிருப்பதால் அதைப்பற்றிச் சற்று இங்கே விவரித்து எழுதுவோம். ஸாமான்யமான குடியானவர்களுக்குப் பலவிதத் திங்குகள் உண்டு. சிலர், தங்கள் எஜமான்களிடத்தில் விரை வாங்

கிப் பாடுபட்டு உண்டாகும் விளைவில் வாரமும் (அதாவது மாசூலின் ஒரு பகுதி, 4-ல் 3, கொடுப்பது வழக்கம்) தங்கள் எஜமான்களுக்குக் கொடுத்துவிட்டு விரைமுதலும் வட்டியுடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. வேறு சிலர், உழவு மாட்டுக்காகவும், மண் வெட்டி முதலிய கருவிகளுக்காகவும் தங்கள் எஜமானனிடத்தில்பணம் கடன்வாங்க வேண்டிவருகிறது. இப்படி வாங்கும் கடனுக்கு வட்டி மிகவும் கடுமையாகவிருக்கிறது. விரைமுதல், மாடு இவைகளெல்லாம் கடனாகவாங்கிக் குடியானவன் பாடுபட்டபோதிலும் காலாகாலத்தில் மழையில்லாததால் விளைவு குறைந்துபோய் கடன்காரனாகிவிடுகிறான். ஒரு எளிய குடியானவன் சொந்தத்தில் மாடுவைத்துக்கொள்வது ப்ரயாஸம். ஏனென்றால், அதற்குப் போடவேண்டிய வைக்கோல்,தீனிச்செலவு முதலியவற்றிற்கு அவனிடத்தில் பணம் கிடையாது. இதுமாத்திரமல்ல; அவன் சாகுபடிசெய்யும் நிலம் தனக்குச் சொந்தமானதல்ல வாகையால் அவன் அதில் எருத்தழை நன்றாயடித்துச் செப்பனிடவேண்டுமே யென்ற சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. அப்படி யவனுக்கு நிலத்தைச் சீர்திருத்த எண்ணமிருந்தாலும் அவனுடைய அறியாமையே அவ்வெண்ணத்தை நிறைவேற்றத் தடையாகவிருக்கிறது.

இவைகளையெல்லாம் சீர்திருத்த நாம் செய்யவேண்டியதென்ன? புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் விவஸாய முறைகளையும் எரு உரங்களையும் பரவச்செய்யும் பொருட்டும், நல்ல விதைகளை எப்படித் தேர்ந்தெடுத்து விதைப்பது என்று பலருக்கும் தெரிவிக்கும்பொருட்டும் விவஸாயச் சங்கங்களிற்கூடி இவைகளை ஆலோசித்தும் பிரஸங்கித்தும் அனுசரித்தும் வரவேண்டும். பலர் ஒன்றுகூடி, தங்கள் நிலங்களை ஒருமிக்கச் சேர்த்து ஒருவர்க்கொருவர் செய்யும் ஒத்தாசையைக்கொண்டு சாகுபடியை நன்றாய் ஏககாலத்திலே நடத்த முயலுதல் உத்தமம். பயிர் செய்வதற்குவேண்டிய முதற்பொருளை ஸ்வல்ப வட்டிக்குக் கொடுத்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் கோ ஆபரேடிவ் சங்கங்களின் உபயோகங்களையும் முற்றினுமுணர்ந்து தாங்கள் லாபமடைவார்களாக.

# மாணவரின் மனோலக்ஷ்யங்கள்

## STUDENTS : THEIR IDEALS

(132-ம்பக்கத் தொடர்ச்சி)

அறிவுப்பயிற்சியில் யதார்த்தமுடைமை, மற்றவர்கள் நோக்கங்களையறிந்து ஒத்துக் கொள்ளச் சித்தமாயிருத்தல், தர்க்கத்தில் மரியாதையும் நேர்மையுங் காட்டல், உண்மைக் கடைப்பிடித்தல், உலகத்தில் கருதி வெளியிடப்பட்டிருப்பதில் மிகச்சிறந்தவைகளையே சேர்த்துக்கொள்ளுதல் முதலானவைகளே அக்குணங்கள். இவைகளின் உபயோகம் வெளிப்படையாய்த் தெரிந்ததே. நான் இவைகளைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஸன்மார்க்கச் சம்பந்தமாக அபிவிருத்தி யென்பது அனுதாபசீலம், மனிதரின் ஸகோதரத்வசிந்தை, பரமான சக்தியிடத்தில் (ஸர்வஜ்ஞனிடத்தில்) பக்தி இவற்றையெல்லாம் அடைந்திருத்தலே. இவ்விஷயங்கள் ஜனசார சம்பந்தமாயும், ஸன்மார்க்கபரமாயும், ஆத்மார்த்தமாயும் முக்கியமானவை யென்பதை மறுக்கமுடியாது; விஸ்தாரப் படுத்தவும் வேண்டியதில்லை. நான் இன்று உங்களுக்கு எடுத்துரைத்த அபிவிருத்தியின் பக்ஷாந்தரமிரண்டையும் அறிதலே இந்திய இளைஞர் சரியான மனோலக்ஷ்யங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு மிகவும் அனுகூலமா யிருப்பதுபற்றி அவைகளை வற்புறுத்திக் கூற விரும்பினேன்.

நமது நோக்கங்களின் வலிமையையும், நாம் அவைகளை இன்ன வழியிற் செலுத்த வேண்டுமென்பதையும் தீர்மானித்திருக்கிற சில பெரிய விஷயங்களையும் கருத்துக்களையும் உங்களிடம் சொல்லக்கேட்டுக்கொள்ளுகிறேன். ஆங்கிலேய அரசாட்சிக்கு நாம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறோமென்று நன்கு அறிபவர் நம்மில் சிறுபான்மையோர் தான். யுத்தங்களாலும், அரசின்மையாலும், நெறிதவறின அரசியலினாலும் கேடடைந்த தேசத்திற்கு ஆங்கிலேயர் சமாதானமென்ற சுவர்க்கத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சகலரும் உள்ளே செல்லுமாறு

அறிவுவாயில்களைத் திறந்துபோட்டிருக்கிறார்கள். மேனாட்டு நாகரீகத்தைக் காத்து வருபவராகவும் அதற்குப் பிரதிகாரர்களாகவும் அவர்கள் யூகித்துணர்தல், சுவாதீன ஆராய்ச்சி, இத்தன்மைகளை ஆதரித்து வருகிறார்கள். ஆங்கிலேய நாகரீகம், அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகள் இவைகளைப் பற்றி வர்த்தமான பத்திரிகைகளிலும் உபந்யாஸங்களிலும் நாம் வெறுப்படையுமாறு குற்றங்கூறப்பட்டிருக்கிறது. இவைகளை விவகரித்து உங்களைச் சலிக்கச்செய்யேன். ஆயினும் முன் சொல்லப்பட்ட நன்மைகளுக்காக இராஜாங்கத்தாரிடம் நன்றி பாராட்ட வேண்டும். அடிமை நிவாரணம், யூகம், ஆண்மை, போராடாமை, இவை கொண்டு உலகிலெல்லாம் உத்தமமான அரசியலை அடைந்துள்ள ஜாதியாரிடமிருந்தே ஜனங்க ஸமத்வத்தையும் இராஜாங்கச் சுயாதீனத்தையும் (உரிமை) அறிந்ததற்குக் கடன்பாடுடையேம் என்ற சங்கதிகளைத் தெரிவிக்காமலிருக்கக்கூடாது. இங்கிலாந்திடம் இந்தியா ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்றும் ஈசுவர கடாக்ஷத்தின் பேறுகளைச் செவ்விதாய் அடைய வேண்டின் சோம்பேறித்தனக் கொள்கையையும், போக்கின்படி அமைதலான கொள்கையையும் விட்டுவிட்டு, சென்ற சிறிதுகாலமாக இருந்ததைப் பார்க்கிலும் அதிக ஊக்கம், உழைப்பு இவைகளுடன் ஜீவித்து வரவேண்டுமென்பதை நன்பர்காள்! நீங்கள் அறிந்து வருகிறீர்களா?

"குணதிசை குணதிசை குடதிசை குடதிசை
இணங்கியிவ்விரண்டும் பொருந்தாதென்றுமே"

என்று கலகப்பேய்க்குணமான கொடுங்கொள்கையுள்ள கவியொருவர் எழுதியிருந்தபோதிலும் இக்காலத்து அறிவுடையோர் இதற்கு மாறானதே யதார்த்தமென்று உணர்ந்திருக்கின்றார்கள். ஆனால் நமது முறைகளும், கொள்கைகளும், மனோபாவங்களும் இங்கிலிஷ் முறைக்கொத்தனவாய்ச் செய்தலானது அதிகரித்துவருகிறது. இது சந்தேகமும் அச்சமும் உண்டாக்குகிறது. இதனால் தீமைமுதலியவை வாராதிருக்கக்கடவதென்று வேண்டுகிறேன். ஒரு ஜாதியானது மற்றொன்றைப்பார்த்து அற்பமாய் அதைப்போல் நடித்துச், சரித்திரத்தில் மேன்மை யடைந்ததாகத் தெரியவில்லை. நமது நாகரீகத்தின் முக்கிய அம்சங்களைப் பரிபாலிப்பதுடன் அவைகளுடன் இசைந்து ஜாதிய அபிவிருத்திக்குத் தகுந்த துணைக்கருவிகளாயிருப்பவைகளையே மேனாட்டாரிடமிருந்து கிரகித்துக்கொள்ளவேண்டுமென்பதுதான் எனது விருப்பம். பின்னால் சில லக்ஷ்யங்களை உங்களுக்கு எடுத்துரைக்கப் போகிறேன். ஆதலால் மேற்சொன்னவைகளை வாக்சாதுர்யமாக மாத்திரம் மதிக்காமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். நமது மனோபாவம் ஆங்கிலேயருடையதில் அதிகாரம் வகிக்கும்படிப் பண்ணுவதும் நமது கடமையே. இம்முறையானது அமைதியாயும், குறித்த நோக்கமின்றியும் நடந்துவருகிறது. ஆனால் இவ்வேலை நோக்கத்துடனும், யூகத்துடனும் நடைபெறுங்கால் இதன் முடிவானது நாம் இப்பொழுது அதிக ஆவலுடன் கருதிய எண்ணங்களைப் பார்க்கிலும் மேலானதாகயிருக்குமென்று உறுதியாய்ச் சொல்லுவேன். எதிர்கால இந்திய நாகரீகத்திற்கு மேனாட்டு நாகரீகம் புரிந்திருக்கும் ஒத்தாசைகளைப் பற்றி டாக்டர் குமாரசுவாமி அவர்கள் பொருத்தமும் இனிமையுங்கொண்ட சொற்களாற் பின்வருமாறு கூறுகிறார்: "ஸ்தூலப்பொருளாளுகைக்குரிய ஊக்கம், ஆராய்ச்சி, வர்த்தமான யதார்த்தமுமுடைய கருத்து, இந்தியாவிற்குப் பிராகிருதமாயுள்ள உணர்வுகளை நவீன சாஸ்திர சம்பிரதாயப்படித் திரும்ப விவரித்தல்—இவைகளே மேனாட்டாரிடமிருந்து இந்தியா கற்றுக்கொள்ளும் விஷயங்கள்." மேலாம் பரமான அந்தர்முக நாட்டம், பரமான பரிபூர்ண ஆத்மார்த்த ஜீவியத்தின் தேறுதல்களும், பேரானந்தமும் தன்னுள்ளேயமைதலும் சமாதானமும் பொருந்திய ஜனங்க வாழ்வும் அரசியலுமாகியவைகளுக்காக மேனாட்டார் கீழ்நாட்டாரிடம் கடன்பட்டிருக்க வேண்டும். முன்சொல்லப்பட்டவரே அர்த்த பூர்த்திப் பதங்களுடன் பின்வருமாறு உரைக்கிறார்: "கீழ்த்திசையோரின் நற்செய்தி யாது? பொதுப்படையாக அது மேனாட்டார் பத்தொன்பது நூற்றாண்டுகளாக

அறியாமலிருந்ததுவே. தேவராஜ்யம் உன்னுள்ளேயே இருக்கிறது. அந்தர் முகமாய்ப் பார்—நீதான் புத்தர்: தத்வமஸி. மேற்றிசை அறிவிப்பது பேதமும், பிரிவினையும் பிரத்தியேக ஜீவனுமாயிருக்கையில், கீழ்த்திசையின் சுவிசேஷமானது ஸர்வ ஜீவைக்யத்வமும், ஒற்றுமையும், ஸர்வ வியாபக ஆத்மத்வமுமாயிருக்கின்றது." இந்த இரண்டு செய்திகளையும் தெளிவாய் முன்னுணர்ந்து அவைகளின்படி நடந்துவருதலே உண்மையான அபிவிருத்தியெனப்படும்.

முன் சொன்ன பிரகாரம் உண்மையான அர்த்தத்தில் அபிவிருத்தி யென்பதைக் கொள்ளுங்கால் விரும்பத்தகாதபடி அவ்வளவுக்கு நாம் அபிவிருத்தியின்றி இருக்கிறோமென்பதைக் காண அதிகமாக யூகிக்க வேண்டியதில்லை. இதன் காரணமாவது, மேனாட்டு நாகரீகத்தின் உயர்ந்தபடிப்பினைகளை நாம் நன்றாய்க் கற்கவில்லை. அந்நாட்டின் சிறந்த மனோ லக்ஷியாம்சங்களை நமது நாகரீகத்தில் அமைத்துக்கொள்ளவில்லை. உயர் நாட்டத்திலும் காரிய சித்தியிலுமுள்ள சரியான லக்ஷியத்திற்காக இன்னும் தடவிக்கொண்டே யிருக்கிறோம் என்பவைகளே. உபாத்தியாயர்களும் பெரியோர்களும் தாங்களே தங்கள் ஜீவியத்தில் அபிவிருத்தியைக் காட்டவேண்டும். அதை இந்நாடு முழுவதும் பரவச் செய்யவும் வேண்டும். இயற்கையான வழியிலும், படிப்படியாய் உறுதியான நிலைமைகள் மூலமாயும் உயர்ந்த அபிவிருத்தியை (பயிற்சி) மாணவருக்குப் போதிப்பதற்குப் பதிலாக வித்தியா முறைகளையும், நோக்கங்களையும் பலவிதமாக்கிச் சலிப்புண்டாக்குமாறு செய்வதற்கே இக்காலத்தில் பேராவல்உண்டாயிருக்கிறது. நமது போதனுமுறையின் குறைகளை விஸ்தரித்துரைக்க இது சமயமில்லை. என்றாலும் சுருக்கமாக இதைச் சொல்லாமலிருக்க முடியாது. சில வருஷங்களுக்கு முன்பு நடைபெற்று வந்த வித்யாமுறையின் குறைபாடுகள் வெளிப்படையாயும் அனேகமாயுமிருந்தன. பரீக்ஷையில்லாமலும், செலவு அதிகமாயும்,சிலபேருக்குமாத்திரம் சாத்தியமாயுமிருந்தது. ஒரே பக்கச் சார்பாயும், கலைஞானம், சாஸ்திரம், வித்தை-இவை சேர்ந்த முறையா யில்லாமலு மிருந்தது. ஒவ்வொருவருக்கு அமைந்ததாயுமில்லை, தனித்தனியான திறமையை விருத்திபண்ண முயற்சியுங்கிடையாது. ஆகையாலே கடினமாயுமிருந்தது. கேவலம் ஆதாயத்திற்குமாத்திரம் மதிக்கப்பட்டுவந்தது. பொருளும் அதிகாரமும் அடைதற்குரிய சாதனமாகமாத்திரம் கருதப்பட்டுவந்தது. ஒவ்வொருவனுடைய தன்மரியாதையையாவது ஜாதிய தற்கண்ணியத்தையாவது உண்டுபண்ணச் சக்தியற்றதாயுமிருந்தது. மதம், ஸன்மார்க்கம் இவைகளுடன் யாதொரு சம்பந்தமுமில்லை. ரஸஞானம்கொஞ்சமேனுங்கிடையாது. கீழ் வகுப்பு முதற்கொண்டே ஆங்கிலேய பாஷை வாயிலாகவே படிப்பு கற்பிக்கப்பட்டு வந்தது. இக்குறைபாடே நம்மிடம் நூதனமாய்க் கற்பிக்குந் திறமையின்மை, படித்தவர்க்கும் பொதுஜனங்களுக்குமுள்ள அசாத்தியமான வேறுபாடு, பதங்களைக் கடந்து அவை அறிவிக்கும் விஷயத்தைத் தெரியவியலாமை முதலியவைகளுக்குக் காரணபூதமாயிருந்து வருகிறது. கீழ் வகுப்புகளில் 'கிண்டர் கார்ட்டன்' முறை அநுசரிக்கப்படவில்லை, கல்வி விஷயமாக வீட்டில் நடத்தப்படவேண்டிய வேலையின் பிரயோஜனத்தை முற்றிலும் மறந்துவிட்டது. தேகப்பயிற்சியைப்போதுமானபடி கவனிக்கவில்லை. கடைசியில்,ஆனல் முக்கியமானது, ஒரு தலைமுறையிலுள்ள ஜனங்களை நடையுடைபாவனைகளில் மதானுசாரமின்றியும், ஆங்கிலேய வழியிலும் திருப்பி மிகவும் இழிவான பாசாங்குகாட்டுதலிலும் நடத்திவந்ததற்குப் பொறுப்பாளியும் அதுவே. நூதன வித்தியாமுறைச் சீர்திருத்தங்களின் நன்மையைப் பற்றி ஏதேனுங் கூற இன்னும் காலம் போகவேண்டும். ஆனல் வெளிப்படையாயுள்ள கெடுதிகளில் சிலவற்றை மாத்திரம் போக்க முயன்றிருக்கிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்ததே. மிகப்பிரமாதமான குறைகளை நீக்காமல் அப்படி அப்படியே விட்டதுமல்லாமல் அனேகமான பஹிரங்க பரீக்ஷைகளென்னும் பிசாசத்தினின்றும் கல்வியைக் கொஞ்சம் விடுதலைசெய்தலான தீர்க்க நன்மைக்குப்பதிலாக உபாத்தியாயர்களுக்கும், வித்தியா விசாரணைத் தலைவர்க

ளுக்கும் முன்னிலும் அதிக அதிகாரங்கொடுத்தல், கல்வியில் ஏராளமான பணச்செலவு நானாவிதமாய்ப் பின்னலும் போலியுமாயிருத்தல் முதலிய குறைபாடுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன இன்னும் நமது வித்தியா முறைகளிலும் நோககங்களிலும் தொழிற்சாலை முறையே அதிகமாய் நடந்துவருகிறது. கலாசாலையிலேயே மாணவர் வசிக்கும் ஏற்பாட்டின் நன்மையானது போதுமானபடி உணரப்படவேயில்லை; நமது பெரிய கலாசாலைகளும் பட்டணத்திற்கு மத்தியிலிருக்கின்றன, ஒதுக்கமும் ஏகாந்தமுங்கிடையாது. உபாத்தியாயரோ சரசமாய்அலக்ஷியஞ்செய்யப்படுகிறார். தன் மரியாதையைக் காப்பாற்றிக்கொள்கிறதில்லை, மற்றவரிடமிருந்தும் பூஜ்யதை பெறுகிறாரில்லை. இத்தகைய நிலைமையில் •இப்படிப்பட்டவர்களால் கற்பிக்கப்பட்டுவந்தவன் ஏதோ அங்குமிங்கும் சில விஷயங்களைத் தன்புத்தியிலமைத்துக்கொண்டுஇங்கிலீஷ்பாஷையைக்கற்று அதிகாரபதவிகளையும் அடைகிறான். வயதுவந்ததும்

"வானோரும் வருத்தமடைய வம்பலத்தில்
சேட்டைகளவனும்செய்கின் றனன்றே."

ஹூபின்ஸாங் என்பவர் நளந்தா ஸர்வகலாசாலையை வர்ணித்ததைச் சற்று கேளுங்கள்: "நீலத்தாமரை மலர்கள் விரிய எப்பக்கமும் ஸ்படிகம்போன்ற தடாகங்கள் விளங்கின. இங்குமங்கும் அழகிய கனக விருக்ஷங்கள் சிவந்தபுஷ்பங்களுடன் கவிந்தன. அவைகளுக்கு மத்தியில் இருண்ட மாந்தோப்புகள் நிழல்கொடுத்தன. பிராகாரங்களில் துறவிகளுடைய கிருஹங்கள் மேடை நான்குவைத்ததாய் உயர்ந்திருந்தன. மண்டபங்களின் ஸ்தம்பங்கள் ஸர்ப்பசித்திரங்களாலும்,உத்திரங்கள்,பஞ்சவர்ணஜோதியாயும் அலங்கரிக்கப்பட்டு நின்றன. சட்டங்கள் சிறப்புடன் செதுக்கப்பட்டும், தூண்களில் சிவப்பு வர்ணத்தாலான குதிரைகள் விமரிசையாய்ச் செய்யப்பட்டும் தூண் வரிசைகள் சித்திரவேலைகளால் வெட்டப்பட்டுமிருந்தன. கோபுரங்களும் கட்டடங்களும் தலைமுறை தலைமுறையாக ஆண்டுவந்த ஆறு அரசரால் நிருமிக்கப்பட்டன. அங்கே கல்விச்சாலைகளும் தடாகங்களும், கோவில்களும், நந்தவனங்களும், (ஈசுவரனை) வழிபடப் பரிசுத்த ஸ்தலங்களும் அமைந்திருந்தன. கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மேடைக் கட்டடங்களில் உபாத்தியாயர்களும், பௌத்த சன்னியாசிகளும் வசித்துவந்தார்கள். கோபுரத்தின் ஜன்னல்வழியாகக் கங்கா நதியைப் பார்க்கலாம்.' இந்த ஸர்வகலாசாலையில் பதினாயிரம் மாணவர்களும் ஆயிரத்து ஐந்நூற்றுப் ப்த்துப் போதகாசிரியர்களும் இருந்தார்கள். இவர்களுக்குக் கல்வியும், போஜனமும், இடமும், ஔஷதமும் கொடுக்கப்பட்டுவந்தன. இவைகளும் இலவசமாகவே. இம்மகத்தான காரியத்தை நடத்திவரப் பொருளுதவி ஏராளமாயிருந்தது. கலைகளும் மதமும், தத்வஞானமும் தர்க்க சாஸ்திரமும், இலக்கணமும் இலக்கியமும், வானசாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும், மற்றுமுள்ள அனேக சாஸ்திரங்களும் இச்சர்வகலா சாலையில் போதிக்கப்பட்டுவந்தன." இன்னும் பின்வருமாறு சொல்லப்படுகிறது. "வித்தியா முறையெல்லாம் இக்காலத்து இந்தியாவில் கருதப்படாத விசாலமும் பொலிவும் அமையுமாறு ஏற்படுத்தப்பட்டுவந்தன. கணிதம், வானசாஸ்திரம், வைத்தியம், மற்றுமுள்ள சாஸ்திரங்களுமல்லாமல் சித்திரம், கல்வேலை, கைத்தொழில்கள் முதலியவைகளுக்குரிய சாலைகளுமிருந்தன. நளந்தாவில் அனேக பண்டிதர்கள் மதமும் தத்வசாஸ்திரமும் போதித்துவந்தார்கள். ஆசியாவின் எல்லாப்பக்கங்களினின்றும் மாணவர்கள் அவ்விடம்சென்றார்கள். அங்கிருந்து பிரசாரகர்கள் தூரதேசங்களான சீனா, கோரியா, ஜப்பான் முதலிய தேசங்களுக்கு இந்தியாவின் மதம், தத்வஞானம், சாஸ்திரம், கலை இவற்றைக்கொண்டு வெளியேறினார்கள்." தற்கால வித்தியாமுறைகளுக்கும் நோக்கங்களுக்கும் பொறுப்பாயுள்ளவர்கள் தற்புகழ்ச்சியாய்ப் பேசுவதை நீங்கள் கேட்கலாம். இதற்குமுன் சித்திக்கப்படாத பூர்ண நிலைமைகளை நாம் அடைந்துவிடவில்லை. நமது காரியஜயத்தின் மேன்மைக்காக ஆனந்திக்குமுன் நமது புராதன ஸர்வகலாசாலையின் முறைகளிலிருந்தும் நோக்கங்களிலிருந்தும் அனேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியதாயிருக்

கிறது. உத்கிர்ஷ்டமான பயிற்சியை நடத்தி வருவதற்குரிய சாதனங்களை நமது வித்யா முறையில் ஒழுங்குசெய்து ஏற்பாடு பண்ண வேண்டியதாயிருக்கிறது. இக்காரியத்தை நிறைவேற்றுவது பின் தலைமுறையாரின் கடமையே. இந்திய இளைஞருக்குரிய லக்ஷ்யங்களில் நான் இதையே அதிமுக்கியமானதென்று நினைக்கிறதனால் இது சம்பந்தமான விஷயங்களிற் சிலவற்றைப் பின்னால் சொல்லுகிறேன்.

இவ்விதமாக அபிவிருத்தி (பயிற்சி) யின்மை என்ற குறைபாட்டைப்பற்றிச் சொல்லியாய்விட்டது. பயபக்தி வணக்கவொடுக்கமின்மை என்றதும் மதானுஸாரமின்மை என்றதுமான குறையைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். ஆங்கில கவிகளில் மிகத்தெட்பமும்,ஆத்மார்த்தமும்,மேன்மையும் வாய்ந்த கவியொருவர் "மெச்சிமதித்தல், நம்பிக்கை, அன்பு இவைகளினாலேயே வாழ்ந்துவருகிறோ" மென்று கூறியிருக்கிறார். வியப்படையுங் குணமும், பயபக்தி வணக்கமும் தைவிகமாய் மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. பகுத்தறிவை விட இஃதே மனிதனுக்கும் ஏனையதாழ்ந்த சிருஷ்டிப் பொருள்களுக்குமுள்ள வித்தியாசத்தைக் காண்பிக்கிறது. மனமொழி மெய்களில் வணக்க வொடுக்கம் பயபக்தி யுபசாரமுடைமையென்ற இக்குணத்தை அனேகமா யழித்துவிடவே புதிய கல்வி முறையானது சார்ந்திருக்கிறது. மூப்பும் அனுபவமும், வித்தையும் வைதிகமும் பொருந்தியோ ரிடத்தும் பெண்பாலரிடத்தும் வணக்க வொடுக்க மரியாதை வாய்ந்தும் ஸகல ஜீவனையும் பரிபாலித்துவரும் சித்தினிடம் வரையறையின்றி ஆத்ம ஸமர்ப்பணம் செய்தும் வருதலே முற்காலத்து ஜனங்க வாழ்க்கையைச் சிறப்பித்துவந்தன. இவைகள் இப்போது நம்மிடமிருந்து நீங்கிக் கொண்டே வருகின்றன. இக்காலத்துச் சிறுவர் ஜீவியத்தில் மதசம்பந்தமான வழியே கிடையாது. இதன் முடிவு என்னவென்றால், அனேகர் தங்களது நல்ல நாட்களில் அஸந்தோஷமான அறியாவாதிகளாய் வசித்துவருகிறார்கள். சிலரிடம் மேலான சக்திப்பொருளை வழிபடுந்தன்மை மறுபடியும் கிளம்புகிறது. ஆனால் இவர் கொள்கையிலும்மதானுசாரத்திலும்சுதேச வழக்கமில்லாத விதங்களையும் வழிகளையும் பின்பற்றுகிறார்கள். இவ்விருதிறத்தாரும் மற்ற இனத்தாருடன் சேராதவர்களாய் வசித்து வருகிறார்கள். தாங்கள் தங்களுக்கு உபயோகமற்றிருப்பது போலவே இந்திய நாட்டிற்கும் பிரயோஜனமில்லாதவர்களா யிருக்கிறார்கள். சிறுவரடையும் கல்வியானது மத சம்பந்தமில்லா திருத்தலே இதன் முக்கியகாரணம். இராஜாங்கக் கலாசாலைகளில் மதச்சார்பில்லாத கொள்கையை நாம் நன்கு அறியலாம். அங்குங் கூட இந்நாட்டிலுண்டான மூன்று பெரிய மதங்களின் சிறந்த உண்மைகளை அந்தந்த மதத்தைத் தழுவியுள்ள சிறுவர்களுக்குப் போதிக்காததின் காரணம் எனக்குத்தெரியவில்லை. நூற்றாண்டுகளாக அறிவு விஷயமாகவும் தர்மநெறி சம்பந்தமாகவும் பட்ட கஷ்டத்தின் பலனாக அடையப்பட்ட ஸன்மார்க்கம், மதம் இவற்றின் உத்தம லக்ஷணங்களை மறந்து அவைகளற்றவழியில் பிள்ளைகளைப் பயிற்சிக்கும் பரிதாபமான நிலையை மற்றப் பள்ளிக்கூடங்களில் எவ்விதத்திலும் நீக்கிவிடக்கூடும். அறிவுச்சுடரானது ஞானக் கண்களுக்கு முன் உதயமாகி வந்தடையும்படி ஜாடை செய்தபோதிலும் அசையாமலிருப்பவர்கள் நமது மதம் வெவ்வேறு கொள்கைகளை யுடைத்தாயிருக்கையில் அதன் முக்கிய தத்வங்களை எவ்விதம் சொல்லப்போகிறீர்களென்று கேட்கிறார்கள். இவைகளைக் கண்டுபிடித்து இசைந்தவண்ணம் அழகாய்ச் சொல்வது இலகுவென்றே பதில் கூறுகிறேன். பிரியத்தோடும், பக்தியோடும், ஊக்கத்தோடும், நமது கடமையை நிறைவேற்றுவதைவிட அதைச் செய்யாமலிருக்க வேண்டி ஆக்ஷேபனை விதர்க்கங்களை யுண்டுபண்ணவே மிகச் சித்தமாயிருக்கிறோம். இதற்குக் காரணம், பரிதாபமான தாமஸ குணம் பொருந்துமாறு அவ்வளவுக்கு மனம் போனபோக்கின்படி யமைதலே. இப்பொழுது நடைபெற்றுவரும் பயபக்தியின்மைக்கு அனேகமாய் நம் உபாத்தியாயர்களை பொறுப்பாளிகளென்று எண்ணு

கிறேன். முற்காலத்தவைகளை மதித்து வரும்படி நம்மை அவர்கள் நடத்திவரவில்லை. பிரதானமாயுள்ள மதக் கோட்பாடுகளை நமக்குப் போதிக்கவில்லை. சிரத்தையோடு மதித்தல், மெச்சுதல் முதலிய சுபாவமான குணங்களை நம்முள் கிளப்பவில்லை. இப்படியிருந்துகொண்டே தங்களுடைய மாணவர்கள் வித்தியா பருவத்திலும்பிற்காலத்திலும் செய்யும் மனம்போன போக்கான தடுமாற்றங்களைக் கண்டு பிரமை யடைகிறார்கள். இந்த விஷயத்தில் நாமெல்லோரும் நமது கடமையைத் தவறவிட்டுவிட்டோம். இதையே (எனெனில்) நமது ஜாதியின் எதிர்கால முடிவுகள் நம் சிறுவரையே சார்ந்திருக்கின்றன. இவர்களிடம் தெளிவாய்த் தங்கியிருக்கும் நூதனமாயுண்டான பக்தி யுபசார ஹீன குணத்தைப் போக்க வெகுவாய் முயலவேண்டும்.

மாணவர்கள் இராஜாங்க விஷயத்தில் தலையிடுவது தப்பாயும், கெடுதி பயக்கக்கூடியதாயு மிருக்கிற தென்பதைப்பற்றி நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியது அவசியமில்லை. பக்குவமடைந்தோரே இராஜ தந்திரத்திற்குரியவர். மேலும், இராஜ்ய விஷயமாகச் சிரத்தை யெடுத்தல் மாணவரின் மனத்தை நியாயமான தங்களுடைய காரியங்களினின்றும் திருப்பிவிடுமென்பது திண்ணம். இன்னும், இராஜாங்க விஷயமானது ஒவ்வொரு தேசத்திலும் முக்கியமான படிப்பாயிருப்பினும் நமது நாட்டில் அத்தியாவசியகமாய்ச் செய்யப்படவேண்டியது கல்வி, ஜனாசாரம், இலக்கியம், கைத்தொழில்—இவை சம்பந்தமான காரியமே; நம்மில் பெரியவர்களும் அளவிற்கு மிஞ்சி இராஜ்ய முறையில் பிரவேசிக்கிறார்களென்றும் கருதுகிறேன். இதுபற்றியே, மாணவர்கள் இராஜாங்க முறையில் தலையிட்டு, பயிற்சியினாலுண்டாகும் நன்மைகளை யடைதற்கும் வாழ்க்கையில் தங்கள் கடமைக்காகச் சித்தப் படுத்தற்குமுரிய காரியத்தைக் கவனியாமலிருப்பது கேவலமாயும், வெறுக்கத்தக்கதாயும், கேடு விளைவிப்பதாயுமிருக்கிறதென்பது தெள்ளிதிற் புலப்படும்.

இங்ஙனம் மனோலக்ஷ்யங்களின் இன்றியமையாமையையும், பயிற்சி (அபிவிருத்தி)யின் மேன்மையையும், தற்கால இந்திய மாணவ ஜீவியத்தின் குறைபாடுகளையும், அவைகளை நீக்கும் வழிகளையும் பற்றிச் சொன்னேன். இனி எனது அபிப்பிராயத்தில் இந்திய இளைஞர் ஊக்கத்தோடு சிரத்தையெடுக்கவேண்டியதாயும், நிறைவேற்றப்பட்டால் முன்னெக்காலத்திலும் அடையப்படாத மகிமையுள்ள மகோன்னத பதவிக்கு நமது பரதகண்டத்தை உயர்த்தக்கூடியதாயுமுள்ள சில மனோலக்ஷ்யங்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவில் கல்விகற்ற இக்காலத்தவர் ஜீவனாம்ச காலக்ஷேபங்களில் மாத்திரம் மூழ்கி, வாழ்வில் பிறிதொரு நோக்கமுமின்றித் தங்களது பிற்காலப் படிப்பையும் (Post graduate study) விட்டுவிடுகிறார்களென்பதே அவர்களிடமுள்ள பெரிய குறைபாடு. அன்னிய பாஷையைக் கற்றல் மிகச்சிரமமான காரியமென்பது எனக்குத் தெரியும். வித்தியர்காலமெல்லாம் முடிந்தபின் ஒருவன் குற்றத்தண்டனைக்குரிய ஊழியத்தவணை தீர்ந்த பிறகு விடுதலை செய்யப்பட்டதுபோல் நினைக்கிறான். ஆனால் நமது ஜாதியின் சத்தானது மிகவும் க்ஷீணித்திருக்கிறது. இதனால் அது செய்யவேண்டிய காரியங்களை நிறைவேற்ற இயலாமலிருக்கிறது. நாமும் நமது வித்தியாகாலம் முடிந்தபின் நமது மனோத்ஸாகத்தையும் மனோதிடத்தையும் காப்பாற்றிக்கொள்ள முடியாமலிருக்கிறோம். வாழ்க்கையில் (உண்டு திரிவதைத் தவிர) வேறொரு நோக்கத்தை வைத்துக்கொண்டும், பிற்காலப் படிப்பின் மூலமாய் மனோமுயற்சியை அதிகமாய் விருத்திசெய்வதுமே ஜீவியதாதுவாயிருக்கின்றன. சோம்புதலும் கொழுப்பான போஷணையுங்கொண்டு மேல்நோக்கமின்றி மௌட்டியத்தோடுகூடிய வாழ்க்கையால் நேரும் கெடுதிகளினின்றும் இவைகளே நம்மைக் காப்பாற்றக்கூடியவை. நம்மில் ஒவ்வொருவரும் அவரவர் மனதுக்கிசைந்த விஷயத்தையேற்றுக்கொண்டு நமது தாய்நாட்டின் நன்மைக்காக அதைச் செவ்வனே நிறைவேற்றிவரட்டும். பரவசப்படுத்தும் கவிகற்பனையாலாவது மனோரம்மியமான சங்கீதவித்தையாலாவது நம் சகோதரர்களைக் குதூகலப்

படுத்துவது நம்மில் எல்லாருக்கும் முடியா மலிருக்கலாம். நவநாகரீகமான சாஸ்திர ஆராய்ச்சியின் இரகசியங்களைக் கண்டுபிடித்து இன்பமூட்ட ஒவ்வொருவருக்கும் இயலாதிருக்கலாம்; தெய்வாம்சமான சௌந்தர்யத்தையும் ஆனந்தத்தையும் ஸாக்ஷாத்கரித்து அதனால் வரும் சொல்லொணாப்பெரும் பேறடையக் கூடாதிருக்கலாம். ஆனால் சிறியதாயினும் உபகாரமாயுள்ள காரியத்தை யேற்றுக்கொண்டு நம்மாலியன்றவளவு பூர்ண மனதுடன் தாய் பூமிக்கு உழைத்து வருதல் நிச்சயமாய் நம்மால் சாத்தியமானதே. இதைப்போன்ற உயர் நாட்டங்களுடைய சமயங்களும் மானிடவர்க்கத்தின் சுகம்பெருகவும்,ஸர்வேச்வரனை மாட்சிமைப்படுத்தற்காகவுமான கைங்கர்யங்கள் இருந்தாலொழிய வாழ்க்கையானது வாழ்க்கை யெனப்படாது. கேவலம் சுயநல நோக்கங்களிலே நாம் அதிகமாய் மூழ்கியிருக்கிறோம்; அதனால் ஈச்வரனுக்கும், மனுஷ்யனுக்கும் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி நாமே ஞாபகப்படுத்தியும், அடிக்கடி பிறரால் உணர்த்தப்பட்டும் வந்தாலொழிய நாம் அவைகளை முற்றிலும் மறக்கும் இயல்புடையவராயிருக்கிறோம். ஆகையினால்தான் இது உங்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும் கூறலுற்றேன்.

இக்கால வித்தியா முறையானது, ஜாதியாரின் அபூர்வகுணத்தை வெளிக்கொண்டு வரவில்லையென்பது அதன்மேற் சாட்டப்பட்ட பெருங்குறைபாடுகளிலொன்று என்பது உங்களுக்குத் தெரிந்ததே. கல்வி முறையிலுள்ள குறைகளைப்பற்றி முன்னமே கொஞ்சம் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மனோபாவத் துறையிலும் நம்முன்னோர்கள் மகத்தான காரியங்களைச் சாதித்த இந்நாட்டிலேயே இப்பரிதாபமான நிலை வருவதற்குக் காரணம் மற்றும் சில உண்டு. ஜீவியத்தில் முன்புள்ள ஒருப்பாடும், காரியாதிகளின் ஒத்த சம்பந்தமும் வரவர நிரம்ப க்ஷீணமடைகிறதென்பது நமது ஜனங்கத்தைச் சிறிது ஆராய்ந்து வெளிப்படையாய் நோக்கினும் தெரியாமற்போகாது. மனோ சுயாதீன காலாரம்பங்களிலெல்லாம் சிற்சில முக்கிய நிலைகள் ஸதாமேலிட்டுக்கொண்டிருந்தன. கலைஞானமும் கிரந்தங்களும் புதிதாய் விருத்தியடைந்த காலங்களில் ஜாதியார் மகோன்னத நிலைமைக்கு வருவாரென்பதில் சிரத்தையாயும் திடமாயும் நம்பிக்கையுறுதலும், சுயாதினமான விசாரணையும்,மேல்நோக்கிய மனோபாவமும் பிரகிருதமாயிருந்தன. இந்தியாவில் ஆங்கில அரசாட்சி நிலை நிறுத்தப்படும் வரை நமது ஜனங்க ஜீவியமானது குழப்பமடைந்து சமநிலையற்றிருந்தது. பிராசீனமான ஜீவிய ஒருமைப்பாடு பலவிதமாய் நிர்ப்பந்தமடைந்தது. கலையும் கிரந்தங்களும் சிறப்பாவது ஜனபிமானமாவது அடைந்ததில்லை. இந்தியாவில் ஆங்கில அரசியலும் ஆதிபத்தியமும் மேற்கொண்டபிறகு இரண்டு நாகரீகக்கலப்பின் காட்சி புலனாயிருந்தது. ஸ்தூலப்பிரபஞ்சத்தினின்று உபமானமொன்று கூறுவோம். பெரிய நீரோட்டங்களிரண்டு கலக்குங்கால் பல சுழிகளும் பின்னோக்கிய இழுப்பும் உண்டாவதைக் காணலாம். அதன் பிறகு இரண்டும் சேர்ந்து முன்னிலும் அதிகரித்த வேகத்தோடும் கம்பீரத்தோடும் பாய்கின்றன. இவ்விதமாக மனோமுயற்சி தேகமுயற்சியான இவ்விரண்டின் துறைகளொவ்வொன்றிலும் புதியதும் முரண்படுவதுமான கட்டுரைகளை நிறைந்துள்ளதையும் ஜனசமூக நிலையானது மிகுந்த திகைப்பை யுண்டுபண்ணுகிறதென்பதையும் காணலாகும். நாம் எந்த மார்க்கத்தில் செல்கிறோமென்றும் நமது பிரவர்த்தியை எப்படிச் செலுத்திவருகிறோமென்றும் போதுமானபடி உணரவல்லவர்களாயிருப்பதற்கு இச்சமயம் நம்முடைய நிலைமையைத் தெரிந்து நியாயமாய்ப் புரியவேண்டிய கடமைகளை யுணர்ந்துகொள்வதே செய்கடன். என் கருத்தின்படி முக்கியமாயும் சாத்தியமாயுமுள்ள தொழில் முறைகளைப்பற்றி இனி சொல்லுகிறேன். நான் எடுத்துரைக்கப்போகிற லக்ஷ்யங்களை நீங்கள் ஏற்றுக்கொள்விர்களென்றும் நமது காலத்திலேயே அவைகள் சித்திக்கப்பட்டு பலன்பெறும் என்றும் நம்புகிறேன்.

---

(இந்த வியாஸம் அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.)

# சரித்திரம் படிப்பதன் பயன்

## BENEFITS OF HISTORICAL STUDY

(131-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுநிற்க, புஸ்தகம் படியாமலே நாம் பல விஷயங்களையுமுணரலாம். எஜிப்த், அஸ்ஸிரியா முதலிய பெரிய ராஜ்யங்கள் 3,000 ஆண்டுகட்கு முன் எவ்வித உன்னத நிலையிலிருந்தனவென்பதைக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சித்திரப்படங்கள், கற்சிலைகள், மாதிரிக் கட்டடங்கள், பழைய கருவிகள் முதலியன மிகவுந்தெளிவாக விளக்குகின்றன. இன்னும் பழைய ஆலயங்கள், குகைகள், கோட்டைக்கொத்தளங்கள் முதலியவற்றை நுணுகி ஆராய்ந்தாலும் முற்காலத்து நாகரீகத்தின் பெருமையும், அக்காலத்துள்ளவர்களின் சீரும் சிறப்பும் புத்திகூர்மையும், கைவன்மையும் இனிது விளங்கலாம்.

பலபுஸ்தகங்களைப் படித்துத்தான் பண்டைக்காலத்து நிகழ்ச்சிகளை யுணரவேண்டுமென்ற நியதி கிடையாது. ப்ளுடார்க் என்ற யவனுசிரியர் எழுதியுள்ள க்ரீஸ் ரோமாபுரி வாசிகளுள் மேதாவிகளின் ஜீவித சரித்ரங்களைப்போலுள்ள நூல்களைப் படித்தால் சரித்திரத்தின் பல பகுதிகளை நாமுணரக் கூடுமாயினும், அவைகளின் தொடர்பு நமக்குப் புலனாகாது. தொடர்பை நீக்கிப்படிப்பது கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போலாகும்; உண்மையான ஞானத்தை அது ஒருபோதும் நமக்கு அளிக்காது. சரித்திரத்தின் ஒழுங்கும் உடலின் வளர்ச்சியும் பெரும்பாலு மொத்துள்ளன. ரக்தவோட்டம், எலும்புக் கட்டு, நரம்பு மண்டலம் முதலியவற்றை யறியாதானொருவன், தேகத்தைத் துண்டுபடுத்திப் பரிசோதித்தால் உடலினது அமைப்பை உண்மையாக அறிவானோ? அவ்வாறு சோதிக்கப் புகுவது பிணத்தைப் பரிசோதிப்பதை யொக்கும். அது போலவே, நாமும் சரித்திரத்தைத் துண்டு படுத்திப் படித்தால் நமக்கு அதில் கூறப்படும் விஷயங்களின் தொடர்பு ஒன்றும் விளங்காமல் யாவும் இருண்டு கிடக்கும். அவைகளின் சாராம்சங்களை க்ரகிப்பது துர்லபமாக முடியும். தெளிவாக எதையுமறிவது கூடாமைபற்றி மயங்கித் திகைப்போம். இவ்வாறன்றி, சரித்திர முழுமையுஞ் சோதித்துப் படித்தால், அதன் பல பகுதிகளின் தொடர்பும், காலத்திற்கேற்ப நாடு அடைந்த மாறுபாடுகளும் சீர்திருத்தங்களும், அவைகளின் காரணங்களும், நாகரீகம் படிப்படியாக வளர்வதும், நாடுகள் ஒன்றையொன்று பேதிப்பதும், பல அபிப்ராயங்கள் பல நிகழ்ச்சிகளுக்குக் காரணமாவதும், அந்நிகழ்ச்சிகளால் அவ்வபிப்பிராயங்களே பின்னால் முற்றிலும் மாறிவிடுவதும் ஆகிய பல அருமையான விஷயங்கள் அங்கையங்கனிபோல் வியக்தமாகத் தெரிகின்றன.

சரித்ரத்தினது போக்கை யறிவதற்கு அதன் பலபகுதிகளையும் ஊன்றிப்படிப்பது அவச்யமென்று முதலில் அறிந்ததன்பின் எழுகின்ற ஞானமானது சரித்ரத்தின் ஒரு பாகத்தையே நுணுகித் திரப்படிப்பதால் வரும் ஞானத்திலும் சிறந்ததாகும். சரித்ர முழுமையும் ஒழுங்காக அறிவதற்கு அதன் பலபகுதிகளைப் பொதுவாகக் கற்றுணர்வது இன்றியமையாததென்று தெரிந்துகொண்டபிறகு விஷயப் பரப்பைக்கண்டு நாம் திகிலடையோம். சரித்ரத்தின் ஸ்வயரூபத்தை அறிந்துகொண்டால், மனம் போனவாறு அதைத் துண்டித்துப்படிப்பது யாதொரு பலனையுந் தராதென்பதையும் அவ்விதஞ் செய்வது பலவுருவங்களடங்கிய சித்ரப்படத்தில் உருவமொன்றையே தனித்து நோக்குவதையும், பலவடிகள் கொண்ட பாக்களில் ஒரு அடியைத் தனித்துக் கேட்பதையுமொக்குமென்பதையும், எவரும் கண்கூடாக வறியலாம். பலகருவிகளில் வாசிக்கப்பெற்ற பாட்டுக்கச்சேரியில் ஒவ்வொரு கருவியும் அதனதன் தொனியால் ஒவ்வொரு ஆனந்தம் விளைப்பதோடு, அனைத்துமொன்றுபட்டு இணைந்து, ஒரு கருவி விட்டதை மற்றொரு கருவி தொடங்கிக் கேட்போர் மனதைக் கவர்ந்து, முடிவில் கருவிகளனைத்தும் பேரின்பம் பயப்பனபோல, சரித்ரத்திலும் பல பகுதிகள் ஒன்றோடொன்றிணைந்து பிந்தியகால முந்தியகாலச் செய்திகளை விரித்து விளக்கி, பின்னுள்ளோர் முன்னோரரிய வழி

களைக் கைப்பற்றி பல கிளைகளோடு ஓங்கி வளரும் மரம்போல, முடிவில் பல பகுதிகளுமொன்றாய்த்திரண்டு, படிப்போர்க்கொரு தொடர்பினவாய் இன்பம் பயக்கின்றன.

சரித்ரத்தை மிகவும் எளிதாக அறிவதற்கு மற்றோர் வழியுள்ளது. சரித்ரத்தில் கூறப்படுகிற பெரியோராகிய உத்தம சீலரின் அரிய செயல்களையும் குணங்களையும்பற்றிப் படிப்பது அவ்வழியாகும். லோகோபகாரமாக அவர்கள் செய்த நன்மைகள் யாவும் அவரது ஜீவித சரித்ரமூலமாக வெளியாவதோடு, அக்காலத்து நாகரீகத்திற்கும் கொள்கைகளின் முதிர்ச்சிக்கும் அவரே அறிகுறியாதலின், அவைகளில் மக்களடைந்த மேம்பாட்டை விஸ்தாரமாய் நாமறியலாகும். நம்முன்னோரது சிறப்பை உண்மையாக அறிந்து அவரைப் போற்றுவோமாகில், நந்தேசத்து முற்கால நிலைமையை நாமுள்ளபடி அறிந்தவராவோம். முன் நிகழ்ந்த அருமையான செயல்களைப் படிப்பதில் பக்தியும், விச்வாஸமும், களிப்பும் நமக்கு ஏற்படாவிடில் அவைகளைப் படித்துத்தான் பயனென்னை? நம்மைப் பெற்று வளர்த்த தாய்தந்தையரும், நமக்குக்கல்வி கற்பிக்கும் ஆசானும், நம்மை நிழல்போல் தொடர்ந்து உதவிவரும் நண்பினரும் சரித்ரங்கூறுகின்ற அப்பெரியோரைப்போல அத்துணை சிறந்த உபகாரிகளாகார். நாம் தற்காலத்தில் நன்கு மதித்துக்கொண்டாடுகிற நாடு, ஸ்வயவதிகாரம், உடன்படிக்கை, கல்வி, அறிவு, தொழில், கொள்கைகள், நியாய அநியாய வுணர்ச்சிகள் முதலியவெல்லாம் அவர் தந்தவைகளே.

மனிதர் வ்ருத்தியடைந்ததைக் குறிக்கும் சரித்ரத்தில் என்ன பொறுமை வெளியாகின்றது! என்ன வீரம் வெளியாகின்றது! தமக்கென வாழாது எத்தனை பேர் தமது உயிரையும் தாம் எடுத்த கர்மத்திற்கு த்யாகஞ்செய்திருக்கிறார்கள்! தன் பிள்ளைகளைப் பாதுகாப்பதில் தான் பட்ட கடுந்துயரங்களைக் கண்டெழுதிய பத்திரத்தைப்பின்னர் அப்புத்ரர்களே படித்தறிந்து மெய் புளகி, நெஞ்சங்கனிந்து, கண்ணீர்பெருகி உருகுவது போல, நமது பெரியோர்கள் நமக்காகப் பட்ட கஷ்ட நிஷ்டூரங்களையும் அவரது அரிய செயல்களையும் நாம் சரித்ரத்தில் படித்து நெக்குருகி அனலிடையிட்ட மெழுகு போலாகிறோம். நாம் சுகப்படும் பொருட்டே அவர் கஷ்டங்கட்குள்ளானார். நாம் அறிவினராவதற்கே அவர் துன்பக்கடலை நீந்தினார். நாம் கவலையற்று வாழ்வதற்கே அவர் தமது குருதியை நீர்போற் சொரிந்து தம்முயிரையுமிழந்திருக்கின்றனர். நம்பொருட்டின்றேல், வேறெவர்க்காக அவர் தம்முடல், பொருள், ஆவி, கீர்த்தி, மேன்மை முதலியவற்றைத் துறந்திருக்கின்றார்? "என் பேரழிக, எனது நாடு வாழ்க" என்ற வுயர்ந்ததோர் கொள்கையைக் கடைப்பிடித்து, எடுத்த கார்யத்தைக் கைவிடாது சாதிக்கும் சீரியோர், கீர்த்தியையும் பெருமையையுமடைய விரும்பி வேலைகளைச் செய்யவில்லை. தொட்ட கர்மம் கைகூடி அக்காலத்தவரும் பின்னுள்ளோராகிய நாமும் கவலையின்றி உயிர் வாழ்வதற்காகவே அவர்கள் முயன்றார்கள். தங்களாலியன்றவரை உலகத்தைமுன்னிலும் மேன்மையடையச் செய்யவேண்டுமென்ற வைராக்யமானது அன்னாரை மேன்மேலும் உழன்று வேலைகளைச்செய்யும்படி தூண்டிற்று. சில வேளைகளில் சில்லோர் சில காரணங்களால் கார்யசித்தி பெறாது தமது பதவியையிழந்து வறுமையிலழுந்தி மனம் நொந்து கஷ்டப்படும் சமயத்திலும், அவரது மனோ வைராக்யமும் உயர்ந்த எண்ணங்களும் அவர்க்கு மன ஆறுதலும் திடமுங்கொடுத்தன. கன்மேலெழுத்துப்போல் என்றென்றும் நின்று நிலவி உலகு கொண்டாடும்படித் தமது அபிப்ராயங்களை அப்பெரியோர்கள் எழுதிவைத்துச் சென்றுள்ளார்கள். பின்னுள்ளோர் அப்புஸ்தகங்களை மாணிக்கம்போல் மதித்துக் கொண்டாடுவதை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வண்ணம் எழுதிச் சென்றவர்களில் சிலர் மேனாட்டாரில் மில்டன், டாண்டி முதலியோராவர். நம்மவருள் அளவந்தார், இராமானுஜர் முதலிய பெருமக்களின் சரித்ரத்தை நாம் படிக்கும்போது நமது மன நிலை எவ்வாறு வேறுபடுகின்றதென்பதை ஒவ்வொருவரும் நேரிற்கண்டறியலாம். இத்தகைய பெருந்தகையாளரே உலகாப்புகழ்பெற்று பல்லூழி

(இதன் தொடர்ச்சி 183-ம் பக்கம்.

# ஜய உருமால்

## THE TURBAN OF SUCCESS

(ஒரு சிறிய கதை)

இருதயபுரம் தாலுகாவைச்சேர்ந்த இடி
யனூரில் இருளப்ப முதலி என்ற இரண்டா
வது கிரேட் வக்கிலொருவ ரிருந்தார். அவ
ரொரு கர்நாடக கிரிமினல் வக்கில். முதல்
ஸன்னது பெற்றபிறகு அவர் ஸிவில் கோர்
ட்டைக் கண்ணாலும்கூடக் கண்டதில்லை. அவர்
சொக்காய்களுக்குப் பொத்தா னென்பதே
கிடையாது. மேற் சொக்காய் குடுகுடுப்பாண்
டியைப்போல் குதிக்கால்வரை தொங்கும்.
அதைக் கழுத்துக்குப் பக்கத்திலும் மார்புக்
குக்கீழும் வெள்ளை நாடாவால் முடிந்துவைப்
பதுவழக்கம். தலையில்கட்டியிருக்கும கறுப்பு
நிறமுள்ள உருமாலில் ஜரிகைக்கொட்டடி
போட்டிருக்கும். சுமார் 18 முழம் நீளமுள்
ளது. அது அவர் வைத்திருந்த மூக்கரச்சி
வைப்பாட்டியின் புடவை யென்றும், ஒரு
நாள் விடியற்காலததில் இருட்டாயிருக்கும்
பொழுது ஒரு கேஸ் விஷயமாக அவள்
விட்டிலிருந்து புறப்படுங்கால், சீலையும 18
முழமாதலால் ஸ்டாண்டிலிருந்து மாறுதலா
யிதைஎடுத்துக்கட்டிக்கொண்டுவந்ததாகவும்
மாஜிஸ்டிரேட் உருமாலைப்பார்த்துபுதுதிரு
சாயும அந்தஸ்தாயு மேற்வையாயு மிருப்ப
தாகப் பரிகாசஞ்செய்து சிரித்ததை, அப்பா
வியானதால் அவர் நிஜமென நம்பி அதிகாரி
யின் மனதுக்குச்சந்தோஷத்தையுண்டுபண்
ணவெண்ணி இச்சீலையையே தலையுருமா
லாக உபயோகித்து வருகிறார். மாஜிஸ்டிரே
ட்டுகள் பலபேர்கள் மாறிப்போனாலும் இந்த
உருமால் மட்டும மாறவில்லை. இந்த உரு
மால் ஆவிவந்ததாம். வாஸ்தவமே அழுக்கு
ஜாஸ்தியாகவிருந்தால் தட்டினால் ஆவ்புறப்
படும். அதிகப்பிரசங்கிகள் புடவை என்று
சொல்வது பிசகென்றும் இம்மாதிரிச் சீலை
கட்டுவதால் தன் விரோதிகள் சிலர் விபரீத
மாய்ச் சொலவதை நம்பக்கூடாதென்றும்
வற்புறுத்துவார். இந்த ரகசியம், இதற்காக
மூப்பது ரூபாய் கிரயம்பெற்ற மூக்கரச்சிக்கு
மட்டுந்தான் தெரியும். இந்த உருமாலைப்போ
லவ்வளவு உபயோகமுள்ள உருப்படி இல்லை
யென்று பிரசங்கஞ்செய்வார். எப்படியெ
னில், கேஸுக்காக வெளியூர்களுக்குச் செல்
லுஞ் சமயத்தில் ராத்திரி காலங்களில் துப்
பட்டியுமதுவே; தலையணையகப்படாத காலங்
களில் கேஸ்கட்டின்மேற் கட்டி தலைக்குக்கீழ்
வைப்பதுமதுவே; ஸ்நானஞ்செய்து வஸ்திர
முலரும்வரை பட்டுமடியுமதுவே; காம்பு
(Camp) களிலகப்படும் கரிகாய் தானியம்
வகையராக்களைக்கட்டும் சாக்குமதுவே; ஸர்க்
யூட்டில் கேஸ்போடுமிடங்களில் சாவடிக்
கெதிரிலிருக்கும் புளியமரத்தடியில் புழுதி
மேல் உட்கார விரிப்பதுமதுவே. ஆகையா
லிவரை புளியமரத்தடி வக்கீலென்றும்
சிலர் சொல்வார்கள். இந்த உருமாலைக் கட்
டிக்கொண்டுபோய் கோர்ட்டில் நின்றால்,
ஆஜராகும் கேஸ் நிச்சயமாய் ஜயிக்குமென்
று கட்சிக்காரர்களிடம் புகழ்ந்து பேசுவ
தாலிவ்வுருமாலைக் கட்டிவரும்படி குடியான
வர்கள் கேட்டுக்கொள்வது வழக்கமாயி
ருந்தது. உருமாலைத் தலைக்குவைத்து நீண்ட
மேற்சொக்காயையும் மாட்டிக்கொண்டு இடு
ப்பிலிருக்கும் வேஷ்டி அழுக்குப்படாமலி
ருக்க முழுந்தாளுக்குமேல் தூக்கிக்கட்டி
கேஸ்கட்டைக் கைப்பிடித்து வெளிப்புறப்
படுவதைப் பார்க்கு மிக்காலத்துப் பாஷன
பிந்த (fashion) இளைஞர்கள் கொக்கரித்து
நகைப்பார்கள். "தாதா முண்டாசுமேல் ஒரு
சலகை நெல் வைத்தாலும் பாரம் தலைமே
லுரைக்காது" என்று சிறு பிள்ளைகள் ஏசு
வதைக்கேட்டுப் பேசாமற் சிரித்துக்கொ
ண்டு போவார்.

ஆனால் குடியானவர்களிடம் பணம் பறிப்
பதிலும்யுக்தியாய்கேஸுகளைப்புரட்டுவதி
லும் வெகு சமர்த்தர். நல்ல அறிவுள்ளவரா
தலால் சட்டத்தின் அபிப்பிராயத்துக்கி
ணங்க சாக்ஷிகளைத் தயார்செய்து கேஸ்
களைச் சரியான வழியில் நடத்தித் தன்னால்
கூடியமட்டில் ஜயிக்க ஏற்பாடு செயவார்.
கேஸ் கொண்டுவருபவர்களிடம் ஸலைஜன்
யமாகச் சொல்லி முதலில் கொஞ்சமா

---

காலம் பல்லோராலும் போற்றப்படுகிறார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற தெய்வப்புலமை திருவள்ளுவனார்
வாக்கிற்கு அவரே இலக்கு.

கவே பீசு (Fees) பேசிக்கொள்வார். கேஸை நடத்த ஆரம்பித்தபிறகு கொஞ்சங் கொஞ்சமாகக் குடியானவர்களுடைய புதை யற்குவியல்களைக் குறைப்பதற்கு வழிதேடு வார். சிற்சிலாவாய் வெகு சாமான்களைக் கைப்பற்றுவார். அவர் வீட்டிலொரு பெட் டிக்குள் செலவானதுபோக மிகுந்தது ஐந்து ரீமிக்குக் குறையாமற் காயிதங்களும் இரண்டு டஜனுக்குக் குறையாமற் பலவித பென்ஸலும் அரை ரூபாய்த் தலைகளும் காணப்படும். முதலிக்கு புத்திர சம்பத்து மிகுந்திருந்தமையா லிக்காலத்திற் பல நோட்டுகளை யபேக்ஷிக்கும் மக்களுக்காக இவைகள் குடியானவர்களைக்கொண்டு சேக ரிக்கப்பட்டன. அவருக்கு குமாஸ்தா இல் லையானாலும் எழுத்துக்கூலிக்காக கேஸ்முடி வில் மூன்று ரூபாயாவது வாங்குவார். இதைக்கொண்டு மக்களுக்குச் சம்பளங் கொடுத்துவிடுவார். தர்ம காரியத்திற்கும் பொது நன்மைக்கும் ஒரு பைசாகூட மன தொப்பிச் செலவுசெய்யாத குடியான், முறட் டுச்சண்டையால் விளையும் வியவகாரங்களில் விவரமில்லாமற் பணத்தைப் பை பையாய் வாரி இறைக்கத் துணிவான். சகஜமாகக் கேட்டால் தன்னிட மொருகாசுகூட இல்லை, சாப்பாட்டுக்குக் கடன் வாங்கினதாகச் சொல்லுமோர் குடியானைத். தக்ஷணமே நூறு ரூபாய் செலவு செய்யாவிடில் ரிமாண் டிலடைப்பார்கள் என்றால் இடுப்பைச் சுற் றிக் கட்டியிருக்கும் பையிலிருந்து ரூபாய் நூறும், தன்னைத் தப்புவிப்பதற்கு இனும் ரூபாய் பத்துங் கொடுத்துவிடுவான். இரக்க மற்ற சில கிழுத்தியோகஸ்தர்களும் பிடி ஷன் ரைடர்களு மிப்படி பணம் பறிப்பது வழக்கம்.

கொடியனூரில் நடந்த ஒரு கொலைக் கேஸில் கோப்பராய கவுண்டனென்னு மவ் வூர் கொத்துக்காரனைச் சம்பந்தப்படுத்தி மாஜிஸ்டிரேட் விசாரணை முடிந்தவுடன் அவனை ஸெஷனுக்குத் (Sessions) தாக்கல் செய்து ஜில்லா கோர்ட்டில் விசாரணைக்கு வருஞ் சமயமாயிருந்தது. கொத்துக்காரக் கொப்பராய னென்பவன் ஏராளமாய்ப் பணத்தைக் கொப்பரையில் போட்டுப் தைத்துவைத்திருப்பதாக ஒரு வதந்தி. அவனுடைய மூத்தமகன் குட்டியண்ண னென்பவன், இருளப்பமுதலியிட மொரு நாள்வந்து "தாங்கள் புத்திசொன்னபடியே பட்டணம்போய் ஒரு வக்கீலை ஏற்பாடுசெய் யவும், அய்யனை ரிமாண்டிலிருந்து விடுவிக்க ஹைகோர்ட்டில் அப்பீல்செய்யவும் தீர்மா னித்திருக்கிறேன். இன்றைக்கே நீங்களும் கூடவரவேணும்" என்று கேட்டுக்கொண் டான். இருளப்ப முதலியின் சகோதரிக் கோர் மகளுண்டு. அப்பெண்ணின் புரு ஷன்மதராசில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் வேலையிலிருக்கிறார். அவர்களைப் பார்க்கப் போகவேண்டுமென்று சிலநாளா யெண்ணி யிருந்தாராலும் சொந்தச்செலவு செய்து கொண்டு போய்ப்பார்க்கச் சம்மதமில்லை. இச்சமயத்திற் போக நேர்ந்ததை யுத்தே சித்து முன் கவுண்டனுக்குப் புத்திசொன் னது ஆனாலும் தனக்குப் பட்டணம்போவ தால் பெருத்த நஷ்டம் விளையுமென்றும் தன்னுடைய மற்ற கேஸுகள் வீணாகு மென்றும் சாக்குச் சொல்லுவதுபோல் பாசாங்கு செய்தார். குட்டியண்ணன் கட் டாயப்படுத்தினதின்மேல் தனக்கு நஷ்டம் வந்தாலும் கவுண்டர் கஷ்டத்தை நிவர்த் திக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு புறப்பட யத்தனித்தார். ஜாஸ்தி செல வாகுமென்று ஜாடையாய்ச் சொன்னார். அச்சமயத்திலவர் ஸம்ஸாரம்வந்து அரிசிக் காரனுக்கு ஐம்பது ரூபாய் கடன் கொடுக்க வேண்டியிருப்பதால் பாதியாவது கொடுத் தால்தான் ஒரு மூட்டையரிசி யனுப்புவதா கச் சொல்லுகிறானென்று முணுமுணுத்துச் சொன்னாள். அதற்கு வக்கீல் தன்கையிற் பணமில்லையென்றும், கவுண்டர் காரியமாக ப்பட்டணம் போவதால் வந்தபிறகு கொடுப் பதாகச் சொன்னார். அதுவரையில் பட்டினி யாக இருக்கலாமா, கவுண்டரைக் கேட் டால் கொடுக்கமாட்டாரா என்று அந்தம் மணி கேட்டாள். அதற்கு முதலி, "நான் என்ன அவரோடே பட்டணம் போக பீஸா பேசியிருக்கிறேன். தாக்ஷண்யத் திற்காகப் போகிறேன். இருந்தாலுமிருக் கட்டும். கவுண்டரே, ஒரு மூட்டைக்கு 18 ரூபாயைக் கொடும். அப்புறம் பேசிக் கொள்ளலாம்" என்று கவுண்டரிடம் கை

யைநீட்டினார். ஜாஸ்தி செலவுக்கில்லாததால் 10 ரூபாய் போதாதாவென்று எடுத்துக் கொடுத்தார். முதலிக்கு கோபம்வந்துவிட்டது. "என்ன கவுண்டரே, பணமில்லாமலா என்னையுங் கூட்டிக்கொண்டு பட்டணம் போய் பெரியவக்கீலை பேசப்போகிறீர். நான் வரவில்லை. நீர் மாத்திரம் போகலாம். 8 ரூபாயிலேயா வந்துடுத்து, ஆயிரம் பதினாயிரமா செலவு செய்யரதிக்கிருக்கச்சே. பணமில்லாவிட்டால் நான் உமக்குக் கடன் வாங்கிக்கொடுக்கிறேன்" என்றார். கவுண்டரும் பயந்துகொண்டு 8 ரூபாயைக் கொடுத்தார். புறப்படும் சமயத்தில் எண்ணெய்க்காரி "5 ரூபாய் பாக்கி கொடுக்கவேணும். 3 ரூபாயாவது கொடுத்துவிட்டுப் போங்கள்" என்று சொல்லி எதிரேவந்து நின்றாள். "கவுண்ட்ரே சரியாயிருக்கட்டும் 2 ரூபாய் கொடும்" என்று சொல்லி செக்காத்தியை அனுப்பிவிட்டு வண்டியேறினார். வண்டி நான்கடி சென்றதும், "அய்யோ ஜய உருமாலை மறந்துவிட்டேனே" என்று மங்களம் பாடிக்கொண்டு கீழே யிறங்கினார். அதற்குள்ளவர் ஸம்ஸாரம் அதை யெடுத்துக் கொண்டுவந்து கையிற்கொடுத்து "அலமிக்கும் கோமளத்துக்கும் 4 பாவாடை தெச்சுண்டு வரணம். பலமாதிரியாய் 10 திநுசு ரவிக்கைத் துண்டுகளும் கொஞ்சம் மஞ்சள் மிளகு முந்திரிப்பருப்பு பெருங்காயம் இன்னும் அகப்பட்டதை வாங்கிண்டு வரணும்" என்று கட்டளையிட்டாள். வக்கீல் சரியென்று சொல்லி கொஞ்சதூரம் போகும்பொழுது, அம்மாள் பெருங்காயம் மறக்க வேண்டாமென்றாள். ஸ்டேஷனுக்கருகே செல்லும்பொழுது "இன்றைக்கென்னமோ தலை வலிக்கிறது என்று சவுக்கத்தால் தலையை யிருகக் கட்டிக்கொண்டு, கவுண்டரே, நீரு மிரண்டாவது கிளாஸிலே ஏறிக்கொண்டால் சவுக்கியமாய் தூங்கிக்கொண்டு போகலாம்" என்றார். இருவர்களுக்குமே மூன்றாவது கிளாஸ் டிக்கட்டு வாங்க உத்தேசித்திருந்த கவுண்டர், வக்கீலுக்குப் பாசாங்குத் தலைவலியென்று சொன்னதால், அவருக்கு மட்டும் இரண்டாவது கிளாஸுக்கு டிக்கட்டு வாங்கினார். முதலியும் மேல் தட்டில் (Berth) ஜய உருமாலை தலைக்குவைத்துப் படுத்தார்.

அடுத்தநாள் காலை 8 மணிக்கு மதராஸில் வந்திறங்கும்வரை நிர்விசாரமாகத் தூங்கினார் கவுண்டரால் எழுப்பப்பட்டவுடன், 'அதற்குள் பட்டணம் வந்துவிட்டதா' என்று சொல்லி எழுந்து வெளியே வரும்பொழுது ஒரு கோச்சுவண்டியைத் தீர்மானம் செய்து அதில் ஏறிக்கொண்டார். கவுண்டர் 'ஜட்கா போதாதுங்களா' என்று கேட்டார் 'அந்தஸ்தாயிருக்காது; மருமகன் தகுந்த உத்தியோகத்தி லிருக்கிறான். நீரும் இதிலேயே வரலா'மென்று அவரையுமேற்றிக்கொண்டு மார்க்கட்டு வழியாய்விட்டு "நான் கையில் ஒன்றும் கொண்டுவரவில்லையென்று உமக்கே தெரியும். வெறுங்கையோடு என் மருமகனைப் பார்க்கப் போகக்கூடாது. எனக்காக சாப்பாட்டுக்குச் செலவில்லை. அவர்கள் வீட்டிலேயே சாப்பிடலாம். நாலு கட்டு வெற்றிலை, ரெண்டுவிசை பாக்கு, ரெண்டுவிசை மஞ்சள், ரெண்டு விசை சினாகற்கண்டு, ரெண்டு டஜன் ஆரஞ்சி, ஒரு டஜன் ஆபிள் போரும். இவைகளை மாத்திரம் வாங்கிக்கொண்டு போனால்தான் மரியாதையா யிருக்கு'மென்று கவுண்டரிடம் 10 ரூபாய் வாங்கிச் சாமான்களை வண்டியில் நிரப்பிக்கொண்டு மருமகன் வீட்டில் போய்கம்பீரமாயிறங்கினார். உள்ளேசென்ற பிறகு, மார்மாவுக்கு கவுண்டர் ஞாபகமேயில்லை. ஸ்நானஞ்செய்து சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளையிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கவுண்டர், கான்ஸ்டேபிலிடம் உத்திரவுபெற்று உள்ளே தலையை நீட்டினார். "ஓகோ! இன்னும் சாப்பிடவில்லையோ. பக்கத்திலே காப்பி கிளப்புக்குப்போய் பலகாரஞ் செய்துவிட்டு வாரும், அப்புறம் வந்த காரியத்தைப் பார்ப்போம்" என்று ஒரு கான்ஸ்டேபிலுடனனுப்பினார். அங்கு சென்றதும் இருவருக்கும் ஸப்ளை செய்யும்படி போலீஸ்காரருத்திரவு செய்தார். பலகாரம் முடிந்தவுடன், பன்னிரெண்டணா கொடுக்கும்படி கேட்டதும் பலகாரத்துக்கு பன்னிரெண்டணாவா யென்று வயிறெரிந்து கொண்டு கொடுத்துவிட்டு வக்கீலிடம் வந்தார்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்)

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 56. தானமது விரும்பு

கொடுக்கவேண்டும் என்ற விருப்பம் மாறாதிருக்கவேண்டும் ஒவ்வொருவனுக்கும் என்பது இந்த ஸூத்ரத்தின் பொதுக்கருத்து. நம்மது என்ற அபிமானம் உலகவஸ்துக்கள் விஷயமாக மானிடர்களிடம் பொதுவாகக் குடிகொண்டுள்ளது. இதனால்ஸுகரமாயும் மனதைக் கவருவதாயும் உள்ள எல்லாவஸ்துக்களையும் நம்மது என்று ஆக்கிக்கொண்டுவிடவேண்டும் என்ற அடங்கா ஆவலாகிய பேய் மானிடஜன்மத்தையே பிடித்துக்கொண்டுள்ளது. இந்த தன்னயம் கருதுவதாகிய மானிடர் குறையே அவர்களை மோக்ஷ வழியில் நடக்கவொட்டாது தடுக்கும் பெரிய மறைப்பு. இதை ஸரிவர நீக்கத் தானத்தை இடைவிடாது விரும்புவதுதான் நல்லவழி. இதுபற்றியே ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் உபதேசம் பெற பிரஹ்மாவை அணுகிய தேவ, மனுஷ்ய, அஸுரர்களுக்குப் பிரஹ்மா பொதுவாக द (த) என்றார். அது மனுஷ்யர்களது அபிமானமான பலத்திற்கேற்ப दत्त (தத்த) கொடு என்று அவர்களுக்குப் பட, அதை ப்ரஹ்மா ஸரி என்று ஒப்புக்கொண்டு 'உங்களுக்கு மோக்ஷத்திற்கு முக்கியத் தடையான வெளிவஸ்து அபிமானம் நீங்க, ஒழுங்குப்படி அபிமானவஸ்துக்களைப் பிறருக்குக் கொடுத்துவந்து, வரவர அபிமானம் குறைந்து முடிவில் அறநீங்கி, மோக்ஷம் அடையத்தகுந்தவர்களாகி விடுங்கள்' என்று விவரித்தார். இதுபற்றியே ஔவையாரும் 'ஈதலறன்' என்றாள்.

மேல் விஸ்தரிக்கப் புகுவதற்குமுன், ஔவையார் முதல் ஆத்திச்சூடி வாக்யம் போல இதுவும் முடிவதால் அங்கு கூறப்பட்டுள்ள அறத்திற்கும் இங்குள்ள தானத்திற்கும் உள்ள வேற்றுமை விளங்கவேண்டும். அறன் என்ற பதத்திற்குத் தர்மம் என்று பொருள். பொதுவாகக் கொடை என்னும் பொருளில் தானதர்மம் என்ற பதங்கள் வழங்கிவருகின்றன. ஆயினும் இவைகளுக்குச் சிறப்பான பொருள்கள் உள. வேத சாஸ்திரங்களில் குறிக்கப்பட்டுள்ள ஜாதிவர்ணாச்ரம, ஸத்ரீபுருஷப் பாகுபாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்பட்டுள்ள அதனதன் நடை உடைபாவனைகளே அறன் அல்லது தர்மமாம். இவைகளுக்கு ஸ்வதர்மம் என்றும ஸ்வகர்மம என்றும பெயர்கள் உண்டு; இதைத்தான் அர்ச்சுனனைப் பகவான் குருக்ஷேத்திர யுத்தகளத்தில் மயங்காது அனுஷ்டிக்கச் சொன்னது. ஔவையாரும் முதல் ஆத்திசூடி ஸூத்ரத்தில் இதைத்தான் வற்புறுத்தினாள். இங்கு கூறப்படும் தானம் என்பது இத்தர்மங்களுள் ஒன்றாயும் எல்லோருக்கும் பொதுவாயுமுள்ள கொடை என்பதே. ஆகவே தர்மம் பொதுச் சொல், தானம் சிறப்புச் சொல். தானம் தர்மங்களுள் முக்யமான ஒன்று.

தானம் யார் வேண்டுமானாலும் செய்யலாம்: இதில் அதிகாரம் எந்த ஜாதி வர்ணாச்ரமத்தானுக்கும் உண்டு. இதுபற்றியே இந்த ஸூத்ரம் பொதுவாக எல்லோரையும் தானம் விரும்பவேண்டும் என்று வற்புறுத்துகிறது. வெறும் கொடைகள் எல்லாம தானமாகா. கூன் குருடு செவிடு முதலியவைகளுக்குக்கொடுப்பது இங்கு விரும்பவேண்டி வற்புறுத்தப்படும் தானமேயல்ல. இந்த ஸந்தர்ப்பத்தில் விரும்பென்று சொல் உண்டாவது காக்கையே கருத்திடு, வேம்பே கசந்திடு என்று இயற்கையைப்பற்றி அனாவசியமாகக்கூறியதுபோலாகும். இம்மாதிரியான இடங்களில் கொடுக்காக் கண்மூடிமானிடன் ஒருவனும் இருக்கமாட்டான். ஆனால் இவைகளைத் தானமென்று கருதும் கற்றறி மூடர் அநேகர் உண்டு. இந்த வெறும் கொடையைச் செய்யும்படி மோக்ஷ வழி காட்டவந்த சாஸ்திரங்கள் அழுத்திக்கூற வரவில்லை, இவைகள் விஷயம வெளிப்படையாதலால். மானிடரிடம் இருந்து கவனக்குறைவால் வலுத்துவரும் உலக விஷய வஸ்து அபிமானத்தை வேரறுக்க வந்த சாஸ்திரீயக்கொடைகளையே இங்கு விரும்பவேண்டும் என்று காட்டப்பட்டுள்ளது.

ஒரு கொடை, தானம் என்ற இந்தச்சிறப்புப்பெயரை பெறுவதற்கு பொதுவாக ப்ரா

ஹ்மணரையே பெறுபவரைக்கொண்டிருத்தல்வேண்டும். ப்ராஹ்மணன் தவிர மற்றவருக்கு இங்கு விரும்பு என்று கூறப்பட்ட தானத்தை வாங்க அதிகாரம் இல்லை. சிற்சில ஸமயங்களில் முக்யமாக விவாஹத்தில் ஸ்வஜாதி மாப்பிள்ளைக்குப் பெண் கொடுப்பது கன்னிகாதானம் என்ற பெயர்பெறும். இது தவிர மற்றைய விஷயங்களில் ப்ராஹ்மணருக்கு சாஸ்திரவிதிப்படிக் கொடுக்கும் கொடைக்கே தானம் என்று பெயர். மற்றையகொடைகள் எல்லாம் வெறும் மனக்கனிவு, இறுமாப்பு, தம்சயம் கருதுவது இவைகளை முன்னிட்ட உபகாரங்களாகும். இவைகளை விரும்பவேண்டும் என்று கூற சாஸ்திரங்கூட வேண்டுமா! உலகத்தவர்களுக்குத் தாமே இவைகளில் முயற்சி உண்டாகிவிடும். மிகுந்த பழக்கமின்றி.

இப்படி எப்பொழுதும் விரும்பவேண்டிய தானத்தை பகவான் கீதை XVII-ம் அத்யாயம் 20-ம் ச்லோகத்தில்:—

கொடுத்தல்விதி என்றுகொடை யாதொன்றுகைம்மா
றடுத்தசைவா தாங்கரிய காலம்—வடுத்தவிரும்
தேசமொடு பாத்திரமும் தேர்ந்துதவப் பட்டிடுமோ
மாசிலது சத்துவமாம் மற்று

என எடுத்துக்காட்டுகிறார். நீக்கவேண்டியதாயும்பொதுவாகத்தானம் என்று கூறப்பட்டு வருவதாயும் உள்ள வெறும் கொடையை பகவான் கீதை XVII-ம் அத்யாயம் 21, 22 ச்லோகங்களில் பின்வருமாறு விளக்குகிறார்.

எக்கொடைகைம் மாறுகக்தோ வப்பயன் விழைந்தோ, தக்கமனம் நொந்தோ தரப்படுமால்— அக்கொடையைக், கற்றோர் இராசதமாக் கண்டுரைப்பர் காசினியில், பற்றருக் கேறனாய் பார்.

உரித்தல்லாக் காலத்தும் தேயத்தும் உற்றுப்
பொருத்தமிலாப் பூரியர்க்குப் போர்பார்-திருத்தமுறு
பூசனையும் இன்றிப் புகழ்ச்சியறப் புக்களித்த
மாசுறுதானம் தாமதம்.

இவைகளுள் முதல் கூறிய ச்லோகத்தை விவரித்தால் புத்திமான் விரும்ப வேண்டிய தானம் இன்னது என்பது வெளியாகும்.

கீதை XVII-ம் அத்தியாயம் 20-ம் ச்லோகத்தில் மூன்றுவித தானங்கள், விளக்கப்பட்டுள்ளன. அவையாவன தேசகாலதானங்களும், பாத்ரதானங்களும். இவைகளுள் தேசதானம் என்பது தீர்த்தயாத்திரைகளிலோ அல்லது ஸாதாரணயாத்திரைகளிலோ திவ்விய தேசங்களில் அதாவது க்ஷேத்திரங்களில் ப்ராஹ்மணர்களுக்குச் செய்யவேண்டிய சாஸ்திரீய தானங்கள். சாஸ்திரங்களில் புண்ணியகாலங்கள் என்று எடுக்கப்பட்டுள்ள அமாவாஸ்யை, கிரஹணங்கள், விவாஹகாலம் முதலியவைகளில் ப்ராஹ்மணர்களுக்கு அல்லது மாப்பிள்ளைக்குச் செய்ய வேண்டிய தானங்கள், காலதானங்கள் எனப்படும். தானம் பெறத்தகுந்த ப்ராஹ்மணர்களிடம் கொடுப்பது பாத்ரதானம். இங்கு தேசகாலதானங்கள் ஒருங்கு சேர்த்துக் கூறப்பட்டது, அவைகள் விஷயம் எளிதில் ஸ்மிருதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம் என்பதைக்குறிக்க. பாத்ரதானத்தை வேறாகப்பிரித்துக் கூறியது ஸ்மிருதிகளிலிருந்து நன்ருக விளங்காததால்: முற்கூறிய தானங்களைவிட மிகச்சிறந்தது முற்கூறியவைகள் ஸாதாரணமாக எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியது. பின்னது மஹாபக்த சிகாமணிகளுக்கு, முன் தானங்களில் வெகு காலப்பழக்க பலத்தால் தான் ஏற்படும். இந்த ரஹஸ்யத்தை உணராப் பெரும்பாலாரும் 'பாத்திரமறிந்து பிச்சையிடு என்பது பழமொழி; ஆகவே ஸத்பாத்திரத்தில் எப்பொழுதும் தானம் செய்வது மேல்: தேசம், காலம் இவைகளில் ஸத்பாத்திரம் கிடைக்காவிடில் தானத்தை நிறுத்திவிடலாம்: என்ற சிறப்புத் தோன்றவே இங்கு பிரித்துக் கூறியிருக்கிறது: மேலும் இக்காலத்தில் கூன் குருடு செவிடு முதலியவைகளைத் தவிர, தின்று கொழுக்கும் ப்ராஹ்மணன் ஸத்பாத்ரமேயாகமாட்டான் ஆகையால் எல்லா தானத்தையும் நிறுத்திவிடலாம்' என்று குதர்க்கம் பேசுவர். இப்படிப்பார்த்தால் பகவான் ஸாத்விகதானத்தைப்பற்றிக் கூறியிருக்க வேண்டியதேயில்லை. தேசகாலதானம் செய்யவேண்டும் என்றுகூறிப்பாத்திரத்தை உணர்ந்துதான் பிச்சையிடவேண்டும் என்ருல் முன்னுக்குப் பின் விரோதமல்லவா? ஆகவே சற்று நிதானித்தால் லௌகிகமாக பாத்ரதானம் என்பதுவெளிப்படையான அபாத்ரமல்லஎன்று கண்டு சாஸ்த்ரீயமாகச் செய்வது என்பது தான்: அதுவும் ப்ராஹ்மணருக்கேதான்,

கூன் ஏருடு விஷயம் முன்னரே ஒதுக்கியாகி விட்டது.

இங்கு கூறப்படும் பாத்திரதானம் என்பதுதான் என்ன? அதன் சிறப்புத்தான் என்ன? என்று ஆராயவேண்டும். ஈச்வர துல்யாளான ப்ராஹ்மணனோ அல்லது ஈசனேயோதான் பாத்திரம் எனப்படும். இந்தப் பாத்திரம் தானம் கேட்கவந்து விட்டால் இன்னதுதான் கேட்கும் என்பதில்லை: பிள்ளையைக் கேட்கலாம் (தசரதர், சிறுத்தொண்டர் விஷயம்), பெண்சாதியைக் கேட்கலாம் (ஸுதர்சனர், இயற்பகை நாயனார் விஷயம்), மூன்றடிமண் கேட்கலாம் (மஹாபலி. அஸுரர்கள் விஷயம்). கொடுப்பவனுக்கோ முன்னர் கூறப்பட்டுள்ள தேசகால தானங்களில் சாஸ்திர முறைப்படி ஏற்பட்டுள்ள பழக்கவேகத்தால், முன் பின் யோசியாது ஈசன் ஆராதனமாக ஸத்பாத்ரங்கள் கேட்டதைக் கொடுத்து விடுவோம் என்று தோற்றும்: கொடுத்தும் விடுவன்: வாங்கும் ஸத்பாத்திரத்திற்கு இவைகளால் ஒன்றும் ஆகவேண்டியதில்லை, கொடுப்பவனுக்கும் கோரிக்கை ஒன்றுமிராது; ஆனால் தானம்கொடுத்ததற்கும் கொடுப்பவனுக்கும் சிறந்த மேன்மை ஏற்படும். இப்படி அமையும் தானத்திற்கே பாத்திரதானம் என்று பெயர். இது ஸ்மிருதி ஒழுங்கில் அகப்பட்டதாக இராது. மற்றைய தேச கால தானங்களைப்போல காம்ய பலனுடன் பொருந்தியதாக இராது. இது பற்றியே இது முன்னிரண்டிலிருந்தும் பகவானால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தத்தானம் ஒன்றுதான் உபகாரம் கருதப்படாமலும், வாங்குபவன் உபகாரத்தைக் கருதாமலும் நடந்தேறக்கூடியது. மேலும் பிராஹ்மணர்களுக்கேதான் தானம் செய்யப்படவேண்டும் என்பதைக் காட்ட பாத்ரமாக தானம் வாங்கவந்துள்ள பெரியோர்கள் எல்லோரும் ப்ராஹ்மணர்களேயாயினர். துஷ்டநிக்ரஹத்தை முக்கியமாக உடைய பகவான் அவதாரங்கள் க்ஷத்ரியர்களாகவோ அல்லது ஜந்துக்களாகவோ காணப்படும். தானம் வாங்கி சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்வதை முக்யமாக உள்ள அவதாரங்கள் ப்ராஹ்மண அவதாரமாக இருக்கும். ஆகவே பாத்ர தானம் கிட்டுவது அரிது. தேசகால தானங்களில் பழகி நிலைத்த மஹான்களுக்குத்தான் கிட்டும்.

இக்காலத்திய நாகரீகத்தில் அழுந்தியுள்ளவர்கள் பார்ப்பனனுக்குக் கொடுப்பானேன்; தகுந்தவர்கள் எந்த ஜாதியிலிருந்தாலும் கொடுக்கலாம் என்று குதர்க்கம் பேசுவர். கூடியவரையில் நல்ல பிராமணனை விசாரித்துக் கொடுக்கவேண்டியதுதான் என்பது சாஸ்திரங்களின் துணிபு. ஆனால் இதையே முக்யமாகக் கொண்டுவிட்டால் முடிவில்லாமலே போய்விடும். நல்லவன் என்று கண்டவனுக்குத் தானம் கொடுத்தபின்னர். அவன் துர்க்குணம் வெளியானால் மறுபடி அவன் கையிலிருந்து கொடுத்த தானத்தைப் பிடுங்கிவிடவேண்டும் என்று கூடச் சொல்லவேண்டிவரும். ப்ராஹ்மணரிடம் தவிர வேறு எங்கும் தானம் கொடுக்கச். சாஸ்திரமில்லை: போஸ்ட்மாஸ்டர் தவிர மற்றவரிடம் மணியார்டர் பணம்கொடுக்க சட்டமில்லாததுபோல. போஸ்ட் மாஸ்டர் லஞ்சம் வாங்குபவனும் திருடுபவனுமாகவிருந்தால் மேலதிகாரிகள்வழி தண்டனை வரவேண்டும், வரும்வரை பணம் அவனிடமே எப்படிச் செலுத்தப்படவேண்டுமோ, அப்படி ப்ராஹ்மணர் குணதோஷங்களை ஒரு பொருட்டாகக் கொண்டு கொடாமலிருப்பதே, தானம் கொடுப்போருக்கு அழகல்ல. அவர்களை தண்டிப்பது ஈசன் பாரம்.

இக்காலத்திய ஸமூகதானம் இங்கு கவனிக்கவேண்டியது. பரோபகாரப் பொதுஸங்கங்களான வைத்யசாலை, பாடசாலை, கைத்தொழிற் சாலை இவைகளுக்குப் பணத்தை மொத்தமாகக் கொடுத்து விட்டு பெரிய தானம் செய்துவிட்டதாக இறுமாந்திருப்பவர் அதிகப்பட்டுக்கொண்டே வருகின்றனர். இப்பொழுது இதில் சற்றேறக்குறைய எல்லா தானங்களும் அரசன் செய்யவேண்டியவை. இவைகளில் சிப்பந்தி விஷயங்களில் முழுகிப்போனபணம்போக சிறுபாகந்தான் கோரினவரைச் சென்று எட்டும். இவைகளுள் முன்காலத்திய ஆலயப்ரதிஷ்டை வேத பாடசாலை இவைகளைத்தான் கூசாது விரும்பக்கூடிய தானமாக எண்ணிச் செய்யலாம் எல்லோரும். மற்ற நாகரீகஸமூகதானங்கள்

(இதன் தொடர்ச்சி 189-ம் பக்கம்)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவீ கங்கணம்

### அத்யாயம்-7

### தர்பார் மண்டபம்

மனோஹரமாய் மந்தமாருதம் வீசிக்கொண்டிருக்கும் மாரிகாலத்தில் மப்பு மந்தாரமின்றி ஒரேநீலநிறமாயிருக்கும் ஆகாயத்தை இன்றைக்கெல்லாம் சலிக்காமல் பார்த்துக்கொண்டிருக்கலாம். நகர்ப்புறங்களிலிருக்கும் கூடகோபுர மாடமாளிகைகளின்மீதும், நாட்டுப் புறங்களிலிருக்கும் நெல்பயிர், பசும்புல்தரை முதலியவைகளின்மீதும் ஸூர்யனுடைய பொற்கிரணங்கள் விழ்வதின் ஆச்சர்யமே ஆச்சர்யம். ரமணியமான அன்றைய தினங் காலை, நரேந்த்ரனும் கஜபதி ஸிங்கும் அழகிய ஆக்ரா நகரத்தின் அகன்ற வீதிகளின் வழியாய் குதிரையேறிச் சென்றனர். அந்த ராஜ நகரம், அன்றைய தினம் அதிக கம்பீரமாய் விளங்கியது. முதன் முதலில் டில்லி நகரத்தைக் கட்டியவர் ஷாஜஹான். அதைப்போல் முதன் முதலில் ஆக்ரா நகரத்தை நிர்மாணித்தவர் அக்பர் மஹா சக்ரவர்த்தியாவர். மொகலாய அரசர்கள் கட்டுவித்த கட்டடங்கள்தான் இன்றைக்கும் உலகத்திலுள்ள புராதன கட்டடங்களுளெல்லாம் சிறந்து விளங்குவன. இவ்வளவு அழியாப் புகழ் எய்திய கோரிகளையும், மசூதிகளையும், மாளிகைகளையும் கட்டுவிக்கத் தொடங்கியவர் அக்பரே. ஆக்ரா, அல்லஹாபாத் முதலிய பட்டணங்களின் கோட்டைகளையும் அவற்றின் சாதுர்ய அமைப்பையும் நுட்பமாய்க் கவனிப்பவர்கள் அனைவருக்கும் அக்பருடைய அரிய ஸாமர்த்யமும், ராணுவத் திறமையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் விளங்கும். எற்றவிடங்களில் கோட்டை கொத்தளங்களை மதியூஹமாய் அமைக்கும் ஆற்றல் வேறெவருக்குண்டு? அவருக்குப் பின்னர் அவருடைய பேரன் ஷாஜஹான் காலத்தில் மிகவும் ச்ரேஷ்டமான கட்டடங்கள் இரண்டொன்று கட்டப்பட்டன. அவைகளுள் ஒன்றாகிய தாஜ்மஹாலைச் சிற்ப சாஸ்த்ர பண்டிதர்கள் உலகத்திலுள்ள ஒன்பது விநோதங்களுள் ஒன்றெனக்கருதுகிறார்கள்.

இக்காலத்தில் போலவே, பதினாறும் நூற்றாண்டின் கடைசி பாகத்திலும் ஆக்ராவில் ஜனங்கள் அபரிமிதமாய் வஸித்துக்கொண்டிருந்தனர். ஆனால் கஜபதிஸிங் தன் தோழனுடன் அந்நகரத்துக்கு வெளிப்புறத்திலிருந்து ஆக்ராவைப் பார்க்கும்போது அது ஒரு க்ராமம்போலத் தோன்றியது; ஒரு பெரிய பட்டணமாகவே தோற்றவில்லை. உஷ்ண ப்ரதேசங்களுக்குரிய புல்பூண்டு, செடிகொடிகள் வளமாய்ப் பயிராயிருக்கும். நந்தவனங்களுக்குள்ளிருந்த வீடுகளில் சிற்றரசர்கள் ஜமீன்தாரர்கள் மிராசுதாரர்கள் முதலிய ப்ரபுக்கள் வஸித்திருந்தனர். அடர்ந்த காடுபோல் பச்சை நிறமாயிருந்த வ்ருக்ஷ ராசிகளுக்கிடையில் ஆங்காங்கு சிற்சிலவிடங்களில் தனலக்ஷ்மி வாஸம்புரியும் அரண்மனைகள் பல செறிந்துகிடந்தன.

குதிரைவீரர்கள் தாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டுப் பெயர்ந்து நகரத்துக்குள் ப்ரவேசித்தார்கள். முன்னர்தோன்றிய ஸௌந்தர்ய காட்சிகளெல்லாம் வரவர மறைந்துவிட்டன. அக்காட்சிகளுக்குப் பதிலாய் ஜனங்கள் கஜகஜவென்று நிறைந்திருந்த தெருக்களும் சந்துகளுமே கண்ணுக்குத் தென்பட்டன. வீடுகள் அநேகமாய்க் கூரைவீடுகள்தான்; தட்டோடு வீடுகள் மிகவும் சொற்பமே. சில்லறை வர்த்தக வ்யாபாரங்கள் செய்து ஜீவித்துவரும் ஸாமாந்ய மனிதர்களுடன் எராளமான பேர்

---

எல்லாம் தம்நயம் கருதுவனவாகத்தான் முடியும். இவைகள் விஷயமும் சாஸ்திரங்களில் வரையறுக்கப்பட்டிருக்கிறபடியால், அவைகளின்படி நடத்தலாம். ஆகவே, கீதையில் முன்காட்டிய கருத்துக்கள் அடங்கியதும் பகவானால் ஸாத்விகதானம் என்று காட்டப்பட்டதுமான தானத்தை விரும்பு, மற்றைய ராஜஸ தாமஸ தானங்களை விட்டு விலகு, என்பதுதான் இந்த ஸூத்ரத்தில் அடங்கியுள்ள திரண்ட பொருள்.

வீரர்களும் தங்களுடைய பெண்டு பிள்ளை பரிவார ஸஹிதமாய்க் கூரைவீடுகளில் குடியிருந்தனர். அங்கங்கே தெருக்களில் ஒரு கோணியைப் பரப்பி மொத்தம் ஸுமார் நாலணு விலைக்கு மேல்படாத தினுஸுகளை வைத்து பேரம் செய்து கொண்டிருந்தார்கள் சில எளிய ஸ்த்ரீகள். பழக்கடைக்காரர்கள் காபூல், ஆப்கானிஸ்தானம் முதலிய மலை ப்ராந்த்யங்களில் உற்பத்தியாகும் பலவித பழவர்க்கங்களை வெகு ஒழுங்காய் அடுக்கி வைத்திருந்தனர். தெருவில் போகிறவர்களுக்குத் தெரியும்படி வைத்திருந்த மிட்டாய்களின்மீது ஈக்கள் மொய்ப்பதைக் கவனியாமல் பணத்தையே பெரிதாக நினைத்து வ்யாபாரம் செய்துகொண்டிருக்கும் கடைகளில் சிறுவர்கள் கூட்டங்கூட்டமாய்க் கூடியிருந்தார்கள். தெருவோரங்களில் அநேக ஸ்த்ரீகள் ஆட்டிறைச்சியைப் பொரியல் செய்து விற்றுக்கொண்டிந்தனர்.

ஸூர்யன் உதித்து இரண்டுநாழிகையாகவில்லை. காய்கறி மார்க்கெட்டிலும் அந்நிய பதார்த்தங்கள் விற்குமிடங்களிலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். இந்தக் கடைகளுக்குப் போய்வரும் வழிகளில் வண்டிவந்து விட்டால் ஜனங்கள் அக்கம்பக்கத்து வீடுகளில்தான் ஏறிக்கொள்ளவேண்டும்; அவ்வளவு விசாலமான தெருக்கள். நரேந்த்ரன் வங்காளத்தில் பார்த்திருக்கும் கடைத்தெருவுகளுக்கும் இவ்வூர் கடைத்தெருவுகளுக்கும் எவ்வளவோ வித்யாஸமிருந்தது. நீர்வளம் நிலவளம் ஸம்பூர்ணமாயிருந்த வங்காள நாட்டில் செழிப்பாய் உற்பத்தியாகும் காய்கறிகளில் கால்பங்குகூட ஆக்ராகடைத் தெருவிலில்லை. கீழ் ப்ரதேசங்களிலுள்ள காறுகளிலும், ஓடைகளிலும், நதிகளிலும் அகப்படும் மீன்களில் அரைப்பாகம் இராது யமுனைநதியில் அகப்படுவன. வங்க நாட்டில் கோழி, வாத்து முதலியவை எதேஷ்டமாய் அகப்படும். ஆக்ரா நகரத்துக் கடைத்தெருவிலோ காடை கவுதாரி, கோழி முதலியவைகள் அதிகமாய்க் காணும்.

ஜனநெருக்கமான இத்தெருக்களைக் கடந்து இரண்டு குதிரைவீரர்களும், நகரத்தின் நடுமத்தியில் செல்லும் விசாலமான ராஜ வீதிகளிலொன்றை யடைந்தனர். அத்தெருவில் மிகப்பெரிய கட்டடங்கள் பல காணப்பட்டன. ப்ரதிவீட்டிலும் மாடித்தாழ்வாரமும், வாசற்படியும், தெருத்திண்ணையும் அதிக கம்பீரமாய் விளங்கிக்கொண்டிருந்தன. அவ்வீதியில் வஸிப்பவர்களெல்லாம் வெகு தனிகர்கள். வெளியூர் வர்த்தகர்கள் அவ்விடத்தில் பட்டு வஸ்த்ரங்கள், கம்பளித்துணி முதலிய விலையுயர்ந்த ஆடைகள் விற்றுக்கொண்டிருந்தனர். கைதேர்ந்த தட்டார்கள், பார்ப்பவர்கள் ப்ரமித்து நிற்கும்படியான அழகிய சித்ர வேலைப்பாடு அமைந்த அநேக நகைகள் செய்துகொண்டிருந்தார்கள். காசி நகரத்துப் பித்தளை பாத்ரங்களும், டில்லி நகரத்து விலையுயர்ந்த நகைகளும், ஜரிகை வேலைகளும் ராஜஸ்தானத்துப் பளிங்கு ஸாமான்களும்; குஜராத் கத்தி கேடயங்களும், வங்க நாட்டு நேர்த்தியான மஸ்லின் ஆடைகளும் இவை முதலிய தனிகருக்குத் தேவையான வஸ்துக்கள் அத்தெருவில் அதிகமாய் விற்கப்பட்டன. இவ்வித விலையுயர்ந்த ஸாமான்களை வாங்க யோக்யதையிராதவர்கள் பலர் அவற்றைக் கண்டாவது களிக்கலாமென்று அத்தெருவுக்கு வந்துகொண்டிருந்தனர். வட இந்தியாவிலும் அண்டை அயல் நாடுகளிலும் செய்யப்படும் ஸகலவித பொருள்களும் ஆக்ரா கடைத்தெருவுக்கு வந்துவிடும். நானுவித கைத்தொழில்களையும், தொழில்காரர்களையும் அன்புடன் ஆதரித்துவந்த அக்பர் மகிபனின் ப்ரஜைகள் யாவரும் வாயார வாழ்த்தினர்கள்.

இன்னும் இதர வீதிகளிலுள்ள கடைகளிலும், மண்டி, மளிகைகளிலும், பாரஸீகம், தார்த்தரி முதலிய அந்நிய நாட்டு வ்யாபாரிகள் வர்த்தகஞ் செய்துகொண்டிருந்தார்கள். ஐரோப்ய வ்யாபாரிகளும் ஆக்ராவில் குடியிருந்தனர். ராஜநகராகிய ஆக்ராவில் வஸிக்க கிறிஸ்தவர்களுக்கு அநுமதி கொடுத்ததுமல்லாமல், அவர்களை வரவழைத்து வ்யாபாரஞ் செய்யச்சொன்ன அக்பர் வள்ளலவர்களுடைய ஆதரவின்கீழ் போர்த்துகேசிய கிறிஸ்தவர்கள் ஓர் ஆலயங்கட்டி, அதில் இருபது முப்பது கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு ரஹஸ்யமாய்ப் பாடஞ்சொல்லிக் கொடுத்துவந்தார்கள். இவர்களைப் பார்த்து

டச்சுக்காரர்களும் ஆக்ராவுக்கு வந்து ஒரு வ்யாபாரஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டு ஸ்வல்ப வர்த்தகஞ் செய்துவந்தனர்.

த்ரவ்யம் புரளும் கடைகளையும் கடைத்தெருக்களையும் கடந்து, ப்ரயாணிகள், வழிப்போக்கர், அந்நிய நாட்டு வர்த்தக வ்யாபாரிகள் இவர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்துக் கட்டப்பட்டிருக்கும் ஸத்ரங்களையும், முஸ்தாபரிகளையும் தாண்டிக் கஜபதியும் நரேந்த்ரனும் கடைசியாகக் கோட்டை வாயிலுக்கு எதிரேயிருந்த விசாலமான மைதானம் வந்து சேர்ந்தார்கள். செந்நிறமான மணற்கற்களால் எழுப்பப்பட்டிருக்கும் உந்நதமான மதிற்சுவர்களின் வலிவையும், அழகையும், அநேக அரண்மனைகளையும் நந்தவனங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நின்றகோட்டையின் அரியகாட்சிகளையும் இப்போது மறுபடியும் ஒருமுறை கண்டு நரேந்த்ரன் அக்பரது அரிய ஸாமர்த்யத்தையும் அபூர்வ வல்லமையையும் சிலாகித்து நின்றான். யமுனையாற்றுப் பக்கம் தவிர மற்ற எல்லாப் பக்கங்களிலும் ஆழமான அகழிகள் கற்கட்டடத்தால் அமைக்கப்பட்டிருந்தன. ஜலம் ஸமர்த்தியாயிருந்த அவ்வகழிகளும் கோட்டையின் மதிற்சுவர்களுமே ராஜமாளிகைகளை நகரத்தினின்றும் பிரிப்பவை.

சக்ரவர்த்தியவர்களுடைய ராஜபுத்ரப்படைவிரர்கள் உருவின கத்தி உருவினபடியே மைதானத்தில் நின்று கோட்டைவாயிலைப் பாதுகாத்தனர். ப்ரதிதினமுங் காலையில் ராணுவக் குதிரைகள் இம்மைதானத்தில் பழக்கப்படும். அவற்றைப் பரீக்ஷிக்கும்பொருட்டு, ப்ரதம ஸேனாதிபதி தினந்தோறும் இவ்விடம் வருவார்.

நாலாதிக்குகளிலிருந்தும் ஜனங்கள் ஸமுத்ர அலைகள்போல் கும்பல் கும்பலாய் வந்துகொண்டிருந்தனர். நகரத்தின் நடுமத்தியாகிய இந்தக் கோட்டை மைதானத்தில் கண்கட்டி வித்தைக்காரன், யூனானி வைத்யன், ஜோதிஷ நிபுணர்கள், கரடி பழக்குவோன், குரங்காட்டி முதலியவர்கள் தங்கள் வேடிக்கைகளால் ஜனங்களை ஸந்தோஷிப்பித்துப் பணம் பறித்துக்கொண்டு செல்வார்கள்.

ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடும் இந்த இடத்தில் பலசரக்குக் கடைகளும், பொம்மை ஸாமான் கடைகளும், முக்கியமாய் மிட்டாய்க் கடைகளுமே அதிகமாய் வ்ருத்தியாய்விட்டன. ஸ்திரீகளும், சிறுவர்களும் இந்தக் கடைக்காரர்களைத் தவறாமல் ஆதரித்துவந்தார்கள். ப்ரபுக்கள் பல்லக்குகளிலும் குதிரைகளின்மீதும் ஏறிக்கொண்டு தங்களுடைய பரிவாரங்களுடன் ஜனங்கள் ஏகமாய்க் கூடியிருந்த இந்த மைதானத்தின் வழியாய் அதிக டம்பமாய்ச் செல்வார்கள். சக்ரவர்த்தி யவர்களுடைய முகமலரை ஒருமுறை இருமுறை தர்சித்து த்ருப்தியடையாதபடி அவ்வளவு வாத்ஸல்யம் அவரிடம் வைத்திருந்த அவருடைய ப்ரஜைகள் ப்ரதிதினமும் இவ்வழியாய் அரண்மனைக்குச்செல்வார்கள். நமது போர்விரர்கள் இருவரும் இக்கோட்டை மைதானத்தைக் கடந்து பலமாய்க் காவல் புரியப்படும் கோட்டைவாயிலுக்குள் நுழைந்தனர். கோட்டையி னுட்புறத்தில், ராஜ்யத்திலுள்ள சிறந்த முஹம்மதிய ப்ரபுக்களும், மன்ஸாப்தாரர்களுமே காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். தெருக்களெல்லாம் அதிவிசாலம். இரண்டு பக்கங்களிலும் உன்னதமான மாடமாளிகைகள். அங்குமிங்கும் சில சிறு கட்டடங்கள். அவ்விடத்தில் அரண்மனைத்தொழிலாளிகள் வஸித்திருந்தனர். பொன், வெள்ளி, ஜரிகைவேலை செய்பவர்களும், தட்டார்களும், சிற்பிகளும், ஜனானா ஸ்த்ரீகளுக்கு வேண்டிய நேர்த்தியான மஸ்லின் ஆடை நெய்பவர்களும், இன்னும் இதரத் தொழிலாளிகளும் காலை முதல் மாலைவரையில் உல்லாஸமாய்த் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டிருந்தார்கள். அரண்மனைக்கு வேண்டிய சரக்குகளெல்லாம் இவர்கள்தான் செய்துகொடுக்கவேண்டும். இத்தொழிலாளிகள் ஒவ்வொருவரும் தத்தம் வேலையில் ஒப்புயர்வற்றவர்கள். சக்ரவர்த்தியவர்கள் இவர்களைக் கண்ணாகைப் பரிபாலித்துவந்தனர். அரண்மனை வேலைசெய்து ஒழிந்த வேளைகளில் இவர்கள் ஆக்ராநகரத்து ப்ரபுக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் வேண்டிய ஸாமான்கள் செய்துகொடுப்பார்கள்.

வழியில் இருபக்கங்களிலுமுள்ள அழகிய கட்டடங்களைப் பார்த்துக்கொண்டே நரேந்த்ரன் ஆம்பர் அரண்மனை வந்துசேர்ந்தான். உடனே கஜபதி அவனைப் பார்த்து, "அப்பா, நீபடுகிடையாயிருந்தபோது உனக்கு வைத்யம்செய்து உன்னை ஆதரித்துவந்த புண்யாத்மாக்களின் வீடு அல்லவோ இது! அரண்மனை வைத்யர்களுடைய சிகிச்சையில்லாவிட்டால் நீ இந்நேரம் யமன் பட்டணம் சென்றிருப்பாயன்றோ? விரநகரத்து அதிபதி பாடு அன்றுடன் முடிந்துவிட்டிராதோ? இன்றையதினம் இங்கே நீ கஜபதியுடன் நின்றிருப்பாயோ?" என்றார்.

ஸூர்யனுடைய ஒளியால் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அந்த மாளிகையின் ஜன்னலை உற்று நோக்கும்போது, நரேந்த்ரனுக்கு வைத்யர்களுடைய ஞாபகமா இருந்தது? அவன் அவர்களைப் பற்றிச் சிறிதேனும் நினைத்துக்கொண்டிருக்கவில்லை. அவன் எண்ணிய எண்ணமும் வேறு; அவ்விடம் அவன் நாடிய பொருளும் வேறு. கோட்டைக்குள் தான் பூர்வகாலத்தில் புரிந்த ஸாஹஸமும், கண்ட காட்சிகளும், நேர்ந்த ஆபத்துகளும் ஒன்றன்பின் ஒன்றாய் அவனுடைய மனதில் தோன்றின. அவன் சஞ்சல சித்தனானான்; உடல் முழுவதும்ஒருதரம் நடுங்கிற்று.முகம் வெளுத்தது. சற்றுக்கெல்லாம் கண்ணினின்றும் ஒரு நீர்த்துளி விழுந்தது. இவற்றையெல்லாம் அவன் தன் நண்பன் பாராதபடி சாதுர்யமாய் மறைத்துக்கொண்டான். கஜபதிக்குத் தெரியாமல் அவன் பலமுறை திரும்பித்திரும்பி அந்த ஜன்னலையே பார்த்துக்கொண்டு சென்றான். அவ்வாறு செய்ததற்குக் காரணம் யாதென்பதை நாம் இங்கு குறிக்கவேண்டியது அநாவச்யம். எத்தனை தரம்தான் பார்த்தபோதிலும், நரேந்த்ரன் நாடியதொன்றும்—வளையலிட்ட கையோ, வெண்பட்டுக் கைக்குட்டையோ—அவ்விடம் காணப்பட்ட பாடில்லை. அம்மாளிகையில் மனிதஸஞ்சாரமே இல்லையோவென அவன் ஸந்தேஹப்படலானான்.

நகர்காணீவினின்று பறையொலி சப்தம் கேட்டது. சக்ரவர்த்தியவர்கள் ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்துவிட்டாரென்று உணர்ந்த நரேந்த்ரன், திரும்பித்திரும்பி ஜன்னலைப் பார்த்துக்கொண்டே போவதையொழித்து விரைவாய்ச் சென்றான்.

தங்களுடைய அன்பார்ந்த தந்தையாராகிய ராஜாதிராஜ கம்பீரருடைய திருமுகத்தைக்கண்டு ஆனந்திக்க ப்ரஜைகள் அனைவரும் ஆற்று வெள்ளத்தைப்போல் புரண்டோடினார்கள். கஜபதியும், நரேந்த்ரனும் குதிரைகளைத் துரிதப்படுத்திச் சீக்ரமாகக் கொலுமண்டபம்போய்ச் சேர்ந்தார்கள்.

சக்ரவர்த்தியவர்கள் ப்ரதிதினமும் தம் குடிகளுக்குப் பேட்டி கொடுப்பவராயினும், ஆமத்நகரத்தை ஜயித்துத் திரும்பியபின் ஆக்ராவில் நடக்கும் இந்த தர்பார்தான் முதலாவதாகையால், நாட்டிலுள்ள ப்ரபுக்கள், ப்ரதானிகள், ஸேனாதிபதிகள், சிற்றரசர்கள் யாவரும் கொலுமண்டபத்தில் கூடியிருந்தனர். ஷாஜஹான் வீற்றிருக்கப்போகிற அவ்வளவு சிறந்த மயிலாஸனத்தையொத்த சிறந்த ஆஸனத்தின் மீதில்லாவிட்டாலும், தமது அபூர்வ ஸாமர்த்யத்தாலும் வல்லமையாலும் ஒரு பெரியராஜ்யத்தை ஜயித்து அதனைத் தன் தர்மபரிபாலனத்தின் கீழ்க் கொண்டுவந்த ஒரு யுத்தவீரருக்கேற்ற ஸிம்ஹாஸனத்தில் அக்பர் வள்ளல் அமர்ந்திருந்தார். உயர்ந்து கம்பீரமாயிருந்த அவர் உருவமும், சிறிதே கறுத்திருந்த அவர் தேகமும், அவருடைய இருண்ட நுட்பமான விழிகளும், விசாலமான அவரது நெற்றியும், பகைவரைப் பறக்கடிக்கும் அவருடைய பருத்த புஜங்களும் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தின. ஜன்மவிரோதிகளுக்கும் அவரைக் கண்டவுடன் அவரிடத்தில் ஒரு பூஜ்யதை யுண்டாயிற்று. கோரமான யுத்தகளங்கள் பலவற்றில் அவருக்கு ஜயத்தை உண்டுபண்ணிய அவருடைய கைகளின் அழகே அழகு. பால்யம் முதல் போர்க்களங்களிலேயே காலங் கழித்து வந்ததனாலும், வயோதிகத்தினாலும், அவருடைய தேகம் கொஞ்சம வலிவு குறைந்திருந்தது.அநேக சண்டைகளில் முன்நின்று போர்புரிந்தவராயினும், அவர் ஒருபோதும் ஜீவஹிம்ஸை என்பதே செய்தறியார்; இன்னொருவர் ஜீவஹிம்ஸை செய்வதையும் பார்த்து அவர் ஸஹிக்கமாட்டார். எடுத்த காரி

யத்தை முடிப்பதில் இணையற்ற திடசித்தராகிய அவரிடம் ஓர் அரசனுக்குரிய குணங்கள், வல்லமைகள் யாவும் ஒருங்கே அமைந்திருந்தன. அவர் மஹா தயாளு. மனப்பூர்த்தியாய் ஒருவருக்கும் தீங்கு இழைக்கமாட்டார். பொறுமையையே ஆபரணமாக அணிந்தவர். தஞ்சமென் றடுத்த பேரைத் தப்பாது ரக்ஷிப்பவர். ஜன்ம விரோதிகளையும் சாந்தப்படுத்தித் தன் வசப்படுத்தும் ஆற்றலுடையவர். அவர் வென்ற பகையரசர்கள் யாவரும் அவரைத் தம் ஆப்தமித்ரர்களாக பாவித்துவந்தார்கள். எழுதப்படிக்க அவர் அதிகமாய் அறியாராயினும், ஸமஸ்தானத்திலுள்ள தத்வ சாஸ்திரிகளுடைய ஸித்தாந்தங்களையும், தர்க்க சாஸ்திரிகளுடைய ஸம்வாதங்களையும், பல்வேறுமதாபிமானிகளுடைய கொள்கைகளையும், கவிகளுடைய இனிய பாடல்களையும், கவனமாகக் கேட்டு எளிதில் யாவற்றையும் க்ரஹித்துக் கொண்டு அந்நிபுணர்களுக்குக்கூடத் தெரியாத சில விஷயங்களை உபன்யஸிக்கும் ஸாமர்த்யமுடையவர். தெய்வகடாக்ஷத்தால் உண்டாயிருக்கும் நிகரற்ற புத்திசாதுர்யத்தோடு, எவ்வளவு வருத்தமான தொழிலையும் எளிதில் செய்துமுடிக்கும் வல்லமையும் பொருந்தியவராகிய அவர் தமது அகண்ட ராஜ்யத்தை ஓர் ஒழுங்குபடுத்திச் சீராய்ராஜ்ய பாரஞ்செய்து வந்தாரென்பது சரித்ராசிரியர்கள் யாவரும் அங்கீகரிக்கும் உண்மையே. ராஜ்யவ்யவகாரங்களின் ப்ரதி இலாகாவிலும், அவருடைய மதியூஹத்தைக் காணலாம்.

ஹுமாயூனிடமிருந்து பித்ரார்ஜித சொத்தாய்த் தனக்குக் கிடைத்த ஸ்வல்ப மாகாணங்களை ஆதாரமாகக்கொண்டு, தன் வல்லமையால் வடஇந்தியா முழுவதையும் ஸ்வயார்ஜ்ஜிதமாய் ஸம்பாதித்து, அப்படி ஜயிக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் தனது தர்மபரிபாலனத்தை ஸ்தாபித்த அவருடையஸந்நிதானத்தில் விளங்கிய, அமரிக்கையான யுத்தவீரர்கள், மேன்மையான ராஜதந்திரிகள், ஸமர்த்தரான ஸம்பிரதிகள், நிபுணர்களான வித்வசிரோமணிகள் யாவரும் அரண்மனை ரத்னங்களாவார்கள். பதினாறாம் நூற்றாண்டில், ஸர்வமத ஸஹோதரப்பான்மையுடன் தம் குடிகளைப் பூர்ணமாய் நம்பி அவர்களுடைய சுகத்திற்காகவே ஸ்வயநயமில்லாமல்அரசு புரிந்த சக்ரவர்த்தி அக்பர் ஒருவர்தான்.

ஒருகுடையின் கீழிருந்து வட இந்தியா முழுவதையும்ஆட்சிபுரியும்பெருமைவாய்ந்த மொகலாயதிலகத்தினருகே, நின்றுகொண்டிருந்த அவரது புத்ரராகிய ஸலீம் இளவரசரிடமே ஸபையோருடைய நோக்கமெல்லாஞ் சென்றிருந்தன. அவர் சிலதினங்களுக்கு முன் தம் தகப்பனாருடைய ஆணையை மீறி நடந்த விஷயத்தை அரைகுறையாய் அவர்கள் யாவரும் அறிந்திருந்தனர் போலும்; ஆனால் உண்மையொன்றும் வெளியாகவில்லை. அந்த விஷயத்தைப் பற்றி எவரும் வாய்திறக்கவில்லை. ஸிம்ஹாஸன மேடைக்குச் சற்றுக்கீழே, வெள்ளிக்கம்பளிகளால் தடுக்கப்பட்டிருந்த ஓரிடத்தில் சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள் ஜாகீர்தாரர்கள் முதலிய ப்ரபுக்களும், ப்ரதானிகளும், அயல் நாட்டு தூதர்கள் பலரும் கூடியிருந்தனர். இந்தியாவில் பலதிக்குகளில் தங்களுடைய வல்லமையால் பல ஜில்லாக்களை ஜயித்து, அவற்றை நீதியாயும் நியாயமாயும் அரசுபுரிந்துவந்த தளகர்த்தர்களும் அங்கு விஜயஞ்செய்திருந்தார்கள். கொலுமண்டபத்தின் முன், ஸாமான்ய ப்ரஜைகள் தங்களுடைய அன்பார்ந்த அரசருடைய வதநத்தை ஆவலாய்ப்பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

அழகாய் அலங்கரிகப்பட்ட அச்வங்கள் அக்கொலுமண்டபத்தின் முன்னர் அழைத்து வரப்பட்டன. சிங்காரமான அம்பாரிகளிடப்பெற்ற யானைகள், தங்களுடைய பாரிசரீரங்களுடன் மெதுவாய் அடிமேலடி வைத்துக் கம்பீரமாய் நடந்துவந்து ஸிம்ஹாஸனத்துக்கெதிரில் நின்று, அரசருக்கு வந்தனஞ் செய்வனபோல் முழங்காலை மடித்துத் துதிக்கையை மேலே தூக்கின. குதிரைகளும்யானைகளும் சென்றபின், மற்றுமுள்ள சில ம்ருகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. பழக்கப்பட்ட கலைமான்கள், நீண்ட கொம்புகளையுடைய வங்காளத்துக் காட்டெருமைகள், சிறுத்தைப் புலிகள், வங்காளத்துப் பெரும்புலிகள், நானாவித வேட்டை நாய்கள் முதலியன அநேக ஆச்

சர்யமான செய்கைகள் புரிந்தன. கடைசியாக, ஸமஸ்தானத்து ப்ரபுக்கள் சிலர், இருப்புக் கவசம், சித்ர ஆடைகள் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட துரகங்களின்மீது ஊர்ந்து சென்றனர்கள்.

மறுபடியும் நகர்காவலிலிருந்து பறையொலி கேட்டது. அன்றையதினம் கொலுமண்டபத்தில் நடைபெற வேண்டிய கார்யங்கள் துவக்கமாய்விட்டன என்றுயாவரும் உணர்ந்தார்கள். மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் யாவரும் குதூஹலத்தால் ஆரவாரஞ்செய்ய, ராஜாதிராஜ கம்பீரர் தமது இனிய குரலுடன், "ஸாலீம் இளவரசே, இந்த அகண்ட ராஜ்யத்து, வருங்கால அதிபதியே, எனது செல்வக்குழந்தையே, தவப் புத்ரனே," என்றழைத்துப் பேசத்தொடங்கியவுடன்ஸாலிம் ராஜகுமாரர்வணக்கமாய்த் தலைகுனிந்து அவரது ஆக்ஞைக்கு உட்படத் தயாராய் எழுந்து நின்றார். "நான் உன்னைப் பால்யமுதல் அன்பாய் வளர்த்துவந்தேன். அரசர்களுக்குரிய கலைகள் யாவற்றிலும் உன்னைப் பயிற்றுவித்தேன். சீக்ரத்தில் இன்னும் சில வருஷங்களுக் கெல்லாம் உன்மீது விழப்போகும் பாரத்தைச் சுமக்க நீ வல்லவனென் றெண்ணி நான் இதுகாறும் அகமகிழ்ந்திருந்தேன். எப்போதும் பால்யர்கள் கொஞ்சந் துடுக்கானவர்கள் தான்; யௌவனத்திற்குரிய அவாக்கள் அநேகம் சில வேளைகளில் தீமையாய் முடிகின்றன; ஆனால், பச்சாத்தாபம் குற்றத்தின் பழியைக் குறைத்துவிடுகிறது. பிள்ளையினிடம் அன்புடைய தகப்பனர் தன்னுடைய அன்பின் மிகுதியால் தன் மகன் செய் பாதகங்களை அறவே மறந்துவிடுகிறார்; போனதெல்லாம் போகட்டும்; இனியாவது, உன் அந்தஸ்துக்கேற்ப உன் கடமைகளைத் தோஷமின்றிச் செய்து முடிப்பாயாக. உனது விரதீரத்துக்கும் அஞ்சாநெஞ்சத்துக்கும் தக்கவாறு நீதியாயும் ந்யாயமாயும் இருப்பாயாக. ஸர்வத்துக்கும் கர்த்தாவாய் விளங்குகின்ற ஒன்றான அந்த ஈச்வரனே நினக்கு ஸன்மார்க்கத்தை உபதேசஞ்செய்து நின்னை நல்வழியில் பயற்றிவருவாராக. நீ இதுகாறும் செய்தனவெல்லாம் போகட்டும். இனி அதைப்பற்றி யொன்றும் பேசவேண்டாம். இந்தா, இந்த ராஜ உடைகளையும், ராஜவம்சத்துக் கத்தியையும் ஏற்றுக்கொண்டு, ஒரு தரம் நேசிக்கத்தொடங்கிவிட்டால் திரும்ப என்றைக்கும் அதினின்றும் மாறாத தன்மையராகிய உனது தந்தையின் பக்கம் உட்கார்" எனச் சொல்லி முடித்தார். தகப்பனர் வாயினின்று பிறந்த மொழிகளைக்கேட்டு, அவர் கொடுத்த ஆடைகளையும் கத்தியையும் பெற்றுக்கொண்டு அவரைப் பணிந்து, அவருக்கு வலது பக்கத்திலிருந்த ஓராஸனத்தில் அமர்ந்தார் ஸாலிம். செய்த குற்றத்தை பொப்புக்கொண்டு அதற்காகப் பச்சாதாபப்படும் தன் குமாரனிடம், தந்தையும், அரசர்க்கெல்லாம் அரசருமாகிய அக்பர் வள்ளல் காட்டிய பொறுமையையும் மன்னிப்பையும் கண்டு வியப்புற்று, அங்குள்ள தநிகர் தரித்திரர், வலியோர் எளியோர், வாலிபர் வயோதிகர், கீழோர் மேலோர், ஒருவர் தவறாமல் யாவரும் ஒருங்கே மங்களகோஷஞ் செய்தனர்.

ராஜவம்சத்திற் பிறந்த இதர ராஜகுமாரர்களுக்கும் அவரவர்கள் அந்தஸ்துக்கேற்றவாறு பரிசளிக்கப்பட்டன. கடைசியில் ராஜா மான்ஸிங் அவர்களுக்கு மரியாதைசெய்யும் ஸமயம் வந்தது. அங்குள்ளோர் யாவரும் ஆநந்தக்கடலில் ஆழ்கினவர்களாய், கம்பீரமாய்ச் சக்ரவர்த்தியவர்களுக்கு எதிரிடையில் நின்றுகொண்டிருந்த, வீரதீரமும் அஞ்சாநெஞ்சமும், போர்முகத்தில் சலியாத ஊக்கமும் படைத்த வீரஸிம்ஹத்தையே கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மொகலாய அரசர், அந்த தீரபுருஷனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்றார்:—

"அழகிய ஆம்பர் நாட்டு அதிபதியே, உமது நிகரற்ற அந்தஸ்திற்கும், நீர் பால்யம் முதல் இதுவரை ஸ்வநயம் சிறிதும் பாராட்டாமல், இந்தியர்கள் உய்யும்பொருட்டு நமக்கும், நமது ஹிந்து, முஸல்மான் பிரஜைகளுக்கும் செய்திருக்கும் பேருபகாரத்துக்கேற்பவும், ஒப்புயர்வற்ற உமது சௌர்யத்துக்கேற்பவும், உமது ஸமயோசிதமதிநுஹத்துக்கேற்பவும், மரியாதை செய்வது எம்மால் ஸாத்யமன்று. நமது ஸமஸ்தான ஸேனாதிபதிகளுள் நமது மாளிகைக்கு அத்திப்பூத்

தாற்போல் விஜயஞ் செய்பவர் நீர் ஒருவரேயன்றோ? உம்மைப்போல் உலகெங்கும் ப்ரஸித்திபெற்ற வீரர் நமது ராணுவத்தில் யாவருளார்? உம்முடைய பெயர் நமது நாட்டில் மாத்ரமன்று; அயல் நாடுகளிலும் பரவியிருக்கின்றது. உமது நாமதேயத்தைக் கேட்டு நடுங்காத பகைவர் உண்டோ? ஆப்கானிஸ்தானத்திலும், காபூலிஸ்தானத்திலும் எமது அரசாட்சியை நிலைநிறுத்தியவரும், அஞ்சாநெஞ்சம் படைத்த ஆப்கானிய வீரர்களிடமிருந்து ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றியவரும் நீரே. நீர் செல்லும் யுத்தங்களுக்கெல்லாம் உமது ஸ்நேஹிதை விஜயலக்ஷ்மி விஜயஞ்செய்கிறாள் போதும்."

"வேந்தர்க்கெல்லாம் வேந்தே, தங்களைப்போல் அவ்வளவு சாதுர்யமாய்ப்பேச அடியேனுக்கு ஸாமர்த்யமில்லையாயினும், நான் தங்களுக்கு என்றைக்கும் ஊழியனாக உழைக்கக்கடமைப்பட்டவன். விஜயவீரசிகாமணியே, அடியேன் இப்போது வைத்திருப்பது தங்களுடைய கத்திதான். நீர்வளம், நிலவளம் முதலியனயாவும் ஸம்பூர்ணமாயுள்ள வங்கநாட்டை ஜயித்துத் தங்களுடைய ராஜ்யத்துடன்சேர்த்தவன் அடியேனல்லேன். என்னைக் காட்டிலும் ஸர்வாம்சங்களிலும் சிறந்த சுத்தவீரராகிய ஒருவர்தான் தங்களுக்கும், அடியேனைப்போல இங்கே தங்களுடைய தரிசனம்பண்ண வந்திருப்பவர்களுக்கும் அப்பேருதவியைச்செய்தவராவர். எனக்கு முன், வீரஸ்வர்க்கம் எய்திய எனது குருவானவர் சென்ற வழியிலேயே நானுஞ் செல்கிறேன்" என்று பணிவாய் மொழிந்தார் மான்ஸிங்கர்.

இவருடைய மொழிகளைக் கேட்ட சக்ரவர்த்தியவர்கள் சிறிது வ்யஸனமான குரலுடன், "காலஞ்சென்ற ராஜபக்தர்களையும் ஆப்தமித்ரர்களையும் நாம் ஒருபோதும் மறவோம். மிகவும் கஷ்டப்பட்டு இந்த ராஜ்யத்தை யொன்றுசேர்த்து ஸமாதானப்படுத்தி வ்ருத்தி செய்தவராகிய ராஜா தோடர்மல் என்னும் ஸம்ப்ரதி எமது அரண்மனைக்கோர் அணிகலமாய் விளங்கியவர். அவர் தம் வ்ருத்தாப்ய காலத்தில் கங்கையாற்றங்கரைக்குப்போய் வைதிக ஸிஷ்டராய்க் காலங்கழிக்க விரும்பி அங்கு சென்றார். ஆனால் அந்த சிறந்த ராஜதந்த்ரி, அந்த நிகரற்ற ஸம்ப்ரதி யகன்ற அந்நேரத்துக்கெல்லாம், ஸ்தம்பமில்லா மண்டபமாயிற்று நமது ராஜ்யம். உடனே அவர் எமது வேண்டுகோளுக்கிணங்கித் திரும்பிவந்தார். தமது தாய்நாட்டிற்காகவும் ஸஹோதரர்களுக்காகவும் உழைத்துத் தேகவியோகமானார். ஓர் எஜமானர் தன் ஊழியனுக்கு அளிக்கக்கூடிய எவ்விதமான வெகுமதியையும் உபசார வார்த்தைகளையும் பெறக்கூடாத ஸ்திதியில் அவர் இப்போதுஇருக்கிறார். இம்மண்ணுலகை விட்டகன்ற நண்பருக்கு ஒரு சக்ரவர்த்தி செய்யக்கூடிய சிறந்த உபகாரம் யாது? கண்ணீர்தான்" என்று கூறும்போதே, அவருடைய இருவிழிகளினின்றும் நீர் தாரைதாரையாய்ப் பெருகிற்று. ஸபையோரெல்லாம் மௌனமாயிருந்தார்கள். "மான்ஸிங், நம்மாலாகிய வெகுமதியை உமக்கு அளிக்க நான் ஸித்தமாயிருக்கிறேன். பத்ராக்கில் உமது குமாரரின் மேற்பார்வையின் கீழ் நடந்த யுத்தத்தில் நாம் தோல்வியடைந்தவுடன், வீரரத்நமே, என்றைக்கும் ப்ரபலமாய் விளங்கக்கூடிய ஷெர்புரஞ் சண்டையில் நீர்ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றினீர். இதுவரைக்கும் ராஜ வம்சத்தவர்கள் தவிர வேறெவரும் பெறாத ஒரு பதவியை உமக்கு அளிக்க நாம் உத்தேசித்திருக்கிறோம். எழாயிரம் படைவீரர்களுக்குத்தலைவராய்உம்மை நியமித்திருக்கிறோம். இதோ இந்த உடைகளையும், என்றைக்கும் மாறாத எமது நட்பையும் எற்றுக்கொள்ளும்" என்றார் அக்பர். தான் கனவிலும் நினைத்தறியாத அவ்வளவு மரியாதையைத் தன் எஜமானரிடமிருந்து பெற்றுக்கொண்ட மானஸிங்கர் ஆனந்தபரவசமானார். தனது நன்றியறிதலை ஒரு வேளை அவர் வெளியிட்டிருந்தாலுமிருக்கலாம். அது நமக்குத் தெரியாது. ஏனெனில், ஸபையோர்கள் பெருத்த ஆரவாரஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

குதூஹலம் சிறிதே மட்டுப்பட்டவுடன், சக்ரவர்த்தியவர்கள் புன்சிரிப்புடன், "என் அருமை மருமகனே, கங்காநதி ஸமுத்ர ஸங்கமமாகுமிடத்திலிருந்து காபூல் வரைக்கும் உள்ள ப்ராந்தியங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் ஜயித்து, அம்மாகாணங்களிலெல்

லாம் உத்தம அரசாட்சியை நிலைநிறுத்திய ஒரு ஹிந்து ராஜாவைப்பற்றி, நமது நாட்டு சரித்ரம் உள்ளமட்டும் புகழ்ந்துகொண்டிருக்கும்" என்றார்.

அதற்கு, ராஜாமான்ஸிங் ஸ்நேஹபாவமாய், "மாமா, ஹிந்துக்களுக்கும் முஹம்மதியர்களுக்கும் பரஸ்பரம் உள்ள ஸஹோதரப் பான்மையை வ்ருத்திசெய்து, ஹிந்துக்களை அன்பினாலும் ஆதரவினாலும் தன் குடும்பத்துடன் சேர்த்துக்கொள்ளும் அரிய ஸாமர்த்யத்தையுடைய ஒரு மொகலாய சக்ரவர்த்தியையும் ஹிந்துதேச சரித்ரம் ப்ரபலமாய் எடுத்துரைக்கும்" என்று சொல்லிவிட்டு, ராஜா மான்ஸிங்கர் தம்மாஸனத்துக்கு வந்தவுடன், இன்னொரு தளகர்த்தர் அரசர் முன்னிலையில் வந்தார்.

கான்கானாகிய (அதாவது, ப்ரபுக்களுக்கெல்லாம் ப்ரபு) அப்துர் ரஹீம் வந்து அரசர்க்கு வந்தனம்புரிந்தபோது, அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும்,

"மாட்சிமை தங்கிய கான்கானன்!"

"குஜராத்தை ஜயித்தவர்!"

"வீரர்களுக்கெல்லாம் வீரர்!"

"கலைமகள் கருணைபெற்ற கவிஸ்ரேஷ்டர்!"

"கலிகாலக் கர்ணன்!" என்று பலவாறு புகழ்ந்துபேசி மகிழ்வுற்றனர்.

"கனம்பொருந்திய கான்கானன் வரவு நல்வரவாகுக" என்று பேசத்தொடங்கினர் அக்பர். "இத்தனை மாஸகாலம் வெளியே போயிருந்த நீர் நமது ஸமஸ்தானத்துக்கு இப்போது வந்தது நமக்கு அளவிலா ஆநந்தத்தைத் தந்தது. வங்க விஜயராகிய ராஜா மான்ஸிங்கைப்போல், நீரும் குஜராத் மாகாணத்தை ஜயித்தவராவீர். வீரர்களுக்கெல்லாம் வீரரே, உம்மை ஐயாயிர ராணுவவீரர்களுக்குத் தலைவராக்கியிருக்கிறோம். உங்களுக்கு இன்னொரு விஷயத்தில் மரியாதை செய்யவேண்டியிருக்கிறது. உம்முடைய கத்தி துருப்பிடித்து நசித்துப்போனபின்பும், உமது காவ்யங்கள் உலகத்தாரை மகிழ்விக்கும். கொஞ்ச காலத்துக்குமுன் நீர் ஆமத்நகரத்தில் புரிந்த செயல்களை நாம் மெச்சுவதற்கறிகுறியாகக் கொடுக்கும் இந்த உடைகளைப் பெற்றுக்கொள்ளும்."

## விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ஸ்ரீமத் ராமாயணமும், வால்மீகிரிஷியும்**—வால்மீகிரிஷி கி மு 4ம் நூற்றாண்டில் ஸ்ரீமத் ராமாயணத்தை அருளிச் செய்யுமுன் இரண்டு ராமாயணங்கள் இருந்தனவென்று ராய்ஸாஹெப் தினேசசந்த்ரஸேன் என்பவர் கல்கத்தா ஸெனெட் ஹாலில் ப்ரஸங்கித்தார். கி. மு. 1600 வருஷங்களுக்கு முன்னிருந்து வழங்கி வந்த "தசரத ஜாதகம்" என்னும் நூல் கி. மு. 6-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது அதில் ராவணனைப்பற்றியாவது, ஸ்ரீராமர் அவனுடன் போர் புரிந்ததைப்பற்றியாவது ஒன்றும் கூறப்படவில்லையாம். லங்காவதார ஸூத்ரத்தில் ஸீதையை யபகரித்தானென்றாவது, ராமனுடன் போர் புரிந்தானென்றாவது கூறப்படவில்லை. கி.பி. 12-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "ஜயின ராமாயண"த்தில் ராவணன் செய்கைகளைப்பற்றி விஸ்தரித்து ஸ்ரீராமரைப்பற்றி சிறிதே கூறப்பட்டிருக்கிறதென்றும் 12-ம் நூற்றாண்டின் பிறகே இப்பொழுது நாம் அறிந்திருக்கும் ஸ்ரீமத்ராமாயணம் உண்டாயது என்றும் கூறினர்.

**ஆங்கிலேய இம்பீரியல் கான்பரன்ஸூம் இந்தியாவும்.**—ஆங்கிலேய மாகாணங்கள் யாவும் தமக்குள்ளுள்ள விஷயங்களைப்பற்றி யோசிக்கும்படி கூடிய சீக்கிரத்தில் கூடப்போகின்றது. இந்தியாவும், அக்கான்பரன்ஸூக்கு ப்ரதிநிதியொருவரை யனுப்பவேண்டுமென்று வைஸிராய் சபையில் மிஸ்டர் ஷாபி ப்ரேரேபிணை செய்ததின் பேரில், இராஜாங்கத்தார் அப்படியே ப்ரதிநிதி யனுப்பலாமென்று ஒத்துக்கொண்டனர்.

**இந்தியாவில் கண்ணாடி செய்தல்.**—யுத்தத்தினால் ஆஸ்டிரியாவிலிருந்து வரும் கண்ணாடி சிம்னிகள் முதலியவை நின்றுபோய்விட்டன. அப்படி நின்று போனவைகளை இந்தியாவிலேயே செய்யும்படி அம்பாலாவில் ஓர் சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது ஜப்பானியர் ஆறு பேர் வேலை செய்கிறார்கள். நல்ல சிம்னி முதலியவைகள் செய்யப்படுகின்றன வாம் கூடிய சீக்கிரத்தில் வளையல் முதலியவைகளும் செய்யப்படும்

**யுத்தத்தில் ஓர் ஆட்டுக்குட்டியினுதவி:**—பெர்ஸாகிளிர் என்னும் இடாலியப்படைகள் ஆஸ்டிரியப் பீரங்கிப் படைகளோடு யுத்தஞ் செய்கையில் ஓர் ஆட்டுக்குட்டியகப்பட்டது. பெர்ஸாகிளர் வீரன் ஒருவன், அதை அன்புடன் வளர்த்து வந்ததினால் அவனை விட்டுப் பிரியாமலிருந்தது. ஒருநாளிரவு, ஆஸ்ட்ரியப் படைகள், காவலைத்தாண்டி பெர்ஸாகிளிப் படைகளிடம் வந்து விட்டனர். ஆஸ்ட்ரியர்களைக்கண்ட ஆட்டுக்குட்டி பயந்து கத்தவே இத்தாலியர் விழித்து எதிரிகளைத் தாக்கி ஜயமடைந்தனராம்.



மிஸ் எடித் காவேல்

பெல்ஜிய நாட்டின் தலை நகரான ப்ரஸல்ஸ் பட்டணத்தில், யுத்த களத்தில் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்ய, தாதிமார்களைத் தயாரித்துக் கொண்டிருந்தவர். பிரிடிஷ், ப்ரஞ்ச், பெல்ஜியப் போர் வீரர்களை, ப்ரஸல்ஸ் நகரிலிருந்து வெளியேற உதவிபுரிந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஜர்மானியரால், சென்ற அக்டோபர்மீ 12௳, கொல்லப் பெற்றார். தான் உயிரைவிடுமுன், "மனப்பூர்வமாய் என் தேசத்திற்காகவே நான் என் உயிரை விடுகிறேன்" என்று சொன்னார்.